REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மே 8 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN

89

1932 - 2021

தினகரன்


வரு. 89 இல. 108 | May 08, Saturday, 2021 | 16 பக்கங்கள் | 30/-

உங்கள் அபிமான மாத இதழ்
வண்ண வானவில் Vanna Vaanavil கேட்டு வாங்குங்கள்...
மே மாத இதழ்!
வாசிக்க எக்கச்சக்கமான விடயங்கள் கொட்டிக் கிடப்பது வானவில்லில் மட்டுமே!






சீதுவையில் மாபெரும் கொரோனா வைத்தியசாலை 02



கிளிநொச்சியில் 24 பொலிஸாருக்கு கொரோனா 09

கலைக் கதம்பம் சைத்திரியன் 10

டோக்கியோ ஒலிம்பிக்கில் இலங்கையர் 16





கஹதுடுவ முதல் இங்கிரிய வரையான ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் முதற்கட்ட நிர்மாணப் பணிகளை நேற்று (07) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆரம்பித்து வைத்தார். காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக இந்நிகழ்வு அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது.

## நாட்டை ஒருபோதும் முடக்க மாட்டோம்

### பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

கொரோனா தொற்றுக்கு எதிராகப் போராடுவோமே தவிர நாட்டை ஒரு போதும் முடக்கப் போவதில்லை என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுக்கு எதிராகப் போராடுவதோடு பொது மக்களின் பொருளாதாரம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் என அவர் சுட்டிக்காட்டினார்.

கஹதுடுவ முதல் இங்கிரிய வரையான ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் முதற்கட்ட நிர்மாணப் பணிகளை நேற்று ஆரம்பித்து வைக்கும் இணைய வழியான

06

பல்கலைக்கழகங்கள், முன்பள்ளிகள், ரியூஷன்கள் உட்பட

## பாடசாலைகள் அனைத்தும் மறு அறிவித்தல் வரை பூட்டு

### கல்வியமைச்சர் ஜீ.எல். பீரிஸ் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம், சுப்பிரமணியம் நிஷாந்தன்**



நாட்டில் ஏற்பட்டுள்ள தீவிர கொவிட் வைரஸ் பரவல் சூழ்நிலையை கருத்திற்கொண்டு பாடசாலைகள், முன்பள்ளிகள், பிரிவெனாக்கள், மேலதிக வகுப்புக்கள் மற்றும் அனைத்து பல்கலைக்கழகங்களையும் மறு அறிவித்தல்வரை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்

06

உலக சுகாதார ஸ்தாபன தலைவருடன் ஜனாதிபதி பேச்சு;

# ஆறு இலட்சம் "எஸ்ட்ரா செனெகா" பெற ஜனாதிபதி கடும் முயற்சி

### சீன "சைனோபாம்" ஊசிக்கும் WHO விரைவில் அனுமதி என்கிறார்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

### தனது டுவிட்டர் பதிவில் ஜனாதிபதி தெரிவிப்பு

இரண்டாம் கட்டமாக மக்களுக்கு வழங்க வேண்டியுள்ள 06 இலட்சம் எஸ்ட்ரா செனெகா தடுப்பூசிகளை பெறுக்கொடுப்பதற்கு உலக சுகாதார ஸ்தாபனம் உரிய நடவடிக்கை எடுக்குமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

Gotabaya Rajapaksa @GotabayaR · 3h
Had a useful zoom discussion with @DrTedros. I believe he will make effort to fulfil #lka need for 600,000 doses of #AstraZeneca for the 2nd dose of vaccination.
Globally, there is a need for 20 million doses of the #AstraZeneca for the 2nd dose.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் கெப்ரியாசேயுடன் நேற்றைய தினம் வீடியோ தொழில்நுட்பம் மூலம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

அந்தப் பேச்சுவார்த்தை தொடர்பில் தமது டுவிட்டர் செய்தியில் குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி

06

கொரோனா தொற்றிலிருந்து விடுபட

## நாடு முழுவதும் இன்று மாலை 5.46 க்கு விசேட பிரார்த்தனை

### பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய வழிபாடு



உலகை உலுக்கிவரும் கொரோனா தொற்று நீங்கி சுபீட்சமானதொரு வாழ்வு மலர, உலக மக்களின் நன்மையையும் இலங்கை வாழ் மக்களின் நன்மையையும் வேண்டி சர்வமத பிரார்த்தனையை ஒரே நேரத்தில் இன்று மாலை 5.46 மணியளவில் ஜனாதிபதி,

06

உரிமையாளர் இல்லை என உறுதிசெய்த

## சுமார் 20 இலட்சம் பேஸ்புக் கணக்குகள் இடைநிறுத்தம்

### சட்ட நடவடிக்கை தயாராகிறது



நாட்டின் மொத்த முகநூல் கணக்குகளில் சரியான உரிமையாளர்கள் இல்லாதவர்களென உறுதிப்படுத்தப்பட்டுள்ள சுமார் 20 இலட்சம் கணக்குகளை இடை நிறுத்துவதற்கு தேவையான சட்ட நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுமென வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

06

ரமழான் தொழுகை நேரம்

| திகதி | 04– 08 |
| --- | --- |
| சஹர் | 04–22 |
| சுபஹ் | 04–37 |
| சூ.உதயம் | 05–57 |
| லுஹர் | 12–09 |
| அஸர் | 03–27 |
| மஃரிப் | 06–19 |
| இஷா | 07–32 |

HaLo
Complete Family Protection
Hotline: 077 4648855

நுவரெலியா, கொழும்பு, மட்டக்களப்பு உட்பட

## ஐந்து மாவட்டங்களில் 08 GS பிரிவுகள் தனிமைப்படுத்தலில்



### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உடன் அமுலாகும் வகையில் மேலும் 05 மாவட்டங்களில் 08 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தப்பட்டதாக இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

06

## இலங்கை தமிழர் நலனில் தி.மு.க. வின் கரிசனை தொடரும்

### டக்ளஸிடம் அனிதா இராதாகிருஷ்ணன் உறுதி



இலங்கை தமிழ் மக்கள் நலன் தொடர்பாக திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்தும் அக்கறை செலுத்துமென தமிழகத்தின் மீன்பிடித் துறை, மீனவர் நலத்துறை

06

## சட்ட மா அதிபராக சஞ்சய ராஜரத்னம்?

### பாராளுமன்ற பேரவையில் பரிசீலனை

பதில் சொலிஸிட்டர் ஜெனரல் சஞ்சய ராஜரத்தினத்தை அடுத்த சட்ட மாஅதிபராக நியமிப்பது தொடர்பில் பாராளுமன்ற பேரவையினால் பரிசீலனை செய்யப்படவுள்ளதாக சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

06

யாழ். மாநகர சபை சீருடை அணிந்த

## காவல்படை உத்தியோகத்தர் ஐவருக்கும் CID அழைப்பு

### 11ஆம் திகதி 4ம் மாடிக்கு வர பணிப்பு

**யாழ்.விசேட நிருபர்**



யாழ்.மாநகரில் தண்டப் பணம் அறவிடும் நடைமுறையை கையாள்வதற்காக அமைக்கப்பட்ட யாழ். மாநகர காவல் படையின் உத்தியோகத்தர்கள் ஐந்து பேரையும் வாக்குமூலம் வழங்க கொழும்பு வருமாறு

06

## இலங்கையில் 'பைசர்' தடுப்பூசிக்கு அனுமதி

### அவசர தேவைகளுக்கு பயன்படுத்தலாம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



என்டெக் தடுப்பூசிகளை பயன்படுத்த தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை அனுமதி வழங்கியுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுதர்சனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார். அதிகார சபையின் விசேட ஆலோசனை குழுவினால் இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

06

வீதியை விட்டு விலகி விபத்து;

## காரில் பயணித்த இருவர் மரணம்

### மட்டக்களப்பில் அனர்த்தம்



மட்டக்களப்பு, வாழைச்சேனை கொழும்பு பிரதான வீதியின் மியான்குளப் பகுதியில் காரொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து வீதியை

06



தமிழக முதல்வராக திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் நேற்று (07) சென்னையிலுள்ள ஆளுநர் மாளிகையில் பதவியேற்றுக்கொண்ட பின்னர் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்துக்கு மலர்க்கொத்து வழங்கியபோது...

## ஹெரோயினுடன் கைதான தந்தையும் மகனும்

### புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலில் திடீர் சுற்றிவளைப்பு

கல்முனையில் சம்பவம்

**கல்முனை நிருபர்**



நீண்ட காலமாக ஹெரோயின் போதைப்பொருட்களை சூட்சுமமாக விற்பனை செய்து வந்த தந்தையும் மகனும் கல்முனையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அம்பாறை, கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனைக்குடி கிரீன் பீல்ட் தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் (06) இரவு நேரங்களில் போதைப்பொருள் விற்பனை செய்யப்பட்டு வருவதாக மாவட்ட புலனாய்வு பிரிவு மற்றும் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

06

### விக்கல் வீராச்சாமி



மாஸ்க் போடாத சிலரை பொலீசார் தூக்கிப் போவத பாக்க சனம் இன்னும் திருந்தல எண்டு மட்டும் தெரியுது.....

சனத்த திருத்த இதைத் தவிர வேற வழி இல்ல, எவ்வளவு சொல்லியும் கேக்–காவிட்டா பொலீஸ குத்தம் சொல்லி வேலையில்லை...!!!





ருவண்புர அதிவேக நெடுஞ்சாலை திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்று அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் காணொளியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படங்கள். கஹதுடுவ முதல் இங்கிரிய வரையிலான 24 கிலோமீற்றர் முதற் கட்ட நிர்மாணப் பணிகளே நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது கட்டங்களின் போது இரத்தினபுரி மற்றும் பெல்மதுல்ல வரை இந்த அதிவேக நெடுஞ்சாலை நீடிக்கப்படும்.












கொழும்பு டாம் வீதியில் பொலிஸாரால் முகக் கவசம் அணியாத மற்றும் சுகாதார வழிமுறைகளை பின்பற்றாத 51 பேர் கைது செய்யப்பட்ட போது...






சீதுவையில் இராணுவத்தினரால் 1,200 நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் தயாரிக்கப்படும் மாபெரும் கொவிட் சிகிச்சைக்கான வைத்தியசாலை அமைக்கும் பணிகளின் போது...


## லேக் ஹவுஸ் ஆகிய நாம் உங்கள் பாதுகாப்பின் முக்கியத்துவம் கருதி பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்

படி 1
அனைத்து ஊழியர்களும் நிறுவனத்திற்குள் நுழையும் முன் கிருமிநீக்கும் அறை வழியாக அனுப்பப்படுவர்

படி 2
கால்களால் இயக்கி கை கழுவும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்

படி 3
நுழைவாயிலில் உடல் வெப்பநிலை அளவிடப்படும்

படி 4
தூய்மையை மேலும் உறுதிப்படுத்த கால் தூய்மையாக்கும் தட்டு

படி 5
தொடுகையுறும் ஒவ்வொரு இடத்திலும் கை தூய்மையாக்கி

படி 6
வாடிக்கையாளருடன் தொடர்புறும் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு தனிப்பட்ட பாதுகாப்பு அங்கி

படி 7
உற்பத்தி கடமையில் உள்ளவர்களுக்கு கையுறை, முகக்கசவம் கட்டாயமானது

படி 8
பணிகள் ஆரம்பிக்கும் முன்னர், உற்பத்தி பகுதி கிருமி நீக்கம் செய்யப்படும்

படி 9
விநியோகத்திற்கு முன்னரும் பின்னரும் வாகனங்கள் கிருமி நீக்கம் செய்யப்படும்

பத்திரிகையின் பக்கங்கள் ஊழியர்களால் வீடுகளிலிருந்து வடிவமைக்கப்பட்டு மின்னஞ்சல் செய்யப்படும்

முழுமையான தன்னியக்க அச்சிடல், நன்கு பாதுகாப்பான ஊழியர்களால் பொதியிட்டு, ஏற்றி, இறக்கல், விநியோகம்

மிகக் குறைந்த மனிதத் தொடர்புடன் வெளிவரும் பத்திரிகை, மிகவும் பாதுகாப்பாக உங்களை வந்தடைகிறது

ANCL | MN Graphic

## ரமழான் சிந்தனை

## வாழ்வுக்கான பயிற்சி களம்

இவ்வருட ரமழான் மாதத்தின் பெரும்பகுதி முஸ்லிம்களை விட்டும் கடந்துள்ளன. இன்னும் விரல் விட்டெண்ணி விடக்கூடிய சில நாட்கள் மாத்திரமே எஞ்சியுள்ளன. அதில் இம்மாதத்தின் இறுதிப்பத்திலுள்ள ஒற்றைப்படையான ஓரிரு நாட்களுமுள்ளன.

அல் குர்அன் ரமழானின் இறுதிப்பத்திலுள்ள ஒற்றைப்படையான ஒரிரவில் தான் இறக்கியருளப்பட்டுள்ளது. அவ்விரவு ஆயிரம் மாதங்களை விடவும் மேலானதாக அல்லாஹ்வினால் ஆக்கப்பட்டுள்ளது. அதனால் அவ்விரவை அடைந்து கொள்வதிலும் நபி (ஸல்) அவர்கள் அதிக முயற்சி எடுத்துக் கொண்டதோடு அதற்கான வழிகாட்டுதல்களையும் வழங்கியுள்ளார்கள். அதனால் ரமழானில் எஞ்சியுள்ள நாட்களையும் அன்னாரின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப பயன்படுத்தி ரமழானை முழுமைப்படுத்திட வேண்டும்.

அதேநேரம் இம்மாதம் முழுவதும் நோன்பிருந்து பெற்றுக்கொள்கின்ற உடல், உள ரீதியிலான பயிற்சிகளையும் பக்குவத்தையும் வாழ்நாள் முழுவதும் எடுத்து நடக்கவும் தவறக் கூடாது. இதைவிடுத்து ரமழான் நிறைவுற்று நோன்பு பெருநாளுக்கான தலைப்பிறை தென்பட்டதும் பழைய நிலைக்கு திரும்பி விடலாகாது.

ரமழான் என்பது வாழ்நாள் முழுவதும் அல்லாஹ்வை வணங்கி அவனுக்கு கட்டுப்பட்டு நடப்பதற்கான பயிற்சியையும் பக்குவத்தையும் அளிக்கும் களம் எனக் கருதப்பட வேண்டுமெயொழிய அது நல்லமல்கள் புரிவதற்கான ஒரே மாதமென நோக்கலாகாது.

அந்த வகையில் பிஷ்ர் அல் ஹாஃபி (ரஹ்) அவர்களிடம் ஒரு தடவை, 'ரமழானில் மாத்திரம் சில முஸ்லிம்கள் அல்லாஹ்வை வணங்கி வழிபடுகின்றார்கள்' எனக்கூறப்பட்ட போது, 'அவர்கள் எவ்வளவு மோசமான மனிதர்கள். அல்லாஹ் அவனுடைய அருள்களை வருடம் முழுவதும் சொறிந்திருக்கும் போது இவர்கள் ஏன் அவனை ரமழானில் மாத்திரம் வணங்கி வழிபடுவதற்கு மட்டுப்படுத்திக் கொள்கின்றார்கள்?' என வினவி அவர் கண்டித்துள்ளார். மற்றொரு இஸ்லாமிய அறிஞர், 'ரமழானின் இறைவன் தான் ஏனைய மாதங்களதும் இறைவன்' என்றுள்ளார்.

ஆகவே இக்காலப்பகுதியில் நோன்பிருந்து இறை வணக்கங்களில் ஈடுபட்டு பெற்றுக்கொள்ளும் பயிற்சியை வருடம் முழுவதும் எடுத்து நடந்திட திடசங்கற்பம் பூணுவோம்.

மர்லின் மரிக்கார் ...

## ஜனநாயக இடதுசாரி முன்னணியின் "சுபீட்சத்தின் நோக்கு" ஜனாதிபதியிடம்



"சுபீட்சத்தின் நோக்கு" நிகழ்ச்சித் திட்டத்தை முன்கொண்டு செல்வதற்காக ஜனநாயக இடதுசாரி முன்னணி தயாரித்த "சுபீட்சத்தின் நோக்கு" மக்கள் மைய பிரகடனம் நேற்று (07) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டது.

இந்த பிரகடனத்தை ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார ஜனாதிபதியிடம் வழங்கினார்.

தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை அளித்தல், நட்புறவுடனான அணிசேரா வெளியுறவுக் கொள்கையை நடைமுறைப்படுத்துதல், ஊழல் மற்றும் மோசடிகள் இல்லாத தூய்மையான அரச நிர்வாகத்தை கட்டியெழுப்புதல் மற்றும் மக்களுக்கு பொறுப்பு கூறும் அரசியலமைப்பு சீர்திருத்தம் ஆகியவை "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள பல விடயங்களாகும். இப்பிரகடனத்தில் முன்வைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டம் குறித்து கிராமிய மக்களுக்கு அறிவூட்டுவதற்காக அரசியல் மற்றும் சமூக ஆர்வலர்களை அணிதிரட்டுவதற்காக 100 கருத்தரங்குகளை நடத்த ஜனநாயக இடதுசாரி முன்னணி திட்டமிட்டுள்ளது. இந்நிகழ்வில் மொனராகலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் கயாஷான் நவனந்தனவும் கலந்துகொண்டார்.

## சுற்றுலாத்தளங்கள், உல்லாச விடுதிகள், பூங்காக்கள்;

### மறு அறிவித்தல் வரை மூடல்

நாடளாவிய ரீதியில் வன பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் சுற்றுலாத்தளங்கள், உல்லாசப் பயணிகளுக்கான பங்களாக்கள் மற்றும் பூங்காக்களையும் மூடுவதற்கு வன பாதுகாப்புத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வனவிலங்கு திணைக்கள பணிப்பாளர் நாயகம் சந்தன சூரிய பண்டார தெரிவித்துள்ளார். அதற்கிணங்க மறு அறிவித்தல் வரை மேற்படி பிரதேசங்கள் சுற்றுலா பயணிகளுக்காக மூடப்பட்டிருக்கும் எனவும் வனவிலங்கு திணைக்கள பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் அனைத்து சுற்றுலா விடுதிகளும் கடந்த ஐந்தாம் திகதி முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஸ)

## தமிழகத்தின் 10ஆவது முதல்வராக ஸ்டாலின்

### நேற்றுக் காலை பதவியேற்றார்

தமிழக முதல்வராக திராவிட முன்னேற்ற கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் நேற்று ஆளுநர் மாளிகையில் பதவியேற்றுக் கொண்டார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் திமுக 125 இடங்களைக் கைப்பற்றி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்துள்ளது.

தொடர்ந்து மே 04 ஆம் திகதி நடைபெற்ற திமுக சட்டப்பேரவை உறுப்பினர்கள் கூட்டத்தில் சட்டப்பேரவை திமுக குழுத் தலைவராக ஸ்டாலின் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதைத் தொடர்ந்து உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்ட கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த 08 உறுப்பினர்களையும் சேர்த்து மொத்தம் 133 சட்டப்பேரவை உறுப்பினர்களின் ஆதரவுக் கடிதத்துடன் ஆளுநர் பன்வாரிலால் புரோஹித்தை மு.க.ஸ்டாலின் சந்தித்து ஆட்சியமைக்க உரிமை கோரினார். அதை ஏற்று மு.க.ஸ்டாலினை ஆட்சியமைக்க ஆளுநர் அழைப்பு விடுத்திருந்தார்.

நேற்று (07) சென்னை, கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில் பதவியேற்பு விழா காலை 09.00 மணிக்கு நடைபெற்றது. கொரோனா பரவல் காரணமாக ஆளுநர் மாளிகையில் விழா எளிமையாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கொவிட் தடுப்பூசிகளை பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துங்கள்

### அதிகாரிகளுக்கு ஜனாதிபதி பணிப்புரை



லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்குதல் மற்றும் கொள்வனவு செய்தல் தொடர்பான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதை வேளை, குறுகிய காலத்தில் முடிந்தளவு அதிகமான தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் தெளிவுபடுத்தியுள்ளார்.

தினமும் கூடும் கொரோனா வைரஸ் தொடர்பான குழுவுடனான பேச்சுவார்த்தை நேற்றைய தினமும் (07) ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற போதே ஜனாதிபதி அது தொடர்பில் தெரிவித்துள்ளார்.

வைரஸ் தொற்று அதிகமாக பரவவாய்ப்புள்ள மேல்மாகாணம் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியது முக்கியமாகும். ரஷ்யாவின் தயாரிப்பான ஸ்புட்னிக் வி தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள 06 இலட்சம் சைனோபாம் தடுப்பூசிகள் சுகாதார அமைச்சின் கையிருப்பிலுள்ளது. உலகின் 51நாடுகளைச் சேர்ந்த 55 மில்லியனுக்கும் அதிகமானவருக்கு தடுப்பூசி வெற்றிகரமாக வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில் மேற்படி நாடுகளில் சுகாதாரத்துறை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அந்த தடுப்பூசிகளை விரைவாக கொள்வனவு செய்வதற்கு உள்ள வாய்ப்புக்களை ஆராயுமாறு ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். முதலாம் கட்ட தடுப்பூசிகள் வழங்கப்பட்டவர்களுக்கு இரண்டாம்

06

# புர்கா தடை முஸ்லிம்களுக்கு சாதகமான, பாதுகாப்பான ஒன்று

### அலி சப்ரி ரஹீம் MP தெரிவிக்கிறார்



புர்கா தடை முஸ்லிம் சமூகத்திற்கு சாதகமான ஒன்று. ஏனெனில் எதிர் காலத்தில் புர்கா என்பது முஸ்லிம்கள் மீது பயங்கரவாத பழி சுமத்தும் சாதனமாக அமையக் கூடும் என புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த பல தசாப்தங்களாக புலிகளின் காலம் தொட்டு சஹ்ரான் என்னும் பயங்கரவாதியின் ஈஸ்டர் தாக்குதல் வரை நமது நாடு பயங்கரவாத நிலமைக்கு முகம் கொடுத்து வந்துள்ளது. அதனால் இலங்கையின் பொருளாதாரம் மற்றும் இன ஒருமைப்பாடு போன்றவை சீர்குலைந்து நாட்டில் அமைதியின்மை இன்று வரை நிலவுகின்றது.

இவ்வாறான சூழ்நிலையில் தற்போது சர்ச்சைக்குரிய பேசுபொருளாக மாறியுள்ள புர்கா பற்றிய தெளிவான பார்வை எம் சமூக மட்டத்தில் முன் வைக்கப்பட வேண்டியுள்ளது.

எமது நாட்டு முஸ்லிம் பெண்களில் பத்து வீதத்துக்கும் குறைவானவர்களே புர்கா அணிகிறார்கள். குறிப்பிட்ட புர்கா அணிதல் இஸ்லாத்தில் கட்டாயமாக்கப்பட்ட ஒன்றல்ல என்பதே பெரும்பாலான மார்க்க அறிஞர்களின் கருத்தாக உள்ளது. தட்பவெப்ப நிலைமைக்கேற்ப அணியப்பட்ட பாலைவன மகளிரின் கலாசார ஆடையே அதுவாகும். ஆனால் பிறிதொரு சந்தர்ப்பத்தில் எம் குல பெண்களுக்கு குறிப்பிட்ட முகத்திரை மார்க்க அடையாளமாக குத்தபட்டதன் விளைவே இன்று முஸ்லிம் மக்களின் மானசீக போராட்டமாக மாறியுள்ளது.

அவ்ரத்தை மறைத்தல் என்பது இஸ்லாத்தில் தெளிவாக வரையறை செய்யப்பட்டுள்ளது. மணிக்கட்டு, முகம் தவிர ஏனைய பகுதிகளை மறைத்தலே இஸ்லாமிய பெண்களுக்கு கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

பெண்கள் முகத்தை மறைப்பது ஓர் அடையாளமே அன்றி மார்க்க கடமையல்ல என்னும் உண்மையை எம் அறிஞர்கள் சமூக மட்டத்தில் எடுத்தியம்ப வேண்டும்.

இதுவரை எம் நாட்டில் நிகழ்ந்த பயங்கரவாத தாக்குதல்களில் புர்கா அல்லது ஹபாயா அணிந்து எவரும் தாக்குதல்களில் ஈடு படவில்லை. புர்கா அணிந்து தற்கொலை குண்டுதாரிகள் பயங்கரவாதி சஹ்ரானின் கும்பலில் செயல்படவுமில்லை. ஆனால்

06

மாகாண சபை தேர்தல் முறைமை:

## அரசாங்கத்துடன் இணைந்துள்ள தமிழ் எம்.பிக்கள் கலந்துரையாடல்



மாகாண சபை தேர்தல் முறைமை தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் உறுப்பினர்களுடன் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில் இராஜாங்க அமைச்சர்களான ஜீவன் தொண்டமான், எஸ்.வியாழேந்திரன், யாழ் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் அங்கஜன் இராமநாதன் மற்றும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொகுதிவாரியான தேர்தல் முறையில் எமது மக்களுக்கான பிரதிநிதித்துவம் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும், என்பது தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அதேநேரத்தில் இவ்விடயம் தொடர்பாக அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழ் கட்சிகள் அரசாங்கத்திடம் தொடர்ந்து பல்வேறு ஆலோசனைகளை முன்வைத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## சிறுநீரகம் தேவை

மட்டக்குளிய இல 150, சென்றல் றோட்டில் வசிக்கும் பாத்திமா காமிலா எனும் 37வயதுடைய பெண்மணிக்கு O+ (ஓ பிளஸ்) குறுாப் சிறுநீரகம் தேவைப் படுகின்றது.

சிறுநீரகங்கள் செயலிழந்த நிலையில் நோயினால் அவதிபடும் இப்பெண்மணிக்கு கருணையுள்ளம் படைத்தவர்கள், சிறுநீரகத்தை தானம் செய்ய எண்ணியிருப்பவர்கள் உதவிசெய்யுமாறு உறவினர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். **தொடர்புகளுக்கு: எம்.ஆர்.லாஹிர் 0777 779492**

## ஒரு கோடி ரூபாய் பெறுமதியான சிகரட்டுக்களுடன் மூவர் கைது

சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய 02 இலட்சத்து 12,000 வெளிநாட்டு சிகரட்டுக்களுடன் சந்தேகநபர்கள் மூவரை பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 43, 42 மற்றும் 49 வயதுடைய, தெமட்டகொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர்களென பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரை கண்டறியும் நடவடிக்கையில் பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

## மக்களுக்கு 2வது தடுப்பூசி பெற்றுக் கொடுக்கப்படும்

### அரசு முனைப்புடன் நடவடிக்கை என்கிறார் ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க

லோரன்ஸ் செல்வநாயகம்

முதற்கட்டமாக எஸ்ட்ரா செனேகா தடுப்பூசியை பெற்றுக்கொண்ட அனைவருக்கும் இரண்டாம் கட்ட தடுப்பூசியைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் முனைப்புடன் செயற்பட்டு வரும் நிலையில் இத்தடுப்பூசியை பெற்றுக்கொள்வது கஷ்டமாக உள்ளதாக தடுப்பூசித் திட்டம் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

எஸ்ட்ரா செனேகா தடுப்பூசியை உற்பத்தி செய்யும் இந்தியாவில் சீரம் நிறுவனம் இந்தியாவின் தற்போதைய நிலைமை காரணமாக தடுப்பூசிகளை விநியோகிப்பதில் பெரும் அசௌகரியங்களை எதிர் கொண்டு வருகிறது. இந்தியாவின் தற்போதைய சூழ்நிலையில் அந்நிறுவனத்தினால்

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 151.81 | 156.25 |
| கனடியன் டொலர் | 160.09 | 165.03 |
| யூரோ | 235.39 | 242.49 |
| ஜப்பான் யென் | 1.7903 | 1.8452 |
| சிங்கப்பூர் டொலர் | 146.89 | 151.18 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 272.78 | 280.61 |
| சுவிஸ் பிராங்க் | 214.45 | 221.57 |
| அமெரிக்க டொலர் | 196.77 | 201.87 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 529.41 | கட்டார் ரியால் | 54.81 |
| குவைத் டினார் | 662.13 | சவூதி ரியால் | 53.21 |
| ஓமான் ரியால் | 518.42 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.33 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 25ம் நாள் சனிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 25




## விவசாயத்தில் இரசாயனங்களை கட்டுப்படுத்தும் அரசின் திட்டம்

செயற்கை உரங்களின் இறக்குமதியை நிறுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளப் போவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் தெரிவித்துள்ளார். பயிர்ச் செய்கையில் இரசாயனப் பசளைகளின் பாவனை காரணமாக மக்களுக்கு ஏற்படுகின்ற ஆரோக்கிய கேடுகளைப் போக்குவதற்காகவே, செயற்கைப் பசளைகளின் இறக்குமதியை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாக ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இரசாயனப் பசளைகளின் பாவனைக்குப் பதிலாக இயற்கை உரமான சேதனப் பசளைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார். மக்களின் ஆரோக்கியத்தைப் பேணுவதில் ஜனாதிபதியின் இந்நடவடிக்கையானது உண்மையிலேயே பாராட்டுக்குரியதாகும். உணவுப் பொருட்களில் நச்சு இரசாயனங்களின் ஆதிக்கம் தொடர்பாக இப்போது பரவலாகப் பேசப்படுகின்றது. இரசாயனப் பொருட்கள் அடங்கியுள்ள உணவுப் பொருட்களே எங்கும் ஆதிக்கம் செலுத்துகின்றன. இயற்கையான, தூய்மையான உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதென்பது இன்று இயலாத காரியமாகி விட்டது. நச்சுப் பொருட்கள் பல்வேறு வடிவங்களில் உணவுப் பொருட்கள் ஊடாக எமது உடலைச் சென்றடைகின்றன.

இரசாயனப் பசளைகளின் பாவனை, பீடைநாசினிகள், காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்களைப் பழுதடையாமல் வைத்திருப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற இரசாயனப் பதார்த்தங்கள், காய்களை கனிய வைப்பதற்காக பயன்படுத்துகின்ற இரசாயனங்கள், பொதி செய்யப்படும் உணவுகளுக்கு இடப்படுகின்ற மருந்துகள், சுவையூட்டிகள், நிறமூட்டிகள், வாசனையூட்டிகள் என்றெல்லாம் பல்வேறு வடிவங்களில் இரசாயனப் பதார்த்தங்கள் அன்றாடம் எமது உடலுக்குள் சென்றவண்ணமே உள்ளன.

மனித ஆரோக்கியத்தைப் பாதிக்கின்ற இரசாயனப் பதார்த்தங்களில் ஒன்றுதான் விவசாயச் செய்கையில் பயன்படுத்தப்படுகின்ற பலவிதமான பசளைகளாகும். பயிர்களை பூக்க வைப்பதற்கும், காய்க்க வைப்பதற்கும், கனிய வைப்பதற்குமென்று அனைத்துக்குமே இரசாயனங்களை தாராளமாகப் பயன்படுத்துகின்ற நிலைமைக்கு நாம் வந்து விட்டோம்.

நெற்செய்கையில் மாத்திரமன்றி அனைத்து விதமான பயிர்ச் செய்கையிலும் பயன்படுத்தப்படுகின்ற பிரதான பசளையாக யூரியா விளங்குகின்றது. இயற்கைப் பசளையற்ற எந்தவொரு நிலத்திலும் பயிர்கள் செழிப்பாக வளர்வதற்கும், அப்பயிர்களில் காய்கள் பெரும் உருவத்தில் வளரவும் யூரியாவை விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். முன்னொரு காலத்தில் இயற்கைப் பசளைகளை விவசாயத்துக்குப் பயன்படுத்திய காலம் மலையேறி விட்டது.

விளைச்சலும், பணமீட்டுதலுமே பிரதானமே தவிர, பாதகமான விளைவுகளைப் பற்றி இப்போதெல்லாம் எவருமே சிந்திப்பதாக இல்லை. யூரியா மாத்திரமன்றி பல்வேறு விதமான இரசாயனப் பசளைகளையெல்லாம் விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். இதற்கான கட்டுப்பாடு எதுவுமே எமது நாட்டில் கிடையாது. ஆனால் இரசாயனங்களின் பக்கவிளைவுகளோ ஆபத்தானவை ஆகும்.

இலங்கையில் தொற்றா நோய்கள் வேகமாக அதிகரித்தபடி செல்கின்றன. அவற்றில் ஆபத்தான வியாதிகளும் உள்ளன. புற்றுநோய்கள், சிறுநீரக செயலிழப்பு, ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகள் என்றெல்லாம் ஆபத்தான வியாதிகளுடன் போராடுகின்ற நோயாளிகள் பலரை நாம் காண்கின்றோம்.

இவ்வாறான வியாதிகளுக்கெல்லாம் எமது உணவின் தரமின்மையே காரணமென நீண்ட காலமாகவே கூறப்பட்டு வருகின்றது. பலவிதமான நச்சு இரசாயனங்களும் எமது உணவுப் பொருட்களில் சேர்ந்துள்ளதாக மருத்துவர்களே அடிக்கடி கூறி வருகின்றனர். சிறுநீரகப் பாதிப்புக்கான பிரதான காரணமாக இரசாயனப் பொருட்களின் பாவனையையும் மருத்துவர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனாலும் உணவு உற்பத்தியில் அவ்வாறான இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதை நிறுத்திக் கொள்வதற்கு இன்னுமே நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்பதே கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான நிலையில் இரசாயன உர வகைகளின் இறக்குமதியை நிறுத்துவதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேற்கொள்ளவிருக்கின்ற நடவடிக்கையானது, மக்கள் மத்தியில் தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்துவதற்கு பெரிதும் உதவுமென்பதில் சந்தேகமில்லை. அதேசமயம் நாட்டின் எதிர்கால சந்ததி இயற்கைப் பசளையின் பாவனைக்கு பழகிக் கொள்வதென்பதும் நன்மை தரக் கூடியதாகும்.

நாம் இப்போது அன்றாடம் பயன்படுத்துகின்ற காய்கறிகள் மற்றும் பழங்களை எடுத்துக் கொள்வோமானால் இரசாயன பசளைகளின் ஆதிக்கத்தை இலகுவாகவே தெரிந்து கொள்ள முடியும். அன்றைய காலத்தில் மக்கள் உணவுக்காகப் பயன்படுத்திய காய்கறிகள் மற்றும் பழங்கள் போன்றவையெல்லாம் சிறிய உருவத்தில் காணப்பட்டன. இன்று அவற்றின் உருவம் கற்பனை செய்ய முடியாத அளவுக்கு பெரிதாகி இருப்பதன் காரணத்தை அறிந்தால் செயற்கைப் பசளைகளின் ஆதிக்கத்தை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

காய்கள் வளர்கின்ற காலத்தில் யூரியாவை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். யூரியா நேரடியாகவே காய்கறிகள் மற்றும் பழங்களுக்குள் சென்று, அதன் பின்னர் உணவின் ஊடாக எமது உடலுக்கும் சென்று விடுகின்றது. இதுவே எமது உடல் ஆரோக்கியத்துக்கும் ஆபத்தானதாக மாறி விடுகின்றது.

மக்களின் ஆரோக்கியமே பிரதானமென்று ஜனாதிபதி கூறியிருப்பதையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. மனித ஆரோக்கியத்துக்கு கேடு விளைவிக்கும் பதார்த்தங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்துவதென்பது சிறந்த நடவடிக்கை ஆகும்.

editor.tkn@lakehouse.lk

# முதலமைச்சர் ஸ்டாலின், அமைச்சர்கள் 33 பேர், நேற்று பதவிப் பிரமாணம்

சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில் நேற்றுக் காலை 09.00 மணிக்கு நடைபெற்ற பதவியேற்பு விழாவில் தி.மு.க தலைவர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தின் முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்டார். அவருக்குத் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித் பதவிப் பிரமாணமும் இரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். மேலும், முதல்வர் ஸ்டாலினுக்கு ஆளுநர் பூங்கொத்து கொடுத்து வாழ்த்துத் தெரிவித்தார்.

'முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்...' எனக் கூறி ஸ்டாலின் பதவியேற்றுக் கொண்டார். மு.க. ஸ்டாலின் முதல்வராகப் பதவியேற்றதைக் கண்டு அவரது மனைவி துர்கா ஸ்டாலின் உணர்ச்சிவசப்பட்டு ஆனந்தக் கண்ணீர் சிந்தினார்.

முதலமைச்சர் ஸ்டாலினை தொடர்ந்து, அவரது தலைமையிலான அமைச்சரவையும் பதவியேற்றது. அதன்படி, புதிதாக உருவாக்கப்பட்ட நீர்வளத்துறை அமைச்சராக துரைமுருகன் பதவியேற்றுக் கொண்டார். நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சராக கே.என். நேரு, மருத்துவம், மக்கள் நல்வாழ்த் துறை அமைச்சராக மா. சுப்பிரமணியன், வணிக வரி, பதிவுத்துறை அமைச்சராக பி.மூர்த்தி, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சராக எஸ்.எஸ்.சிவசங்கர், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சராக பி.கே.சேகர் பாபு, நிதித்துறை மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சராக பி.டி.ஆர். தியாகராஜன் ஆகியோர் பதவியேற்றுக் கொண்டனர்.





### தந்தையார் உருவப் படத்துக்கு முன்பாக கலங்கிய கண்களுடன் ஆசி பெற்றார் ஸ்டாலின்

பால் வளத்துறை அமைச்சராக சா.மு. நாசரும், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சராக கே.எஸ்.மஸ்தானும், பள்ளிக்கல்வித்துறை அமைச்சராக அன்பில் மகேஷ் பொய்யாமொழியும், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை அமைச்சராக சிவ.வீ.மெய்யநாதனும், தொழிலாளர் நலத்துறை மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சராக சி.வி.கணேசனும், தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சராக மனோ தங்கராஜும், சுற்றுலாத்துறை மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அமைச்சராக மதிவேந்தனும், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சராக கயல்விழி செல்வராஜும் பதவியேற்றுக் கொண்டனர்.

கூட்டுறவுத்துறை அமைச்சராக ஐ. பெரியசாமியும், உயர்கல்வித்துறை அமைச்சராக பொன்முடியும், பொதுப்பணித்துறை அமைச்சராக எ.வ. வேலுவும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சராக எம்.ஆர்.கே. பன்னீர்செல்வமும், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சராக கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரனும், தொழிற்துறை, தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சராக தங்கம் தென்னரசுவும், சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சராக எஸ். ரகுபதியும், வீட்டு வசதித் துறை அமைச்சராக முத்துசாமியும், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சராக பெரியகருப்பனும், ஊரக தொழில்துறை தா.மோ. அன்பரசனும், செய்தித்துறை அமைச்சராக சாமிநாதனும், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துரை அமைச்சராக கீதா ஜீவனும், மீன் வளம் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சராக அனிதா ராதாகிருஷ்ணனும், போக்குவரத்துத் துறை அமைச்சராக ராஜ கண்ணப்பனும், வனத்துறை அமைச்சராக கா. ராமச்சந்திரனும், உணவுத்துறை அமைச்சராக சக்கரபாணியும், மின்சாரம் மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சராக செந்தில் பாலாஜியும், கைத்தறித்துறை அமைச்சராக ஆர். காந்தியும் பதவியேற்றுக் கொண்டனர்.




### தமிழகமெங்கும் தி.மு.கவினர் பட்டாசு கொளுத்தி, இனிப்புகள் வழங்கி மகிழ்ச்சி ஆரவாரம்

பதவியேற்பு விழாவில் வைகோ, திருமாவளவன், ப. சிதம்பரம், முத்தரசன், கி. வீரமணி, வேல்முருகன், ஈஸ்வரன், காதர் மொய்தீன், கே.எஸ். அழகிரி, திருநாவுக்கரசர், சரத்குமார், கமல்ஹாசன் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்றனர்.

அதேபோல், அ.தி.மு.க சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர் செல்வம், நவநீதகிருஷ்ணன், தனபால் மற்றும் பா.ஜ.க சார்பில் இல. கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையிலான அமைச்சரவையில் முதலமைச்சருடன் சேர்த்து மொத்தம் 34 அமைச்சர்கள் இடம்பெற்றுள்ளனர்.



மேலும், மு.க. அழகிரி மகன் தயாநிதி அழகிரி, ஐ பேக்கின் பிரசாந்த் கிஷோர் மற்றும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் குடும்ப உறுப்பினர்கள் உதயநிதி ஸ்டாலின், அவரது மனைவி கிருத்திகா ஸ்டாலின், சபரீசன் மற்றும் செந்தாமரை, துர்கா ஸ்டாலின் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

அமைச்சர்களாக பதவியேற்ற அனைவரும் ஆளுநருடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர்.

பதவியேற்புக்கு முன்னதாக, விழா நடைபெறும் இடத்திற்கு வந்த தமிழக ஆளுநருக்கு மு.க. ஸ்டாலின் பூங்கொத்து கொடுத்து வரவேற்றார். புதிதாக பதவியேற்க உள்ள அமைச்சர்களை ஆளுநரிடம் அறிமுகம் செய்து வைத்த மு.க. ஸ்டாலின், உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட தனது குடும்ப உறுப்பினர்களையும் அறிமுகம் செய்து வைத்தார்.

பதவியேற்பையடுத்து ஸ்டாலின், முன்னாள் முதல்வர் கலைஞரின் உருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். அப்போது உணர்ச்சிவசப்பட்டு முதலமைச்சர் கண்கலங்கினார். பின்பு, தாயார் தயாளு அம்மாளிடம் முதலமைச்சர் ஸ்டாலின் ஆசிபெற்றார்.

அங்கிருந்து சென்னை மெரினாவிற்குச் சென்ற முதலமைச்சர் ஸ்டாலின், முன்னாள் முதல்வர்கள் அண்ணா, கலைஞர் நினைவிடங்களில் மலர்தூவி மரியாதை செலுத்தினார். மேலும், அமைச்சர்களும் மலர்தூவி மரியாதை செலுத்தினர். அதன் தொடர்ச்சியாக, சென்னை வேப்பேரியில் உள்ள பெரியார் நினைவிடத்துக்குச் சென்ற மு.க. ஸ்டாலின் மற்றும் அமைச்சர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

இதனிடையே, முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் பதவியேற்றதை அடுத்து, தமிழகம் முழுவதும் திமுகவினர் பட்டாசுகளை கொளுத்தியும் பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கியும் உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

# அங்கக் குறைபாடு என்பது மனிதனின் இயலாமையல்ல!

கடந்த 1984ம் ஆண்டு மே மாதம் 03ம் திகதி மர்ஹூம் என்.ஜப்ரி ஹனீபா தலைமையில் கொழும்பை சேர்ந்த ஒரு சிலருடன் இணைந்து திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையம் இற்றைக்கு 37 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. வலது குறைந்த ஐந்து மாணவர்களுடனும், இரண்டு ஆசிரியர்களுடனும் திஹாரிய ஊர்மனை பகுதியில் வாடகை வீடு ஒன்றில் இந்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ந்தும் வாடகைக் கட்டடத்ததில் இந்நிலையத்தை கொண்டு நடத்த முடியாத நிலையில் மர்ஹூம் என் ஜப்ரி ஹனீபா தலைமையிலான குழு முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் எம்.எச் மொஹமட்டை சந்தித்து இஸ்லாமிய அங்கவீனர் நிலையத்தின் அவசியத்தையும், தேவையையும் வலியுறுத்திக் கூறிய போது, மர்ஹூம் எம்.எச் மொஹமட் உடனடியா சவூதி அரேபியாவின் ராபித்தாவுடன் தொடர்பு கொண்டு மேற்கொண்ட முயற்சியின் பயனாக திஹாரிய தூல் மலைப் பகுதியில் 80 பேர்ச் காணி ஒன்றை கொள்வனவு செய்து ஆண்களுக்கான மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப் பட்டது.

### 37வது அகவையில் திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையம்

கல்வி அமைச்சின் பாடவிதான விதிமுறைகளுக்கு ஏற்ப பரீட்சைத் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கமைய வகுப்புகள் பிரிக்கப்பட்டு கற்றல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. பரீட்சைகளுக்கு மாத்திரம் மாணவர்களை தயார்படுத்தாது அவர்களது அன்றாட வாழ்க்கையை ஒழுங்கமைப்புக்குள் கொண்டு வரும் வகையில் தொழில் பயிற்சிகளும், ஏனைய வழிகாட்டல்களும் கட்டம் கட்டமாக வழங்கப்படுகின்றன. 'பல்துறை சார்ந்தவர்களை உருவாக்குவோம்' என்ற நோக்கத்தில் இந்நிறுவனம் தம்மை நம்பி வரும் மாணவர்களுக்கு கல்வியையும் தொழில் பயிற்சியையும் வழங்கி தொழில் வாய்ப்புகள் மூலம் அங்கவீனர்களின் வாழ்க்கையை வளம் பெறச் செய்து வருகிறது.

விழிப்புலனற்ற மாணவர்கள் மூவர் பல்கலைக்கழக பட்டம் பெற்று பட்டதாரிகளாக வெளியேறி அரச பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களாக பணியாற்றுகின்றனர். செவிப்புலனற்ற மாணவர் ஒருவர் ஹொங்கொங் சீனா பல்கலைக்கழகத்தில் செய்கை மொழி நிபுணத்துவப் பயிற்சிக்குச் சென்று வந்துள்ளார். விழிப்புலனற்ற, செவிப்புலனற்ற மாணவ மாணவிகள் கனடா, ஈரான், மலேசியா போன்ற நாடுகளில் விளையாட்டுத் துறையில் பங்கேற்று வெற்றி பெற்று பதக்கங்களையும் வென்று வந்துள்ளனர். அத்தோடு இஸ்லாமிய அங்கவீனர் நிலைய ஆசிரியர்கள் தமது துறைசார் திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்வதற்காக லண்டன், மலேசியா, கனடா, இந்தியா போன்ற நாடுகளில் பயிற்சிகளை பெற்று வந்துள்ளனர்.


செவிப்புலனற்ற மாணவர்களில் பலரும் பல்வேறு தொழில் வாய்ப்புகளை பெற்று 'அங்கவீனம் ஒரு இயலாமை அல்ல' என்பதை நிரூபித்து அங்கவீனர் வாழ்வை மெருகூட்டி வருகின்றனர். வலது குறைந்தவர்களும் தாம் மற்றவர்களுக்கு மத்தியில் சளைத்தவர்கள் அல்லவென்பதை தமது முயற்சியின் மூலம் நிரூபித்து அதன் பயனையும் அனுபவித்து வருகின்றனர். .

இன்றைய நிலையில் உளவிருத்தி குறைந்தவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவதானிக்கின்றோம். அவர்களது குடும்பத்தினருடன் இரண்டற கலந்து அவர்களது சுகதுக்கம் அனைத்திலும் பங்கெடுத்து அவர்களது வாழ்க்கையை வளப்படுத்தி வருகின்றோம். கல்வியை பெற்று தாம் வாழும் சமூகத்தில் தாமும் மனிதர்கள் என்பதை அவர்கள் நிரூபித்துள்ளனர்.

மெல்ல கற்போரையும் கல்வித் துறைக்குள் ஈடுபடுத்தி சமூகத்தில் ஒழுங்கமைப்போடு வாழ்வதற்கு வழியமைத்துக் கொடுப்பதுடன் அவர்களும் சமூகத்தில் ஏனையவர்களோடு சமமாக தமது பணிகளை முன்னெடுப்பதற்காக அவர்களை மாற்றியமைக்கும் பெருமையும் அங்கவீனர் நிலையத்தையே சாரும்.

நாம் அங்கவீனர்களோடு கைகோர்த்து பயணிப்போமாயின் அவர்களது வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முடியும். ஒரு காலத்தில் அங்கவீனர் என்போர் சமூகத்திற்கு உதவாதவர்கள், உதவ முடியாதவர்கள், சமூகத்திற்கு சுமையானவர் என்ற கருத்து மேலோங்கியிருந்தது. இவ்வாறானதொரு காலக்கட்டத்திலேயே இதனை ஒரு சவாலாக ஏற்றும் 'அங்கவீனர்களும் மனிதர்களே' என்ற புதிய கோட்பாட்டுடன் உருவான நிலையமே திஹாரிய இஸ்லாமிய அங்கவீனர் நிலையமாகும்.

இன்று இந்நிலையம் 37 ஆண்டுகள் நிறைவில் கால் பதிக்கும் தருணத்தில் இந்நிலையத்தின் வளர்ச்சிக்காக தமது பங்களிப்புகளை வழங்குமாறு கோருகின்றோம். நன்கொடையாகவோ, சக்காத், சதகா, வழங்குவதன் மூலமோ கல்வி தொழிற் பயிற்சி உணவு, உடை உறையுள், மருத்துவம் மற்றும் அனைத்து பராமரிப்பு சேவைகளையும் முன்னெடுப்பதற்கு உதவுமாறு வேண்டுகின்றோம்.




எஸ்.ஐ.எம். ஹலீம்...
(பாடசாலை முகாமையாளர்)

# உலகில் அழிவை நோக்கி செல்லும் குடிபெயரும் பறவைகளின் இருப்பு!






**உலக குடிபெயரும் பறவைகள் தினம் (world migratory birds day) வருடா வருடம் மே மாதம் 08 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது. உலகில் வருடம் தோறும் பறவைகளின் குடிபெயர்தல்கள் இடம்பெறுகின்றன. தாம் வாழும் பிரதேசங்களில் எதிர்கொள்ளும் வாழிடச் சிக்கல், கடும் வெப்பம், கடும் குளிர், உணவுப் பற்றாக்குறை என்பவற்றை தவிர்த்துக் கொள்ளவென அவ்வாழிடங்களில் இருந்து, வாழக் கூடிய சூழல் நிறைந்த பிரதேசங்களுக்கு பறவைகள் இடம்பெயர்கின்றன.**

உகந்த இடத்துக்குச் சென்று குறிப்பிட்ட காலம் தங்கி இருந்து மீண்டும் முன்னைய இடத்துக்கு திரும்பி வருவதலே 'பறவைகள் குடிபெயர்ந்து செல்லல்' எனப்படுகின்றது. குறிப்பாக தம் உணவு, இருப்பிடம் மற்றும் சீதோஷண நிலை என்பற்றில் நெருக்கடி ஏற்படும் போதே பறவைகள் குடிபெயர் கின்றன.

கோடை காலத்தில் புவியின் வட அரைக் கோளத் தில் நீண்ட பகற் காலம் நிலவும். அக்காலம் பற வைகள் தமது குஞ்சுகளுக்கு உணவு ஊட்ட அதிக வாய்ப்பை அளிக்கும். இக்காலத்தில் இப்பகுதிக ளில் உணவும் கூடுதலாகக் கிடைக்கும். ஆனால் இலையுதிர் காலத்தில் பகற் காலம் சுருங்கி, உணவு கிடைப்பதும் அரிதாகும். அதன் விளைவாகவே வெப்ப வலயப் பிரதேசங்களுக்கு இப் பிராந்தியங் களைச் சேர்ந்த பறவைகள் குடிபெயருகின்றன.

ஏனெனில் வெப்ப வலயப் பிராந்தியங்களில் பருவ காலங்களுக்கு ஏற்ப உணவு கிடைக்கப் பெறுவதில் மாற்றங்கள் ஏற்படுவதுமில்லை. புலம் பெயரும் போது ஏற்படும் களைப்பு, சக்தி இழப்பு, ஆபத்துகள் போன்ற பாதக அம்சங்களை ஈடு செய் வதிலும் பறவைகள் கவனம் செலுத்துகின்றன.

புலம்பெயரும் பறவைகள் பல்வேறு உத்திக ளைக் கையாளுகின்றன. ஒவ்வொரு வருடமும் பகல் பொழுது குறையும் காலங்களில் உணவு கிடைக்கப் பெறுவது குறைவடையும். அதனால் பெரும்பாலான பறவைகள் வெதுவெதுப்பானதும் நல்ல சாதகமானதுமான தட்ப வெப்பநிலையை நோக்கி பறந்து செல்லத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளும்.

குடிபெயர்தல் ஆரம்பமாவதற்கு பல நாட்களுக்கு முன்னதாகவே அவை பயணத்திற்குத் தம்மை தயார் படுத்திக் கொள்ளும். குறிப்பாக அதிக உணவை உண்டு, கூடுதலாக ஓர் அடுக்கு கொழுப்பை உடலில் சேர்த்துக் கொள்ளும். சில பறவைகள் கூட்டமாக எப்படி அணிவகுத்துச் செல்வது என்று கூட ஒத்திகை கள் பார்த்துக் கொள்ளும். அதன் பின்னர் ஒருநாள் சிரேஷ்ட பறவைகளின் மூதாதைப் பண்புகளின் தூண்டலால் உந்தப்பட்டு முன்பின் அறியாத இடங் களுக்கு குடிபெயர்ந்து செல்லத் தொடங்கும். இப் பறவைகள் பெரும்பாலும் இரவு வேளையிலேயே பயணத்தை ஆரம்பிக்கும்.

இவ்வாறு குடிபெயரும் பறவைகள் இரு விதமான நேர் உணர்வைப் பெற்றுக் கொள்ளும். ஒன்று உள்ளூர் நேரத்தைச் சார்ந்தது. மற்றொன்று பருவ நிலை மாற்றம் தொடர்பானது. அத்தோடு புவிக் காந்தப்புலத்தைச் சார்ந்ததும் அதில் அடங்கும். குறிப்பாக பூமியின் காந்த விசையில் ஏற்படும் மாற் றத்தை உணர்ந்து தாம் செல்ல வேண்டிய இடத்தை இப்பறவைகள் கண்டறிந்து கொள்ளும். இவை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில், பற வைகளின் வான் வழிப் பயண உத்திகள், வயதான பறவைகளில் அதிகமாகக் காணப்படுவதும் உலகம் முழுவதும் உள்ள பறவையினங்கள் பன்னிரண்டு வான்வழிகளைப் பயன்படுத்துவதும் கண்டறியப்பட் டுள்ளன.

மேலும் வட அரைக் கோளத்திலுள்ள ஐரோப்பிய, வட அமெரிக்க, ரஷ்ய நாடுகளில் வருடா வருடம் ஓகஸ்ட், செப்டம்பர் முதல் பனிப்பொழிவு ஆரம் பித்து விடும். இதன் விளைவாகப் பறவைகளின் உணவுகள் பனியினால் மூடப்படும். அதனால் ஏற் படும் உணவுப் பற்றாக்குறையை தவிர்த்து உடல் சீதோஷண நிலையையும் பேணிக் கொள்வதற்காக அந்நாடுகளைச் சேர்ந்த பெரும்பாலான பறவைகள் ஆசிய, ஆபிரிக்க, அவுஸ்திரேலிய கண்ட நாடுக ளுக்கு குடிபெயர்கின்றன.

பொதுவாகப் பெரும்பாலான பறவைகள் குடி பெயர்வின் போது மிக நீண்ட தூரம் பயணிக்கக் கூடியனவாக உள்ளன. அதிலும் இனப்பெருக்கக் காலத்தை மிதவெப்பப் பகுதிகளில் அல்லது வட அரைக்கோளத்தில் கழிக்கின்ற பறவைகள், ஏனைய காலங்களில் வெப்ப வலயங்களை அல்லது தென் அரைக்கோளத்திலுள்ள மிதவெப்ப வலயப் பகுதி களை நாடிச் செல்லும். குறிப்பாக வடக்கு ஐரோப் பாவிலுள்ள சில பறவைகள், ஆபிரிக்காவிலுள்ள குளிர்கால இடங்களை நோக்கி 6,800 மைல் அல்லது அதனை விடவும் அதிகமான தூரம் பயணிக் கின்றன. இப்பறவைகள் தங்களுக்குள் ஒலிகளை எழுப்பி ஒன்றுடன் ஒன்று மோதாமலும், சரியான இடைவெளியுடனும், ஒரு குறிப்பிட்ட வேகத்துடனும் பறந்து செல்லக் கூடியனவாக இருக்கின்றன எனப் பறவையியல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.

உலகில் மிகவும் நீண்ட தூரம் பறக்கும் குடிபெய ரும் பறவையாக 'ஆர்ட்டிக்டேன்' விளங்குகின்றது. இது வட துருவ ஆர்க்டிக்கில் இருந்து ஐரோப்பா, ஆசியா, வட அமெரிக்கா கண்டங்களின் வழியே தென்துருவ அண்டாட்டிக்காவின் பனிப்பரப்புக்கு யில் வட அமெரிக்காவின் அலஸ்காவை சேர்ந்த பறவையொன்று சுமார் 12 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் பயணித்து அவுஸ்திரேலியாவுக்கு குடிபெ யர்ந்துள்ளமை கண்டறியப்பட்டது. அத்தோடு சீனாவிலுள்ள ஒரிரு பறவைகள் இந்தியா மற்றும் இலங்கையைக் கடந்து தென்னாபிரிக்காவுக்கு குடி பெயர்ந்து செல்லக் கூடியனவாக உள்ளன. சில பற வைகள் குடிபெயரும் போது 7 10 நாட்கள் எங்கும் தரித்து நிற்காது பயணத்தை மேற்கொள்ளும் இயல் பைக் கொண்டுள்ளன' என்கிறனர் பறவையில் நிபு ணர்கள்.

## உயிர் வாழ்வதற்காக கண்டம் விட்டு கண்டம் நோக்கிச் செல்லும் பறவைகள் மனித நடவடிக்கைகளால் இடைவழியில் கொல்லப்படுகின்ற பரிதாபம்!

குளிர்காலத்தில் குடிபெயரக் கூடிய பறவையாக உள்ளது. சுமார் ஒரு அடி நீளமுள்ள இப்பறவை, வாழ்நாளின் பெரும்பகுதியை பறப்பதிலேயே கழிக் கின்றது. இப்பறவை ஒரு முறை குடிபெயர்ந்து சென்று திரும்பி வர 70ஆயிரத்து 900 கி.மீ. பய ணிப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியாவில் 1263 பறவைகள் காணப்படுகின்றன. அவற்றில் 160 வகை பறவை கள் குடிபெயரக் கூடியனவாக உள்ளன. அண்மை

வருடாந்தம் சுமார் 250 பறவைகள் இலங்கைக்கு குடிபெயர்ந்து வருகின்றன. இப்பறவைகள் பெரும் பாலும் ஒவ்வொரு வருடமும் செப்டம்பர், ஒக்டோபர் நவம்பர் மாதங்களில் வருகை தருவதோடு மார்ச், ஏப்ரல் வரையும் இங்கு தங்கி இருக்கும். அதன் பின்னர் அவற்றின் பூர்வீக இடங்களுக்கு திரும்பி விடும் என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயி ரியல் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சம்பத் செனவிரத்ன சுட்டிக் காட்டியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகள், இமாலயம், அவுஸ்திரே லியா போன்ற பிரதேசங்களில் இருந்துதான் இலங்கைக்கு குடிபெயரும் பறவைகள் வருகை தருகின்றன. இப்பறவைகள் பிரதானமாக மூன்று வழிகள் ஊடாக நாட்டுக்குள் வருகை தருவதாக குறிப்பிடுகின்ற பறவையியல் நோக்குனர் பியல் மாரசிங்க, அவற்றில் ஒன்று வடபகுதியின் ஊடாக வருகை தருதல், இரண்டு காலி, மாத்தறை, ஹம் பாந்தோட்டை ஊடாக வருதல், மூன்று திருகோண மலை பிராந்தியத்தின் ஊடாக வருகை தருதல் ஆகி யனவே அந்த மார்க்கங்கள் என்கின்றார்.





இவ்வாறு வருகை தரும் குடிபெயரும் பறவை கள் உள்நாட்டிலுள்ள நீர்நிலைகளுக்கு அருகிலும் சதுப்பு நிலப்பகுதிகளிலும் பெரிதும் தங்கி இருக் கும். ஒரு சில பறவைகள் இலங்கையிலும் தமிழ் நாட்டிலும் மாறிமாறி தங்கி இருப்பதும் அவதானிக் கப்பட்டுள்ளது.

இவ்வாறு குடிபெயரும் பறவைகள் தம் பூர்வீக வாழிடங்களில்தான் இனப்பெருக்கத்தை மேற் கொள்ளும் என சில பறவையியல் ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். அதேவேளை ஒரு சில பறவை கள் குடிபெயர்ந்து தங்கி இருக்கும் பிரதேசங்களில் இனப்பெருக்கத்தை மேற்கொண்டு தம் இளம் உயி ரிகளுடன் பூர்வீக இடத்துக்கு திரும்பிச் செல்வதாக வேறு சில பறவையியல் அவதானிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குடிபெயரும் பறவைகளின் இறப்பு அண்மைக் காலமாக அதிகரித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 1.40 இலட்சம் முதல் 3.28 இலட்சம் பறவைகள் காற்று விசையாழிகள் மூலமாக உலகெங்கிலும் கொல்லப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதை விடவும் பெரிய ஆபத்து காற்றாலைகள் மற்றும் அதனுடன் இணைந்த மின்வழங்கல் முறைகளால் பறவைகளின் வாழ்விடங்களை மனிதன் அழித்து விடுவதாகும் என்கின்றனர் அமெரிக்க ஆய்வாளர் கள்.

அத்தோடு குடிபெயரும் பறவைகளை வேட் டையாடுதலும் அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது. அவற்றின் வாழிடங்களை அழித்தல் போன்ற நடவடிக்கைகளும் அதிகளவில் இடம்பெ றுகின்றன. இவை குடிபெயரும் பறவைகளுக்கு பெரும் சவாலாகவும் அச்சுறுத்தலாகவும் மாறியுள் ளன.

குடிபெயரும் பறவைகளையும் அவற்றின் இருப் பிடங்களையும் பாதுகாப்பது தொடர்பில் மக்கள் மத் தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில்தான் 2006 முதல் மே 08 ஆம் திகதி உலக குடிபெயரும் பறவைகள் உலக தினமாகப் பிரகனப்படுத்தப்பட்டு அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

ஆகவே குடிபெயரும் பற வைகளின் இருப்புக்கும் பாதுகாப்புக்கும் பங்களிப்ப தன் அவசியம் உலகளாவிய ரீதியில் உணரப்பட்டிருப்பது தெளிவாகின்றது. அதனால் பறவைகளைப் பாதுகாப்ப தில் ஒவ்வொருவரும் பங்கெ டுத்து கொள்வது அவசியம்.



**மர்லின் மரிக்கார்...**

# தமிழக சட்டமன்றத்துக்கு தெரிவான தாயகம் திரும்பிய இலங்கைத் தமிழர்

**இலங்கையில் இருந்து தாயகம் திரும்பிய தமிழரான பொன். ஜெயசீலன் கூடலூர் தனி தொகுதியில் அ.தி.மு.க சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருப்ப தன் மூலம், நீலகிரியில் தாயகம் திரும்பிய தமிழர்களின் முதல் எம்.எல்.ஏ என்ற பெருமையைப் பெற்றுள்ளார்.**



ஆங்கிலேயர்களின் தங்களது ஆசிய வருகைக்குப் பின் இந்தியா, இலங்கை, பர்மா, மலேசியா போன்ற நாடுகளில் பெருந்தோட்டங்களை நிறுவி தேயிலை, கோப்பி, இறப்பர் போன்ற பணப் பயிர்களை பெரு மளவில் சாகுபடி செய்தனர். இவற் றில் பணியாற்ற இலட்சக்கணக்கான தொழிலாளர்களை அந்தப் பகுதிகளில் குடியேற்றினர். இதேபோன்று தமிழ் நாட்டை பூர்வீகமாக கொண்ட மக்க ளையும் இலங்கையில் குடியேற்றி தோட்டப் பணிகளில் அமர்த்தினர்.

பின்னர் 1964 இல் இந்தியப் பிரத மர் லால் பகதூர் சாஸ்திரியும், இலங் கையின் பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கவும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்தனர். சிறிமாவோசாஸ்திரி என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையில் சுமார் 5 இலட்சம் மக்கள் இலங்கையில் இருந்து தங்களது சொந்த நாடான இந்தியாவுக்குத் திரும்பினர்.

இவர்களில் 3 இலட்சம் பேர் நீலகி ரியில் குடியேறினர். இந்த மக் களுக்காக கூடலூர், குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் தமிழக அரசு தேயிலைத் தோட்டங் களை நிறுவியது.

கடந்த 50 ஆண்டுகளாக இங்கு வாழ்ந்து வரும் இம்மக்களில் பலரும் பொருளாதாரத்தில் பின்தங் கிய நிலையிலேயே உள்ளனர். கூட லூரில் மட்டும் சுமார் 1.50 இலட்சம் மக்கள் உள்ளனர். திராவிட கட்சிகளின் வாக்கு வங்கியாக இருக்கும் இந்த மக் களுக்கு எந்தக் கட்சியும் அரசியலில் முக்கியத்துவம் வழங்கவில்லை என்ற குற்றச்சாட்டு இருந்து வந்தது.

இந்த நிலையில் முதன் முறையாக கூடலூரில் தி.மு.க,அ.தி.மு.க போன்ற முக்கிய கட்சிகள் தங்களின் வேட்பாள ராக தாயகம் திரும்பியவர்களை அறி வித்து களமிறங்கின. தி.மு.க சார்பில் காசிலிங்கமும், அ.தி.மு.க சார்பில் பொன்.ஜெயசீலனும் நேருக்குநேர் மோதினர். இதில் அ.தி.மு.க வேட்பாளர் பொன்.ஜெயசீலன் 64,496 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றுள்ளார். இதன் மூலம் தாயகம் திரும்பிய தமிழர்களில் நீலகிரியிலிருந்து சட்டமன்றத்திற்கு தெரிவாகியுள்ள முதல் நபர் என்ற பெருமையை அவர் பெற்றிருகிறார்.

இந்த வரலாற்று வெற்றி குறித்து பேசிய பொன்.ஜெயசீலன், ''என்னோட அம்மா,அப்பா ரெண்டு பேருமே தோட்டத் தொழிலாளர்கள்தான். எங்க குடும்பத்துல யாருக்கும் அரசியலில் பெரிய ஈடுபாடு கிடையாது. முதல் தலைமுறையா நான்தான் அரசிய லுக்கு வந்திருக்கேன். தாயகம் திரும் பிய எங்க மக்களில் நீலகிரி மாவட்டத் துல இருந்து நான்தான் முதல் ஆளா எம்.எல்.ஏவாக ஆக்கப்பட்டிருக்கேன். இது எங்க மக்களுக்கு கெடச்ச வெற்றி. எப்போதும் மக்கள் பக்கம் நின்று குரல் கொடுப்பேன். என்ன ஜெயிக்க வச்ச அத்தனை பேருக்குமே என்னோட நன்றி" என்றார்.

இவரது வெற்றி குறித்து பேசிய மலையக தமிழர் பேரவையைச் சேர்ந்த இராமச்சந்திரன், ''கட்சி வேறு பாடுகளைக் கடந்து, தாயகம் திரும்பிய தமிழ் மக்களுக்கு கிடைத்த வெற்றி யாக இதைப் பார்க்கிறோம். இது எங் களுக்கு கிடைத்த பெரிய அங்கீகாரம். இங்கு பாடுபடும் மக்களோட பிரச் சினையை எடுத்துச் சொல்ல நல்ல வாய்ப்பாக இருக்கும் என்று நம்புகி றோம்" என்றார்.

**மகிழ்ச்சிக் கொண்டாட்டத்தில் நீலகிரி மக்கள்**



# உடல் ஆரோக்கியம் பேணுவதற்கு நீரை எவ்வாறு அருந்த வேண்டும்?



**நாம் வாழ்வதற்கு நீர் அவசியம். உணவில்லாமல் சில நாட்கள் வாழலாம். ஆனால் நீரில்லாமல் மூன்று நான்கு நாட்களுக்கு கூட உயிர் வாழ முடியாது. உடலுக்குத் தேவையான ஊட்டச் சத்துகளை கடத்திச் செல்லும் ஊடகமாகவும், உடலின் பல தொகுதிகள் செயற்பட சுத்திகரிப்பு திரவமாகவும், உடம்பில் நச்சுப் பதார்த்தங்களை அகற்றும் நாளங்களை துப்வுரவு செய்யவும் நீர் பயன்படுகின்றது. அதனால் நீரை மனிதன் சரியாக அருந்தா விட்டால் உடல் ஆரோக்கியத்துக்கு பெரும் பாதிப்பு ஏற்படும்.**

ஒருவர் நாளொன்றுக்கு 23 லீற்றர் நீரை அருந்த வேண்டும் என கூற முடியாது. ஏனென்றால் மனிதர்கள் இயற்கையாகவே ஒரு வருக்கொருவர் வேறு பட்டவர்கள். வாழும் சூழல், உடல் உஷ்ணம், வயது, உடல் நிறை, ஈடு படும் செயல்பாடுகள், தொழில், காலநிலை போன்ற காரணிக ளால் அருந்தும் நீரின் அளவு மாறுபடுகிறது.

அதனால் நாம் ஆயுர்வேத வைத்திய முறைப்படி நீரை எவ்விதம் அருந்த வேண்டும் என்பதை அறிந்து கொள்வோம்.

நாம் சாதாரணமாக உணவை ஓரிடத் தில் அமர்ந்தே உண்கிறோம். ஆனால் நீரை அவ்வாறு அருந்துவதில்லை. அநேகமாக நின்றபடி அவசரமாக நீரை அருந்துகிறோம். அமர்ந்தபடி நீரை அருந்துவதன் மூலம் உடலில் நரம்பு மண்டலம் இலகுவடைவதோடு உணவு சீரணிப்பதும் இலகுவாகிறது.

சிறுநீரகத்தில் இரத்த சுத்திகரிப் பும் முறையாக நடைபெறும். நீரை விரைவாக அருந்தாமல் மிடறு மிடறாக மெதுவாக சுவாசித்தவாறு அருந்த வேண்டும். அதன் மூலம் உடலில் நீரின் அகத்துறிஞ்சல் இலகுவாக்கப்படுகிறது.

அத்துடன் நாம் அருந்தும் நீர் குறைந் தபட்ச அறைவெப்ப நிலையில் காணப் பட வேண்டும். அதிகளவு குளிர்ந்த நீரை அருந்துவதால் சமிபாட்டுக்கு தடை ஏற் படும். பிற்காலத்தில் மலச்சிக்கலையும் அப்பழக்கம் ஏற்படுத்தும்.

சூடான நீரைப் பருகுவதால் உடலின் நிறை குறைவடைவதோடு வலி மற்றும் வீக்க நிலைமையும் குறையும். மயக் கம், அதிக உஷ்ணம், வாந்தி, எரிச்சல், இரத்தத்தில் நச்சுத் தன்மை உள்ள போது நீரை அருந்துதல் நல்லது. ஆனால் வயிற்றுக் கோளாறு, நெஞ்சு வலி, தொண்டை அழற்சி, சளி உள்ள வேளைகளில் குளிர்ந்த நீரை அருந்தக் கூடாது.

ஆயுர்வேதத்தில் பல விதங்களில் சூடாக்கிய நீரை மசாலா மற்றும் மருந்து மூலிகைகளைப் பயன்படுத்தி சிகிச்சை அளிக்கும் முறை காணப்படுகிறது. அதன் பிரகாரம் சாதாரண நீர் ஆறு மணித்தியா லயங்களிலும்,சுட்டு ஆறிய நீர் மூன்று மணித்தியாலயங்களிலும், சூடான மூலி கைகள் அடங்கிய நீர் அவற்றிலுள்ள மூலிகைகள் மற்றும் மசாலாக்கள் கார ணமாக ஒன்றரை மணித்தியாலயத்தி லும் அகத்துறிஞ்சப்படுவதாக ஆயூர்வே தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு நாளும் காலையில் இளம் சூடான நீரை அருந்த முடிந்தால் உடம்பிலுள்ள நச்சு கள் வெளியேறி குடல் சுத்தமாகும்.

ஒரு குவளை நீருடன் சில துளிகள் எலுமிச்சை சாறு கலந்து அருந்துவ தன் மூலம் உணவு சமிபாடடைவதோடு, உடல் நிறை குறைவதற்கும், நோயெ திர்ப்பு சக்தியை அதிகரிப்பதற்கும், வைர ஸினால் பரவும் நோயை கட்டுப்படுத்து வதற்கும் உதவும்.

சில துளிகள் இஞ்சி சாற்றை ஒரு கோப்பை நீருடன் கலந்து அருந்துவ தால் சமிபாடு இலகுவாகும். உடல் குளிர் வடையும், நீரிழப்பை தடுப்பதோடு, நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

நறுக்கிய வெள்ளரிக்காய்களை நீரி லிட்டு அருந்தினால் உடல் குளிர்ச்சி அடைவதுடன் நீரிழப்பை தடுக்க முடியும். அழற்சியிலிருந்து மீளலாம். தற்போது மனித நடவடிக்கைகளால் நீர் அசுத்தமடைந்துள்ளது. அதனால் நீரை அருந்துவதற்கு முன்னர் அந்நீர் சுத்திகரிக்கப்பட்டு குழாய் மூலம் பெறப் பட்டாலும், நீண்ட காலம் இருப்பதால் குழாய்களில் தங்கியிருக்கும் அசுத்தங் கள் காரணமாக நீர் அசுத்தமடையலாம்.

முற்காலத்தில் நீரை தூய்மையாக்க பாவித்த முறைகளை நாம் இன்றும் உபயோகப்படுத்தலாம். அது உங்களது ஆரோக்கியத்துக்கு உதவியாக இருக் கும். செம்பு மற்றும் வெள்ளி பாத்திரங்க ளில் நீரை சேமித்தல் மிக சிறந்தது என ஆயூர்வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மருத்துவர்
**கயா லக்மாலி**
*சமூக சுகாதார அதிகாரி, மினுவாங்கொட*
**தம்மிக்க சுரன்ஜி பத்திரன...**
*(தமிழில்: வீ.ஆர்.வயலட்)*

# மக்கள் மகிழ்வுடன் வாழும் நீதி ஆட்சி மலர வேண்டும்

## தமிழக முதலமைச்சருக்கு அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து

ஈழத் தமிழ் மக்களின் நன்றிக் கடனுக்கு உரித்தான தமிழக மக்கள் நீடித்த மகிழ்வுடன் வாழ்வாங்கு வாழும் நீதி ஆட்சி மீண்டும் மலர வேண்டுமென்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தமிழக முதலமைச்சருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் முதலமைச்சராக நேற்று (07) பதவியேற்றுள்ள மு.க.ஸ்டாலினுக்கு அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே இலங்கையின் கடற்றொழில் அமைச்சரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார். வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

'காலம் ஒரு செங்கோலை எம் கையில் தரும். இது மறைந்தும் மறையாத தமிழகத்தின் ஒளிச் சூரியன். கலைஞரின் இலட்சிய நம்பிக்கை.

ஓய்ந்தறியா உங்கள் உழைப்பால் தமிழகத்தில் மறுபடியும் தி.மு.க. ஆட்சி மலர்ந்து கலைஞரின் கனவு நிறைவேறியுள்ளது. தமிழக மக்களின் மனங்களில் மட்டுமன்றி, அவர்களின் கனவுகளை வெல்லும் ஆட்சிப் பீடத்திலும் உங்களுக்கு சிம்மாசனம் கிடைத்துள்ளது.

ஈழத் தமிழர்களின் நீதியான உரிமைப் போராட்ட காலத்தில் அரசியல் ஏதிலிகளாக தமிழகம் வந்த எமது மக்களை அன்பால் அரவணைத்து வரவேற்றவர்கள் தமிழக மக்கள்.

எமது நன்றிக் கடனுக்கு உரித்தான தமிழக நீடித்த மகிழ்வுடன் வாழ்வாங்கு வாழும் நீதி ஆட்சி மறுபடியும் மலர வேண்டும். சமன் செய்து சீர்தூக்கும் செங்கோல் ஆட்சியென அது நிலவ வேண்டும். எமதும், உங்களதும், தமிழக மக்களினதும் ஆழ்மன விருப்பங்களே இன்று நிறைவேறியிருக்கின்றது.

முதல்முறையாக ஆட்சிப் பீடமேறும் உங்களுக்கு ஈழத் தமிழ் மக்கள் சார்பாகவும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## நீர்த்தேக்கத்தில் மூழ்கிய நபர் மாயம்; தீவிர தேடுதல்

ஓமந்தை விஷேட நிருபர்

வவுனியா பம்பைமடு பகுதியிலுள்ள நீர்தேக்கத்தில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

நேற்று வவுனியா பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள குறித்த நீர்த்தேக்கத்திற்கு மீன்பிடிப்பதற்காக 5 பேர் கொண்ட குழுவினர் சென்றுள்ளனர். இதன்போது நபர் ஒருவர் நீர்தேக்கத்தில் இறங்கிய நிலையில், நீரில் இழுத்து செல்லப்பட்டு மூழ்கியுள்ளார். இதனை அவதானித்த ஏனைய நபர்கள் அவரை நீருனுள் இறங்கி தேடியுள்ளனர். எனினும் அவரை மீட்கமுடியவில்லை.

## கொவிட் தடுப்பூசிகளை... 03ஆம் பக்க தொடர்...

கட்டமாக எஸ்ட்ரா செனேகா தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதற்கிணங்க அந்த தடுப்பூசிகளை மேலதிகமாக கொண்டுள்ள நாடுகளிடமிருந்து அதனை பெற்றுக் கொள்வதற்கு தேவையான பேச்சுவார்த்தைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் அடையாளம் காணப்படும் பிரதேசங்களை முடக்கி பயணத்தடைகளை விதித்து வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு உச்சளவில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமை தொடர்பிலும் அதிகாரிகள் தெளிவுபடுத்தினர்.

அனைத்து ஆஸ்பத்திரிகளிலும் தேவையானளவு வசதிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. வைரஸ் பரவலை தடுக்கும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பொது மக்களின் பூரண ஒத்துழைப்பு மிகவும் அவசியமென்றும் இதன் போது அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(ஸ)

## ஜனநாயக இடதுசாரி முன்னணியின் 'சுபீட்சத்தின் நோக்கு பிரதமரிடம் கையளிப்பு

ஜனநாயக இடதுசாரி முன்னணி வெளியிடும் 'சுபீட்சத்தின் நோக்கத்திற்கான மக்களை மையமாகக் கொண்ட வெளியீடு' முன்னணியின் தலைவர் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் நேற்று (07) அலரி மாளிகையில் வைத்து கையளித்தனர்.

தற்போதைய நாடு, மக்களை மையமாகக் கொண்ட அரசியல் வரலாறு, சுபீட்சத்தின் நோக்கிற்கு வழிவகுத்த பத்து கோட்பாடுகள் மற்றும் எதிர்கால நடவடிக்கை ஆகிய தலைப்புகளின் ஊடாக இந்த வெளியீட்டின் மூலம் ஜனநாயக இடதுசாரி முன்னணி பல விடயங்களை முன்வைத்துள்ளது. நல்லாட்சியின் போது இடம்பெற்ற உள்ளூர் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமான விடயங்கள், ஏற்றுமதி பொருளாதார வீழ்ச்சிக்கான காரணிகள், நாட்டின் நிதி அமைப்பின் வீழ்ச்சிக்கான காரணிகள், உள்ளூர் வர்த்தகம் வீழ்ச்சி, பொருட்களின் விலையேற்றம், வேலையின்மை மற்றும் வறுமை நிலையின் உயர்வு ஆகிய விடயங்கள் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் கயாஷான் நவனந்த உள்ளிட்ட கட்சியின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## மக்களுக்கு 2வது... 03ஆம் பக்க தொடர்...

தயாரிக்கப்படும் தடுப்பூசி இந்தியாவுக்கே போதாமல் உள்ளது. உலக சுகாதார ஸ்தாபனத்தின் கொவெக்ஸ் நிறுவனத்திற்கு கூட அந்த தடுப்பூசியை பெற்றுக் கொள்ள முடியாத நிலையே காணப்படுகிறது. அத்தகைய சூழ்நிலையிலும் இலங்கை அரசாங்கம் இந்தியாவின் சீரம் நிறுவனத்திடம் முடிந்தளவு தடுப்பூசிகளை பெற்றுத்தருமாறு கோரியுள்ள போதும் அதனை வழங்க முடியாத நிலை அந்த நிறுவனத்திற்கு காணப்படுவதாகவும் ஜனாதிபதியின் ஆலோசகர் லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார். தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு போதிய நிதி அரசாங்கத்திடமுள்ளது என்பதை சுட்டிக்காட்டியுள்ள அவர், தடுப்பூசிகளை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளில் அரசாங்கம் தொடர்ச்சியாக முனைப்புடன் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் சீரம் நிறுவனத்திடமிருந்து தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ள தாமதம் ஏற்படுவதால், அரசாங்கம் வேறுசில நாடுகளிடமிருந்து அதனைக் கொள்வனவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.(ஸ)



## நாளாந்த நோயாளர் எண்ணிக்கை இரண்டாயிரத்தைக் கடக்கலாம்

### நாட்டில் அனைத்து ஆஸ்பத்திரிகளும் தயார் நிலையில்; தொற்று நோய் பிரிவு விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர

லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்வரும் சில தினங்களில் நாட்டில் அன்றாட கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டாயிரத்தை விட அதிகரிக்கலாம் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் நேற்று கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞான பிரிவின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் சுத்தம் சமரவீர ,மேற்படி வைரஸ் தொற்று நோயாளர்களின் அதிகரிப்புக்கு பல்வேறு காரணங்களை குறிப்பிடலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

பிரித்தானிய திரிபு வகை கொரோனா வைரஸ் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட கூட்டம் ஒன்று நேற்றைய தினம் சுகாதார அமைச்சின் கல்வி மேம்பாட்டுப் பிரிவில் நடைபெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.,

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த ஒரு வார காலமாக நாட்டில் தினமும் 1,500 க்கும் மேற்பட்ட கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்கள் இனங்காணப்பட்டு வருகின்றனர்.அவர்கள் அனைவரும் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர். எனினும் அந்த எண்ணிக்கை 2000 விட அதிகரிப்பதற்கும் வாய்ப்பு உண்டு. தற்போதைய நிலை எவ்வாறு மாற்றமடையும் என்பதை அறிவதற்கு மேலும் இரண்டு தினங்கள் செல்லலாம்.

சுகாதார கட்டமைப்பு என்ற ரீதியில் விரைவாக தொழிலாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு சிகிச்சை அளித்தல் மறுபுறம் நோய் பரவுவதைத் தடுப்பதற்காக பொதுமக்கள் வழங்கும் பங்களிப்பு என இரு காரணங்களை குறிப்பிட முடியும். அதற்கிணங்க நிலைமைகளை சமாளிக்கும் வகையில் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக வார்ட்டுகளை ஏற்பாடு செய்யுமாறு அனைத்து வைத்தியசாலைகளுக்கும் அரசாங்கத்தினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

## புர்கா தடை முஸ்லிம்களுக்கு... 03ஆம் பக்க தொடர்...

எதிர்காலத்தில் வெளிநாட்டு சக்திகளும் உள்ளூர் ஏஜெண்டுகளும் பிற பயங்கரவாதிகளும், குற்றவாளிகளும் சமூக விரோதிகளும் புர்காவை தமது மிலேச்சத்தனமான செயல்களுக்கு பயன்படுத்தி பாரிய அழிவுகளை ஏற்படுத்தலாம். முகத்தை மறைத்தவர்களாக பயங்கரவாத நடவடிக்கை, தற்கொலை தாக்குதல், குண்டு வெடிப்பு இன்னோரன்ன கொடூர கொலை பாதக செயல்களில் ஈடுபடலாம். அதே போல புர்கா அணிந்து பல்வேறு குற்ற செயல்களிலும் ஈடுபடலாம். இவை நேரடியாகவும் மறைமுகமாகவும் இங்கு வாழும் எமது முஸ்லிம் மக்களை பாதிக்கும் என்பது தெளிவான உண்மையாகும்.

புர்கா இன்றைய கால கட்டத்தில் அநாவசியமான ஒன்றாகும்.தமது அரசியலுக்காகவும் வேறு சுய இலாபங்களுக்காகவும் தவறான புரிதலினாலும் பலரும் அதனை சர்ச்சைக்குரிய ஒன்றாக மாற்றியுள்ளமை கண்டிக்க வேண்டிய ஒன்று.அந்த வகையில் முஸ்லிம் மதத்தலைவர்கள், முஸ்லிம் அரசியல் தலைவர்கள் தாமாகவே அரசாங்கத்திடம் புர்காவை தடைசெய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்திருக்க வேண்டும். ஆனால் சமூக பழியை அஞ்சி அவர்கள் மௌனம் காக்க, தற்போது அரசாங்கமே தீர்க்கமாக கலந்தாலோசித்து புர்காவை தடை செய்துள்ளது. இதனால் எமது முஸ்லிம்களுக்கு பாதுகாப்பே அன்றி அவர்களுக்கு எதிரான ஒரு செயலல்ல என்பதே உண்மையாகும்.

எமது பாதுகாப்பும் அமைதியான வாழ்வும் பிரதானமானது என்பதை கருத்தில் கொண்டு ஏனைய சகோதர சமூகங்களோடு ஒன்றித்து இன மத, மொழி பேதமின்றி இலங்கை தாய் மக்கள் என்ற வகையின் அனைவரும் ஒற்றுமையாக பயணித்து சமாதான சக வாழ்வை நிலை நிறுத்தும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கை தமிழர்...

மற்றும் கால்நடை வளர்ப்புத் துறை அமைச்சராக பதிவியேற்றுள்ள அனிதா ஆர். இராதாகிருஸ்ணன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் தெரிவித்துள்ளார்.

தமிழகத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள திராவிட முன்னேற்றக் கழகம் தலைமையிலான கூட்டணி அரசாங்கம் நேற்று பதவியேற்றது. தமிழகத்தின் புதிய மீன்பிடித்துறை அமைச்சர் அனிதா இராதாகிருஸ்ணனுடன் தொலைபேசி ஊடாக உரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தன்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்தார்.

எதிர்காலத்தில் கடற்றொழிலாளர் சார்பான விவகாரங்களில் இருவரும் இணைந்து பணியாற்ற வேண்டுமெனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவரிடம் தெரிவித்தார்.

இதன்போது, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வாழ்த்துக்களுக்கு நன்றி தெரிவித்த அனிதா ஆர். இராதாகிருஸ்ணன், இலங்கை தமிழ் மக்கள் தொடர்பாக திராவிட முன்னேற்றக் கழகம் தொடர்ந்தும் அக்கறை செலுத்தி வருவதாகவும் எதிர்காலத்திலும் இலங்கை தமிழ் மக்களின் நலன்களில் தி.மு.க. அக்கறை செலுத்துமெனவும் தெரிவித்துள்ளார்.

## சட்ட மா அதிபராக...

இத் தீர்மானம் அடுத்த வாரம் நடைபெறவுள்ள பாராளுமன்ற பேரவையில் பரிசீலனை செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## ஐந்து மாவட்டங்களில்...

நுவரெலியா மாவட்டத்தின், ஹங்குராங்கெத்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரத்மட்டிய கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. களுத்துறை மாவட்டத்தின் பாணந்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட் பட்ட நாரம்பிட்டிய, பின்வத்த மேற்கு கிராம சேவகர் பிரிவுகளும், பண்டாரகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பண்டாரகம கிழக்கு கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சவேந்திர சில்வா மேலும் அறிவித்துள்ளார். அத்துடன் கொழும்பு மாவட்டத்தின் பாதுக்க பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உக்கல கிராம சேவகர் பிரிவும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் திஸ்ஸவீரசிங்கம் சதுக்கம் கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் வத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அல்விஸ் வத்த பகுதி கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவ தளபதி தெரிவித்துள்ளார்.

## ஹெரோயினுடன் கைதான...

இதன் போது சுமார் இரண்டு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாய் பெறுமதியான 13 பொதிகளாக ஒவ்வொன்றும் 18.01 கிராம் அளவு கொண்ட

ஹெரோயின் மீட்கப்பட்டதுடன் இப் போதைப் பொருட்களை தம் வசம் வைத்திருந்த தந்தை மற்றும் மகன் இருவரும் கைதாகினர்.

இவ்வாறு கைதாகிய இருவரையும் கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் இவ்வாறான போதைப் பொருட்கள் வியாபாரம் செய்பவர்கள் மற்றும் அவற்றை வாங்கி உபயோகிப்பவர்கள் சம்பந்தமாக தகவல் ஏதும் கிடைக்கப் பெற்றால் கல்முனை பொலிஸ் நிலையத்திற்கும் அறிவிக்குமாறும் பொதுமக்களிடம் பொலிஸார் கேட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இப்பகுதியில் போதைப்பொருளுடன் நால்வர் கைதாகி 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## காவல்படை உத்தியோகத்தர்...

பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் அழைத்துள்ளார்.

கொழும்பு நாலாம் மாடியில் அமைந்துள்ள பயங்காரவாத விசாரணைப் பிரிவின் அலுவலகத்துக்கு எதிர்வரும் 11ஆம் திகதி காலை 09 மணிக்கு சமுகமளிக்குமாறு 05 பேருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகரத்தை தூய்மையான நகரமாகப் பேணுவதற்காக மாநகர சபை ஊழியர்கள் ஐவர் மாநகர காவலர்களாக தனியான சீருடை அணிந்து கடந்த மாதம் கடமைக்கு அமர்த்தப்பட்டனர்.

எனினும் உத்தியோகத்தர்கள் அணிந்திருந்த சீருடை தமிழீழ விடுதலைப் புலிகளின் காவல்துறையின் சீருடைக்கு ஒத்தது என சர்ச்சை எழுந்தது. இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ஆறு இலட்சம் "எஸ்ட்ரா...

கோட்டாபய ராஜபக்ஷ, உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் இலங்கை மக்களுக்கு இரண்டாவது கட்டமாக வழங்குவதற்கான ஆறு லட்சம் தடுப்பூசியை பெற்றுக்கொடுப்பதற்கு உதவுவதாக தம்மிடம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இரண்டாம் கட்ட தடுப்பூசியை பெற்றுக் கொடுப்பதற்காக உலகளாவிய ரீதியில் 20 மில்லியன் எஸ்ட்ரா செனேகா தடுப்பூசிக்கான தேவை உள்ளதாகவும் ஜனாதிபதி அந்த செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அவசர நிலைமையில் உபயோகிப்பதற்காக சீன தயாரிப்பான சைனோபாம் தடுப்பூசி தொடர்பில் எதிர்வரும் சில தினங்களில் உலக சுகாதார நிறுவனம் அனுமதி வழங்கலாம் என்ற தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது கையிருப்பிலுள்ள 06 இலட்சம் சைனோபாம் தடுப்பூசிகளை மக்களுக்கு வழங்க முடியுமென்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் முதலாவது அலையை கட்டுப்படுத்துவதில் இலங்கை வெற்றிகரமாக செய்யப்பட்டமைக்கு உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் பாராட்டு தெரிவித்துள்ளதாகவும் அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## காரில் பயணித்த...

விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் இருவர் உயிரிழந்தனர்.

இச் சம்பவம் வியாழக்கிழமை (06) இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பைச் சேர்ந்த 31 வயதுடைய பரமேஸ்வரன் தனுஜன், 31 வயதுடைய டினேகா என்பவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

கொழும்பிலிருந்து இந் நபர் வியாழக்கிழமை இரவு அவரது உறவினரான பெண் ஒருவரை ஏற்றிக் கொண்டு மட்டக்களப்பு நோக்கி காரில் பயணித்துள்ளனர். வாழைச்சேனை கொழும்பு பிரதான வீதியின் மியான்குளம் பகுதியில் வேகக்கட்டுப்பட்டை இழந்த கார் வீதியை விட்டுவிலகி விபத்துக்குள்ளானது.

இதனையடுத்து அந்த பகுதியில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் உயிரிழந்த நிலையில் இருந்த இருவரையும் காரிலிருந்து மீட்டு வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இலங்கையில் 'பைசர்'...

அதற்கிணங்க வெளிநாடுகளில் இருந்து 50 லட்சம் பைசர் பயோஎன்டெக் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இத்தடுப்பூசி, நாட்டில் அவசர தேவைகளுக்கு பயன்படுத்துவதற்காக அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள மூன்றாவது தடுப்பூசியாகும் என்பதை குறிப்பிட்டுள்ள இராஜாங்க அமைச்சர் கொவிஷீல்ட், ஸ்புட்னிக் வி தடுப்பூசிகளை உபயோகப்படுத்த முன்பும் அதற்கான அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டமை தொடர்பிலும் தெரிவித்துள்ளார். அதேவேளை எஸ்ட்ரா செனேகா தடுப்பூசியை கொள்வனவு செய்வதில் நிலவும் நெருக்கடி நிலைமை தொடர்பிலும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ஸ)

## சுமார் 20 இலட்சம் பேஸ்புக் ...

இவ்வாறான கணக்குகளை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்த, அரச நிறுவனங்களினூடாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வழக்கத்திலுள்ள சட்டத்திற்கமைய வேலைத்திட்டம் ஒன்றை வகுப்பதற்கு நீதி அமைச்சர் அலி சப்ரியும் தானும் இணைந்து அமைச்சரவை பத்திரம் ஒன்றை முன் வைத்திருப்பதாக அவர் குறிப்பிட்டார். இதற்கு அனுமதி கிடைக்கப் பெற்றதும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

உரிமையாளர்கள் இல்லாத முகநூல் கணக்குகளின் மூலம் பயங்கரவாதம், அடிப்படைவாதம் மற்றும் இனவாதத்தை தூண்டும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இளம் சந்ததியினரை வழி கெடுக்கும் பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளை தூண்டுவதற்கும் இது வழி வகுப்பதாக கண்காணிக்கப்பட்டுள்ளது.

இதன்படி தேசிய பாதுகாப்பையும் சிறந்த சமூக கட்டமைப்பையும் வழி நடத்தி செல்லும் பொருட்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ஊடக அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டை ஒருபோதும்...

நிகழ்வின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதைத் தெரிவித்துள்ளார்.

மட்டுப்படுத்தப்பட்ட உறுப்பினர்களின் பங்கேற்புடன் காணொளி தொழில்நுட்பத்தின் ஊடாக குறித்த நிகழ்வு அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்றது.

## நாடு முழுவதும் இன்று மாலை...

பிரதமரின் எண்ணக்கருவிற்கு அமைய இலங்கையிலுள்ள சகல மதத் தலங்களிலும் வழிபாட்டு பிரார்த்தனைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பிரதமரின் இந்து விவகாரங்களுக்கான இணைப்பாளர் கலாநிதி சிவ சிறி இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் இந்து ஆலயங்கள் அனைத்திலும் இன்று மாலை 5.46 மணியளவில் மிருத்யுஞ்சய ஹோமம் குறிப்பாக பஞ்ச ஈஸ்வர தலங்களிலும் நிகழ்த்தப்படும். கொரோனா அச்சுறுத்தலால் பூஜை வேளையில் அனைவரும் வீட்டிலிருந்தவாறே பிரார்த்தனை செய்து, தீபம் ஏற்றி வழிபடுவது சிறந்தது.

கொரோனா இலங்கையை விட்டு நீங்க வேண்டும். முழு உலகத்தை விட்டும் நீங்க வேண்டும். கொரோனாவால் பாதிப்படைந்தவர்கள் சுகமடைய வேண்டும். எல்லோரும் வளமான வாழ்க்கையை பெற வேண்டும் என்று இறைவனை மனதார நாம் அனைவரும் ஒருமித்து பிரார்த்திப்போம். இந்த பிரார்த்தனை மூலம் நாங்கள் இந்த கோரோனாவிலிருந்து விடுபட வேண்டும் எல்லோரும் சுபீட்சமாக வாழ வேண்டும் என்ற பிரார்த்தனையாக இது அமையட்டும்.

சகல ஆலயங்களிலும் இன்று மாலை 5.46 மணியளவில் விசேட பூசைகள் நடைபெறும். அனைவரும் தீபமேற்றி பிரார்த்தித்து, இந்த மிருத்யுஞ்சய ஹோமம் நடைபெறும் போது பக்தி பூர்வமாக பிரார்த்தனை செய்யவும்.

இதற்கான அறிவுறுத்தலை இந்து கலாசார திணைக்களம் அறிவித்துள்ளதாக புத்தசாசன, மத விவகார மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சருமான பிரதமரின், இந்த மத அலுவல்கள் விவகார இணைப்பாளர் கலாநிதி சிவ சிறி இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

## பாடசாலைகள் அனைத்தும்...

போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள தீவிர கொவிட் பரவல் நிலைமையை கருத்திற்கொண்டு பாடசாலைகள், முன்பள்ளிகள், பிரிவெனாக்கள், மேலதிக வகுப்புக்கள் மற்றும் அனைத்து பல்கலைக்கழகங்களையும் மூடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கல்வி நடவடிக்கைகளை தொடர்ந்து கொண்டுசெல்வதற்கு அரசாங்கம் தெளிவான நிலைப்பாடொன்றை கொண்டுள்ள போதிலும் மாணவர்களின் சுகாதார பாதுகாப்புகள் குறித்து அக்கறை கொண்டுள்ளது. சுகாதார நிலைமைகள் வழமைக்கு திரும்பும்வரை பாடசாலைகளை ஆரம்பித்திருக்காதிருக்க எதிர்பார்ப்பதுடன், பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும் போது குறைந்தபட்சம் மூன்று நாட்களுக்கு முன்னர் அறிவிக்க எதிர்பார்க்கிறோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் தீர்மானத்திற்கு அமைய நாட்டில் உள்ள அனைத்து கத்தோலிக்க பாடசாலைகளையும் மறு அறிவித்தல் வரை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கத்தோலிக்க ஆயர் இல்லம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





இறக்குவானையில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட கடைகளை பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் நேரில் சென்று பார்வையிட்டு, அவர்களுக்கு அரசாங்கத்தின் உதவியை வழங்க ஏற்பாடுகள் செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

## முடக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு உதவ முன்வரவேண்டும்

மாவத்தகம நிருபர்

கொவிட் 19 அச்சம் காரணமாக முடக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் தொழில் வாய்ப்பின்றி வாழும் முஸ்லிம் குடும்பங்களுக்கு புனித நோன்பு பெருநாளைக் கொண்டாடுவதற்கான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று குருநாகல் மாநகர சபை உறுப்பினர் அசார்தீன் மொஹினுதீன் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து கருத்து தெரிவிக்கையில்,

தற்போது நிலவும் கொரோனா தொற்றின் மூன்றாம் அலையினால் குருநாகல் மாவட்டத்தில் சில கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன. இப்பிரதேசத்தில் உள்ள முஸ்லிம்கள் ரமழான் மாதத்தில் புனித நோன்பை நோற்று வருகின்றனர். இன்னும் ஒரு சில நாட்களில் நோன்பு பெருநாளை முஸ்லிம்கள் கொண்டாடவுள்ளனர். இதன் போது முடக்கப்பட்டுள்ள பிரதேசங்களிலுள்ள முஸ்லிம்கள் தத்தம் வீடுகளில் இருந்து நோன்பு பெருநாளைக் கொண்டாடத் தயாராகி வருகின்றனர். எனினும் அவர்கள் மனசந்தோசத்துடன் பெருநாளைக் கொண்டாட முடியாத ஒரு அசாதாரண சூழ் நிலையில் உள்ளனர்.

குறிப்பாக இவர்கள் தங்களுடைய பிள்ளைகளுக்குத் தேவையான புத்தாடைகளையோ மற்றும் உணவுப் பொருட்களையோ பெற்றுக் கொள்ள முடியாத ஒரு நிலையில் உள்ளனர். இந்த சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு தேவையான பெருநாள் உடைகளையும் நிவாரண உதவிகளையும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரியினால் முன்னெடுக்கப்பட வேண்டும்.

குருநாகல் மாவட்டத்தில் தித்தல் கால, உடபத்தாவ. குளியாப்பிட்டிய போன்ற பிரதேசங்கள் உள்ளிட்ட சில கிராம சேவக பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மை சமூகத்துடன் குறிப்பிட்டளவு முஸ்லிம் குடும்பத்தினர்களும் சேர்ந்து வாழ்கின்றனர்.

# தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் முப்பது பேருக்கு கொரோனா

தலவாக்கலை குறூப் நிருபர்,
ஹற்றன் சுழற்சி நிருபர்

நுவரெலியா பிரதேச செயலகத்திற்குட்பட்ட சென்கூம்ஸ் கிராம அலுவலகர் பிரிவில் நேற்று தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ஜனத் அபேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

சென்கூம்ஸ் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் 30 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில் அந்த பகுதிக்குள் உட்பிரவேசிக்கவும் அங்கிருந்து வெளிச் செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த பயணத்தடை மீள்அறிவிக்கும் வரை அமுலில் இருக்கும் என லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்துள்ளது. சென்கூம்ஸ் தேயிலை ஆராய்ச்சி நிலையத்தில் கடந்த 2 நாட்களுக்கு முன்னர் அங்கு வேலை செய்யும் உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டதையடுத்து அங்கு வேலை செய்யும் 40 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளுக்கமைய அதில் 30 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.



தொற்றுக்குள்ளான அனைவரையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர். இதனையடுத்து இப்பகுதி முடக்கப்பட்டுள்ளதாக லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ஜனாத் அபேகுணவர்தன மேலும் தெரிவித்துள்ளார்.

# இரசாயன உரப் பயன்பாடு தடையால் தோட்ட தொழிலாளர்களுக்கு பாதிப்பு

### ஜனாதிபதியின் தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டும்



இரசாயன உரப் பயன்பாடு தடை செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்துள்ள தீர்மானத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவரும் பெருந்தோட்ட பிராந்தியத்துக்கான பிரதமரின் இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தத் தடை உத்தரவால், ஏனைய துறைகள் எதிர்நோக்கும் பாதிப்பை விட, தேயிலைத் தொழிற் துறையே பெரும் பாதிப்பை எதிர்நோக்கும், இதனால், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான வேலை நாட்கள் குறைக்கப்பட வாய்ப்புள்ளது. அவ்வாறு இடம்பெறுமாயின், ஆயிரம் ரூபாய் நாள் சம்பள அதிகரிப்பு பெற்றுக்கொடுக்கப்பட்டமை பயனற்றதாகிவிடும்.

இரசாயன உரங்களைத் தேயிலைத் தோட்டங்களுக்கு போடும் பட்சத்திலேயே, அதிகளவு தேயிலைக் கொழுந்துகள் துளிர்விடத் தொடங்கும். அவ்வாறு கொழுந்து அதிகமாகக் காணப்படுவதால், தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்புகளும் எவ்வித மாற்றமுமின்றி வழங்கக்கூடியதாக இருக்கும்.

அத்துடன், ஒரு நாளைக்கு அவர்கள் பறிக்கவேண்டிய தேயிலைக் கொழுந்தின் அளவையும் நாள்தோறும் பறிக்கக்கூடியதாக இருக்கும்.

“மாறாக, இயற்கை உரத்தைப் பயன்படுத்தினால், இயற்கை உரம் பயன்பாட்டுக்கான சான்றிதழைப் பெற்றுக்கொள்ளவே, நான்கு ஆண்டுகளாகும். அத்துடன், கொழுந்து விளைச்சலும் மிகக் குறைவாகவே காணப்படும்.

அவ்வாறு விளைச்சல் குறைவாகக் காணப்படும் பட்சத்தில், தேயிலைத் தோட்டங்களைப் பராமரிப்பதில், பெருந்தோட்ட நிறுவனங்கள் பாரிய சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும். இது, பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பாதகமாக அமைந்துவிடும்.

“அது தவிர, இயற்கை உரத்தில் விளைச்சல் செய்யப்படும் தேயிலையின் விலை, தற்போது பெற்றுக் கொள்ளும் சாதாரண தேயிலையின் விலையை விட மூன்று மடங்கு அதிகமாகும்.

இதனால் எதிர்காலத்தில், சாதாரண மக்கள் தேயிலைப் பயன்பாட்டைத் தவிர்க்க வேண்டிய சூழ் நிலையும் ஏற்படலாம். இவ்வாறிருக்கும் பட்சத்தில், அரசாங்கத்தின் இரசாயன உரம் தொடர்பான தீர்மானம், தேயிலைத் தோட்டச் செய்கைக்கு ஏற்றதாக இருக்காது.

அரசாங்கத்தின் இந்த முடிவில், தேயிலைத் தோட்டங்களின் உற்பத்தி மாத்திரமன்றி, மலையக மக்களின் வாழ்வாதாரமும் அடங்கியுள்ளது.

இதனால் இவ்விடயங்களைக் கருத்திற்கொண்டு அரசாங்கம் நல்லதொரு தீர்மானத்தை எடுக்க வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினால் ரூ.4200.00 அபராதம்

கண்டி தினகரன் சுழற்சி நிருபர்

மத்திய மாகாணத்தில் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறிய 42 பஸ்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த நாட்களில் அதிகரித்து வரும் கொவிட் தொற்று காரணமாக பஸ்களில் மட்டுப்படுத்தப்பட்ட பயணிகள், சமூக இடைவெளி, முககவசம் அணிந்திருத்தல் போன்ற கொவிட் 19 சுகாதார விதிமுறைகளை பேணவேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

எனினும் சில பஸ்களில் அதிகளவில் பயணிகளை ஏற்றிச் செல்லுதல், சமூக இடைவெளி பேண வேண்டும் என்ற சட்டத்திட்டங்களுக்கமைவாக பஸ் சேவைகள் இயங்கிக்கொண்டுள்ளபோதும் விதிகளை மீறிய 42 பஸ்கள் விசேட பொலிஸ் பிரிவினால் கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களுக்கு மூன்று நாட்களில் ரூபா. 4200.00 அபராதப் பணம் செலுத்த வேண்டும் என தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் இருந்து புறநகர்ப் பகுதிகளுக்குச் செல்லும் பஸ்களில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறி பயணிகள் அழைத்துச் செல்வதாக செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

## இரத்தினபுரி மாவட்டத்தில் கொவிட் சிகிச்சை நிலையங்கள் அதிகரிப்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

மூன்றாவது கொவிட் 19 அலை தீவிரமாக பரவி வரும் நிலையில் இரத்தினபுரி மாவட்டத்தில் மேலும் பிரதேச சிகிச்சை மையங்களை அமைக்க மாவட்ட கொவிட் கட்டுப்பாட்டு செயலணி தீர்மானித்துள்ளது.

இதற்கிணங்க தற்போது சிகிச்சை நிலையங்களாக பயன்படுத்தப்பட்டு வரும் எம்பிலிபிட்டிய தலைத்துவப் பயிற்சி நிலையம் பலாங்கொடை சமுர்த்திப் பயிற்சி நிலையம், காவத்தைப் பயிற்சி நிலையம் ஆகியவற்றுக்கு மேலதிகமாக பல பிரதேச வைத்தியசாலைகள் சிகிச்சை நிலையங்களாக மாற்றப்பட்டுள்ளதாக சப்ரகமுவ மாகாண சுகாதார அத்தியட்சகர் கபில கன்னங்கர நேற்று தெரிவித்தார்.

இதற்கிணங்க சந்திரிகாவெவ கல்தோட்டை, பலாங்கொடை இம்புல்பே, கலவான, நிவித்திகல, எகலியகொட இம்புல்பே, இறக்குவானை ஆகிய வைத்தியசாலைகளும் மேலும் பல பொது கட்டடங்கள் பலவும் துணை சிகிச்சை நிலையங்களாக நோயாளர்களுக்கான கட்டில்கள் மற்றும் உபகரண வசதிகளுடன் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## நுவரெலியா மாவட்டத்தில் புதிதாக 43 பேருக்கு கொரோனா

ஹற்றன் சுழற்சி நிருபர்

நுவரெலியா மாவட்டத்தில் நேற்று 43 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கினிகத்தேன சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும், கந்தபளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நால்வருக்கும், கொத்மலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நால்வருக்கும், லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் வைரஸ் தொற்றியுள்ளது.

அத்துடன், நோர்வூட் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவருக்கும், நுவரெலியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 16 பேருக்கும், பூண்டுலோயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 15 பேருக்கும் வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

# மாகாண சபைத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தலைமையில் மாகாண சபைத் தேர்தல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

மேலும் இக்கலந்துரையாடலில் தொகுதிவாரியான தேர்தல் முறைமையில் எவ்வாறு மலையக மக்களின் பிரதிநிதித்துவம் அமைய வேண்டும் என்பது தொடர்பாக முழுமையாக கலந்துரையாடப்பட்டது.

அத்தோடு இந்திய வம்சாவளி மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சகல மாவட்டங்களிலும் தொகுதிகள் அமைத்து அதனை செயற்படுத்துவதற்கான அறிக்கையை இ.தொ.கா சார்பில் தயார் செய்வது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.



இக்கலந்துரையாடலில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி ராமேஸ்வரன், பிரதமரின் பெருந்தோட்டங்களுக்கான இணைப்புச் செயலாளர் செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் பிரதி தலைவர் அனுஷா சிவராஜா உட்பட முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

## பலாங்கொடை பிரதேசத்தில் 153 கிலோ வெள்ளைச் சந்தனம் மீட்பு

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

பலாங்கொடை பிரதேசத்தில் 153 கிலோ வெள்ளைச் சந்தனம் மீட்கப்பட்டுள்ளது.

பலாங்கொடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.எம்.ஆர்.கே.பி. பாலசூரியவுக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து பலாங்கொடை விக்கிலிய போவத்த பிரதேசத்திலுள்ள வீடொன்றை பரிசோதனை செய்த போது நேற்று முன்தினம் இவை மீட்கப்பட்டுள்ளன.

பலாங்கொடை பிரதேசத்தில் ஒரே இடத்தில் அதிகளவு வெள்ளை சந்தனம் மீட்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் 40 வயதான சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளை சந்தனம் விற்பனைக்காக பொதி செய்யப்பட்டு அடுக்கி வைக்கப்பட்டிருந்ததாகவும் இவை பிரதேசத்தை அண்மித்த காடுகளிலிருந்து சட்டவிரோதமாக வெட்டப்பட்டவை எனவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

பலாங்கொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# கிழக்கின் குரல்



# கல்முனை வடக்கு செயலகத்தை தரம் உயர்த்தும் வரை கூட்டமைப்பு ஓயாது

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்

(மண்டூர் குறூப் நிருபர்)

கல்முனை வடக்கு தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்பதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது என, அக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் கடந்த 30, வருடங்களுக்கு மேலாக தரம் உயர்த்தப்படாமல் உப செயலகமாகவே இயங்கி வருகிறது. கடந்த ஆறு தடவைகள் பாராளுமன்ற பொதுத்தேர்தல்கள் இடம்பெற்று ஆட்சியமைத்த அனைத்து ஆட்சியாளர்களுக்கும் அப்போது இருந்த தமிழர் விடுதலை கூட்டணியாக இருக்கலாம் இப்போதுள்ள தமிழரசு, தேசியக் கூட்டமைப்பாக இருக்கலாம் தொடர்ச்சியாக கல்முனை தமிழ் பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி வந்தமை எல்லோருக்கும் தெரிந்த விடயமே.



ஆனால் சில இஸ்லாமிய அரசியல் தலைவர்களின் எதிர்ப்புகளாலும் பாராளுமன்ற வாக்கெடுப்புகளில் ஆட்சியாளர்களுக்கு ஆதரவு தேவைப்பட்டதாலும், கல்முனை தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை தமிழ்தேசிய அரசியல் தலைமைகள் முயற்சி எடுத்தும் உதாசீனம் செய்து ஏமாற்றியதே வரலாறு.

கடந்த 2015, ல் ஆட்சியமைத்த நல்லாட்சி காலத்திலும் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்வது தொடர்பாக என்றும் இல்லாத வகையில் பல முன்னேற்றங்களை கண்டிருந்தது. பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க வேண்டுமென்று இறுதி நேரத்தில் அதை செய்வதற்காக பூரண அதிகாரங்கள் இருந்த போதும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு நம்பிக்கையை ஊட்டி இறுதியில் நம்பிக்கை துரோகம் இழைத்துவிட்டார் அதனால் அந்த அரிய வாய்ப்புகளும் இல்லாமல் போய்விட்டது.

கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படவில்லை என்பதை கடந்த 2020, பொதுத் தேர்தலில் ஒரு பிரசாரமாக கையில் எடுத்த வினாயகமூர்த்தி முரளிதரன், அம்பாறை மாவட்டத்தில் கல்முனை வடக்கு செயலகத்தை கூட்டமைப்பு தரம் உயர்த்தக்கூடிய வாய்புகள் இருந்தும் அதனை நல்லாட்சி அரசில் முட்டுக்கொடுத்தவர்கள் செய்யவில்லை என பிரசாரங்களை முன்னெடுத்து அம்பாறை மாவட்ட தமிழ் பிரதிநித்துவத்தை இல்லாமல் செய்தார்.

தற்போது கூட்டமைப்பு கல்முனை பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவதற்கான அரசியல் ரீதியாக சம்பந்தப்பட்டவர்களுடன் அணுகி அதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்தும் எடுத்துக்கொண்டே இருக்கிறது என்பதைச் சகலரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எனவே, கல்முனை வடக்கு பிரதேச செயலகம் சம்பந்தமாக யார் எதை கதைத்தாலும், கல்முனை வடக்கு செயலகத்தை தரம் உயர்த்தும் பணியிலிருந்து கூட்டமைப்பு ஓயாது எனவும் மேலும் கூறினார்.

# நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க செய்யும் ஆயுர்வேத பானம் வழங்கி வைப்பு

வாச்சிக்குடா விஷேட நிருபர்

சுதேச மருத்துவ அபிவிருத்தி கிராமிய மற்றும் ஆயுர்வேத வைத்தியசாலைகள் சமூக சுகாதார இராஜாங்க அமைச்சரின் அறிவுறுத்தல்களுக்கும் வழிகாட்டலுக்கும் அமைய, கொரோனா தொற்றுநோயை மக்கள் மத்தியிலிருந்து ஒழிக்கும் தேசிய வேலைத்திட்டம் தற்போது நாடு பூராகவும் நடைபெற்று வருகின்றன.





இந்த வேலைத்திட்டத்தின் ஒரு கட்டமாக பாரம்பரிய ஆயுர்வேத முறைகளுக்கமைய தயாரிக்கப்பட்ட உடலின் நோய்எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கச் செய்யும் ஆயுர்வேத பானம் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலக பிரிவுகளில் வாழும் மக்களை பாதுகாக்கும் முகமாக இலவச ஆயுர்வேத மூலிகை பானம் நேற்றுமுன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

சுதேச ஆயுர்வேத மாகாண ஆணையாளர் வைத்தியர் ஆர்.சிறிதரின் ஆலோசனையில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கல்முனை வைத்தியர் ஜி.சுகுணன் மற்றும் கல்முனை பிராந்திய தொடர்பாளர், வைத்தியர் எம்.ஏ.நபீலின் வழிகாட்டலில் ஆலையடிவேம்பு ஆயுர்வேத மத்திய மருந்தகம் பொறுப்பதிகாரி வைத்தியர் த.குவிதாகரனின் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச சபை தவிசாளர் த.கிரோஜாதரன், வைத்தியர் திருமதி ஆமிலா ஜமால்டீன், வைத்தியர் கோபிநாத் மற்றும் பிரதேச சபை செயலாளர் இ.சுரேஸ்ராம் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# கந்தளாயிலுள்ள வர்த்தக நிலையங்களை 16 ஆம் திகதி வரை மூடுமாறு அறிவிப்பு

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிராந்திய சுகாதார அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சடுதியாக கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அதிகரித்துள்ளதன் காரணமாக, கந்தளாய் நகரில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்கள் இன்றிலிருந்து 7 எதிர்வரும் 16 ஆம் திகதி வரை மூடப்படுவதாக கந்தளாய் பிரதேச சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் பிரதேச சபையும், கந்தளாய் வர்த்தக சம்மேளனமும் இணைந்து இந்நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக கந்தளாய் பிரதேச சபையின் தவிசாளர் சமன் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கந்தளாய் பிரதேசத்தில் இது வரை 57 தொற்றாளர்கள் இனம் காணப்பட்டு, இதில் சிலர் குணமடைந்துள்ளதாகவும்,அத்தோடு கந்தளாய் பிரதேசத்தில் இருநூறு குடும்பங்களைச் சேர்ந்த அறுநூறு பேர் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதாக கந்தளாய் பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.டபிள்யு சமன் தெரிவித்தார்.

இதனைக் கருத்திற்கொண்டே பத்து நாட்களுக்கு கந்தளாய் நகரிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.





இதேவேளை கந்தளாய் நகரின் அமைந்துள்ள அத்தியவசிய தேவையுடைய வர்த்தக நிலையங்கள் மட்டும் திறக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் கந்தளாய் நகரம் வெறிச்சோடிக் காணப்படுவதோடு தேவைக்கு செல்லுவோரை மட்டுமே வீதியில் காணக்கூடியதாகவுள்ளது.

நகரில் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

# மருதமுனையிலிருந்து 148 மாணவர்கள் பல்கலைக்கு தெரிவு

(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

வெளியாகியுள்ள உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் படி 148 மாணவர்கள் மருதமுனையிலிருந்து பல்கலைக்கழக நுழைவினைப் பெறுவதற்கு தகுதிபெற்றுள்ளனர்.

அல்மனார் மத்திய கல்லூரியிலிருந்து 38 மாணவர்களும், சம்ஸ் மத்திய கல்லூரியிலிருந்து 43 மாணவர்களும், மருதமுனை தாறுல் ஹூதா மகளிர் அரபுக் கல்லூரியிலிருந்து 65 மாணவர்களும், புலவர்மணி சரிபுத்தீன் மகா வித்தியாலயத்திலிருந்து 02 மாணவர்களுமாக 148 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குச் செல்லவுள்ளனர்.

மருத்துவத்துறையில் தெரிவாகியுள்ள 5 மாணவர்களுடன் உயிரியல் விஞ்ஞானத்துடன் தொடர்புடைய கற்கைகளுக்கென 19 மாணவர்களும், பௌதீக விஞ்ஞானத்துறைக்கு 2 மாணவர்களும், சட்டத்துறைக்குத் தெரிவான 1 மாணவனுடன் கலைத்துறையோடு தொடர்புபட்ட கற்கைகளுக்கென 13 மாணவர்களும், வர்த்தகத்துறைக்கு 2 மாணவர்களும் தொழிநுட்பவியல் துறைக்கு 2 மாணவர்களுமாக 38 மாணவர்கள் அல்மனார் மத்திய கல்லூரியிலிருந்து தெரிவாகியுள்ளனர்.

அல்மனார் மத்திய கல்லூரியிலிருந்து மருத்துவத்துறைக்கு தெரிவான மாணவர்கள் ஐந்து பேரில் நான்கு பேர் 6,7,8,9 ஆம் மாவட்ட நிலைகளை பெற்றுள்ளமை சிறப்பம்சமாகும்.

மருத்துவத் துறைக்கு 2 மாணவர்களும் பொறியியல் துறைக்கு 1 மாணவனும் உயிரியல் விஞ்ஞானபீடத்திற்கு 15 மாணவர்களும் கலை மற்றும் பௌதீக விஞ்ஞானத் துறைகளுக்கு தலா 10 மாணவர்கள் வீதமும் தொழிநுட்பத்துறைக்கு 5 மாணவர்களுமாக சம்ஸ் மத்திய கல்லூரியிலிருந்து 43 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

தாறுல் ஹூதா மகளிர் அரபுக் கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய 82 மாணவிகளுள் 65 பேர் பல்கலைக்கழக நுழைவினைப் பெற்றுள்ளனர். கலை, அரபு மற்றும் இஸ்லாமிய கற்கைள் பீடங்களுக்கே இம்மாணவிகள் செல்லவுள்ளனர். ஆர்.நுஸ்ரத் ஜெஹா என்ற மாணவி மூன்று பாடங்களிலும் ஏ சித்தியினைப் பெற்று சிறப்பு சித்தி மட்டத்தை அடைந்துள்ளார். மருதமுனையிலிருந்து குறித்த கல்வியாண்டுக்காக இக்கல்லூரியிலிருந்தே அதிகமான தொகையினர் பல்கலைக்கழகம் செல்லவுள்ளனர்.

புலவர் மணி சரிபுத்தீன் மாக வித்தியாலயத்திலிருந்து கலைத்துறையில் பரீட்சைக்குத் தோற்றிய 2 மாணவர்களுமே சித்தியடைந்து பல்கலைக் கழக நுழைவினைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

# திருநாவுக்கரசு நாயனார் குருபூசை

பாண்டிருப்பு தினகரன் நிருபர்

திருநாவுக்கரசு நாயனார் முக்தியடைந்த தினத்தை முன்னிட்டு நேற்று (06) மட்டக்களப்பு மண்முனைப்பற்று புதுக்குடியிருப்பு ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலயத்தில் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ கோ.கிரிதரக்குருக்கள் தலைமையில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.



இதில் புதுக்குடியிருப்பு அம்மன் அறநெறிப் பாடசாலை அதிபர் தி.நாகநாதன், இந்துப் பிரசாரகர் செ.துஜியந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தொண்டின் மூலம் இறைவனை அடையலாம் என்ற உயரிய தத்துவத்தை உணர்த்தியவர் திருநாவுக்கரசு நாயனார். கி.பி. 7ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் இப்பூமியில் 81 ஆண்டுகள் வாழ்ந்து சித்திரைச் சதயம் நன்னாளில் முக்தியடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விசேட துஆ பிரார்த்தனையில் ஈடுபடுமாறு பள்ளிவாசல் நிர்வாகத்துக்கு அறிவுறுத்தல்

(ஒலுவில் விசேட நிருபர்)

இலங்கையில் மிக வேகமாக பரவிவரும் கொவிட் 19 நோய்த் தொற்றிலிருந்து நாட்டு மக்களை பாதுகாக்க வேண்டியும், குறித்த நோய்த் தொற்றினை உலகிலிருந்து இல்லாதொழிக்குமாறு வேண்டியும், இன்று 08ம் திகதி சனிக்கிழமை மாலை 05.45 முதல் விசேட துஆ பிரார்த்தனையில் ஈடுபடுமாறு சகல பள்ளவாசல் நம்பிக்கையாளர்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ஏ.பீ. எம். அஷ்ரப் அறிவித்துள்ளார்.

சகல பள்ளிவாயல் நம்பிக்கையாளர்களுக்கும் பொறுப்பாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொவிட் 19 நோய்த் தொற்றினை உலகிலிருந்து இல்லாதொழிப்பதற்கான விசேட துஆப் பிரார்த்தனை உலகிலும் குறிப்பாக இலங்கையிலும் இதற்காக நிகழ்வுகளை ஒழுங்கு செய்து கொள்ள வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# மருத்துவ துறைக்கு தெரிவு

மணல்சேனை நிருபர்

வெளியான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் விஞ்ஞான பிரிவில் மண்டூர் பிரதேசத்தைச் சேர்ந்த தர்மசீலன் விஷாகரபவன் 3ஏ சித்திகளுடன் மாவட்டத்தில் முதலிடத்தை பெற்றுள்ளார்.

ஆரம்பக் கல்வியை மண்டூர் இராமக்கிருஷ்ண வித்தியாலயத்தில் கற்று, பின்னர் மட். கோட்டமுனை க.வித்தியாலயம், மட்.மெதடிஸ்த மத்திய கல்லூரி, உயர் தரகல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியில் கற்றார்.

இந்த சாதனை மூலம் தான் பிறந்த மண்டூர் மண்ணுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் அத்தோடு தன்னை பெற்றேடுத்த பெற்றோருக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

# அறிவித்தல் பலகை இடுமாறு வேண்டுகோள்

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட இடிமண் ஆற்று ஆலிம்சேனை மற்றும் ஜின்னா நகர் கிராமத்திற்கு உட்பட்ட பகுதியில், மக்கள் குளிக்கச் செல்லும் ஆற்றுத்துறையில் எச்சரிக்கை அறிவித்தல் விளம்பரப் பலகை ஒன்றை இடுமாறு மூதூர் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.வை.லாபீர் கேட்டுள்ளார்.

இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கடந்த 2021.05.03 ஆம் திகதி நீராடச் சென்ற மாணவர் ஒருவர் இவ்வாற்றில் நீரில் மூழ்கிய நிலையில் மரணமாகி உள்ளார்.

இந்நிலையில் பலரும் நீராடுவதற்காக செல்லும் இவ்விடம் சேறும், சகதியும் கொண்டதாக காணப்படுவதால் நீராட வருபவர்கள் இதனை கருத்திற்கொள்வதில்லை.

எனவே இவ்விடத்தில் நீராட வேண்டாம் என்ற அறிவித்தல் விளம்பரப்பலகை ஒன்றை இடுமாறு தெரிவித்துள்ளார்.

# கல்முனை பற்றிமாவில் 76 மாணவர்கள் பல்கலைக்கு தெரிவு

(காரைதீவு குறூப் நிருபர்)

கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியில் இம்முறை வெளியான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பிரகாரம், மொத்தமாக 76 மாணவர்கள் சகலதுறைகளுக்கும் தெரிவாகவுள்ளதாக கல்லூரி அதிபர் வண.சகோ.எஸ்.சந்தியாகு அடிகளார் தெரிவித்தார்.

இதில் எட்டு மாணவர்கள் மருத்துவத்துறைக்கும், எட்டு மாணவர்கள் பொறியியல்துறைக்கும் தெரிவாகியுள்ளனர்.

கல்லூரியில் உயிரியல் விஞ்ஞானதுறையில் 19 மாணவர்களும், பௌதீக விஞ்ஞான துறையில் 21 மாணவர்களும், வர்த்தகத் துறையில்12 மாணவர்களும், தொழினுட்பத்துறையில் 09 மாணவர்களும், கலைத்துறையில் 15 மாணவர்களுமாக 76 மாணவர்கள் இம்முறை பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகும் வாய்ப்புள்ளது என கல்லூரி அதிபர் வண.சகோ.எஸ்.சந்தியாகு அடிகளார் தெரிவித்துள்ளார்.

# சட்டபூர்வ ஆவணம் வழங்குமாறு கவனயீர்ப்பு





ஏறாவூர் நிருபர்

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பற்று சவுக்கடி கரையோரப் பிரதேசத்தில் அரசாங்க காணிகளில் குடியமர்ந்தவர்கள் தமக்கு சட்டபூர்வ ஆவணம் வழங்கப்பட வேண்டுமெனக் கோரி வியாழக்கிழமை (06) கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இப்பிரதேசத்திலுள்ள அரசாங்க காணிகளில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் காடுவெட்டி குடிசையமைத்து 24 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

இவர்கள் சட்டபூர்வ அனுமதிப்பத்திரம் கோரி பல தடவை விண்ணப்பம் செய்தபோதிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பில் பிரதேச செயலாளர் என். வில்வரெத்தினம் கருத்துத் தெரிவிக்கையில், குடியிருப்பதற்கு காணியற்றவர்கள் நீண்டகாலமாக அரசாங்க காணிகளில் வீடமைத்து குடியிருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு சட்டபூர்வ ஆவணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.




2021 மே 8
சனிக்கிழமை

**யாழ். மாவட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வைத்திய வசதிகள்**

# மக்களை அவதானமாக செயற்படுமாறு அரசாங்க அதிபர் மகேசன் கோரிக்கை

**பருத்தித்துறை விசேட நிருபர்**

யாழ்ப்பாணத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வைத்திய வசதிகள் காணப்படுவதனால் பொதுமக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட தற்போதைய கொரோனா நிலைமை தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கணபதிப்பிள்ளை மகேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.....

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது கொரோனா நிலைமை சற்று அதிகரித்த நிலை காணப்படுகின்றது. நேற்றைய தினம் 20 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. கடந்த ஒக்டோபர் மாதத்திற்குப் பின்னர் 1688 நபர்கள் யாழ். மாவட்டத்தில் தொற்றுக்குள்ளாகியுள்ளார்கள். 21 மரணங்கள் பதிவாகியுள்ளன.



இதனை விட தற்போது இரண்டு கிராமங்கள் தனிமைப்படுத்தலுக்குட்படுத்தப்பட்டுள்ளது. அந்த வகையில் யாழில் ஆயிரத்து 475 குடும்பங்களைச் சேர்ந்த 2261 நபர்கள் சுய தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள். கொடிகாமம் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளோருக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது பத்தாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவு பொதிகள் வழங்கி வைக்கப்படுகின்றது.

அதே வேளையில் யாழ். மாவட்டத்தில் தற்போதைய நிலையில் அனைத்து நடவடிக்கைகளையும் மட்டுப்படுத்திய அளவிலும் சில விடயங்களிற்கு தடை விதித்தும் இருக்கின்றோம்.

ஆகவே புதிய வீரியமிக்க வைரஸ் பரவல் இருக்கின்றமையினால் சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் இறுக்கமாக பின்பற்றி செயற்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

# இந்திய மீனவர்களுடனான தொடர்பை நிறுத்துமாறு

## மன்னார் மீனவர்களுக்கு எச்சரிக்கை

**தலைமன்னார் விஷேட நிருபர்**

உலகம் முழுவதும் பரவிவரும் கொவிட் தொற்றுநோயிலிருந்து மன்னார் மாவட்டத்தை பாதுகாக்க வேண்டுமானால் மன்னார் மாவட்ட மீனவர்கள் இந்திய மீனவர்களுடன் கொண்டுள்ள நேரடி தொடர்புகளை தவிர்த்துக் கொள்ளுமாறு மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்களம் விழிப்புணர்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் இந்தியா மிக அண்மித்த நாடாக இருப்பதுடன் கடலிலும் சட்டவிரோத கடத்தல் மற்றும் ஆட்களை எற்றி இறக்குதல் போன்ற செயல்பாடுகளிலும் மன்னார் மாவட்ட மற்றும் இந்திய மீனவர்கள் சிலர் தீவிரமாக ஈடபட்டு வருவது கடந்தகால செயல்பாடுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.



இதைக் கவனத்துக்கு எடுத்துள்ள மன்னார் மாவட்ட கடற்தொழில் திணைக்களம் மன்னார் மாவட்டம் முழுவதும் மக்களுக்கும் குறிப்பாக கடற்றொழிலாளருக்கும் விழிப்புணர்வை முன்னெடுத்து வருகின்றது.

இது தொடர்பில் மன்னார் தீவில் மன்னார் முதல் தலைமன்னார் வரையும் மன்னார் பெரும் நிலப்பரப்பில் வங்காலை முதல் சிலாபத்துறை வரையும். விடத்தல்தீவு தொடக்கம் வெள்ளாங்குளம் வரைக்கும் உள்ள கடற்தொழிலாளர்களுக்கு நடமாடும் வாகன ஒலிபெருக்கிகள் மூலம் அறிவுறுத்தல்களையும் விழிப்புணர்வுகளையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

# வவுனியாவில் இளைஞரை துன்புறுத்தி காணொளியை எடுத்தவர் கைது

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியா, சிதம்பரபுரம், ஆச்சிபுரம் பகுதியில் இளைஞர் ஒருவரை துன்புறுத்தி நிர்வாணமாக்கி அதனை தொலைபேசியில் பதிவு செய்து சமூகவலைத்தளங்களில் பதிவேற்றியமை தொடர்பில் நபர் ஒருவரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சமனங்குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட ஆச்சிபுரம் பகுதியில் இளைஞர் ஒருவரை நிர்வாணமாக்கியதுடன் துன்புறுத்தலும் மேற்கொண்டு அதனை தொலைபேசியில் காணொளி செய்து சமூகவலைத்தில் பதிவேற்றப்பட்டிருந்தது.

குறித்த காணொளி சமூக வலைத்தளங்களில் பரவியதினையடுத்து, ஒருவரை அவமானபடுத்தி சித்திரவதைக்குட்படுத்துவது தண்டனைக்குரிய குற்றம் என்பதன் அடிப்படையில் குறித்த குற்றச் செயல்களில் ஈடுபட்டமை மற்றும் காணொளியினை சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியமை என பல்வேறு குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் ஆச்சிபுரம் பகுதியினைச் சேர்ந்த 30 வயதுடைய இளைஞரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# கிளிநொச்சியில் 24 பொலிஸாருக்கு கொரோனா

**பரந்தன் குறூப் நிருபர்**

கிளிநொச்சியில் கொரோனா தீவிரமாக சமூகத்தில் பரவி வருவதாக எச்சரிக்கப்பட்டு வரும் சூழலில் நேற்று காலை வெளியாகிய கொவிட் பரிசோதனை முடிவுகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் 24 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய 22 பொலிஸ் உத்தியோகத்தர்களிற்கும், அக்கராயன் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் 2 பொலிஸ் உத்தியோகத்தர்களிற்குமாக 24 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று காலை வெளியாகியுள்ளன.

இந்த நிலையில் பொதுமக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் என சுகாதார துறையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

# கிளிநொச்சியில் கொரோனா சமூக தொற்றாக பரவவில்லை

## மாவட்ட சுகாதார வைத்திய பணிப்பாளர்

**பரவலை கட்டுப்படுத்த களத்தில் அமைச்சர் டக்ளஸ்**



கிளிநொச்சி மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் இதுவரை சமூக தொற்றாக மாற்றமடையவில்லை என்று மாவட்ட சுகாதார வைத்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி சரவணபவன் தெரிவித்துள்ளார். அத்தோடு சுமார் ஆயிரம் கொரோனா நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான கட்டமைப்பு வசதிகள் தயார் நிலையில் இருப்பதாகவும் கூறினார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று இடம்பெற்ற கொரோனா தொடர்பான கலந்தாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எனினும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் பாதுகாப்புத் தரப்பினரின் ஒத்துழைப்புடன் கொரோனா தொற்றாளர்களுக்கான வைத்திய வசதிகள் ஏற்படுத்தப்பட்ட நிலையில், அனைத்து இடங்களிலும் சமகாலத்தில் வைத்திய சேவையை மேற்கொள்வதற்கு ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாகவும், இது தொடர்பாக சுகாதார திணைக்களத்திற்கு தெரியப்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

அதேபோன்று, போக்குவரத்துக்களுக்கான வாகன வசதி போன்ற சில தேவைகள் தொடர்பாகவும் வைத்திய அதிகாரியினால் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

இவை தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாவட்டத்திற்கான தேவைகள் அனைத்தையும் உள்ளடக்கிய கோரிக்கையை எழுத்து மூலம் தரும்படி கேட்டுக் கொண்டதுடன் அமைச்சரவையிலும் சுகாதார அமைச்சருடனும் கலந்துரையாடி தேவைகளை நிவர்த்தி செய்ய முடியும் எனவும் தெரிவித்தார்.

மேலும், கொரோனா பரவுவதை கட்டுப்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தில் அரச அதிகாரிகள் அனைவரும் சுய பாதுகாப்புடன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்ட கடற்றொழில் அமைச்சர், நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுமாயின் உடனடியாக தன்னுடைய கவனத்திற்கு கொண்டு வருமாறும் தெரிவித்தார்.

# கிளிநொச்சி கரும்புத் தோட்டத்துக்கு புத்துயிர் அளிக்க அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

கிளிநொச்சி கரும்பு தோட்டத்துக்கு புத்துயிரளிப்பதற்கு கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் பிரதேசத்தில் சுமார் 196 ஏக்கர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்த கரும்பு பயிர்செய்கை கடந்த கால யுத்தம் காரணமாக கைவிடப்பட்டு அழிவடைந்துள்ளது.

இப் பிரதேசத்தில் கரும்பு பயிர்செய்கை உட்பட உப பயிர் செய்கையை மேற்கொள்வதற்கு பல்வேறு சமூக அமைப்புக்கள் ஆர்வம் செலுத்தி வருவதுடன், அது தொடர்பான கோரிக்கையை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவிடம் முன்வைத்துள்ளன.

இவ்விடயத்தில் கவனம் செலுத்திய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி கரும்பு பயிர்ச் செய்கைக்கு முன்னுரிமை அளிப்பதுடன் எஞ்சிய பகுதியில் ஏனைய உப பயிர்ச் செய்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி அளிப்பதற்கும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

# வடமாகாணத்தில் சித்தமருத்துவ நிர்வாகக் கட்டமைப்புகள் பின்தங்கிய நிலையில்

## அரச சித்தமருத்துவ அதிகாரிகள் சங்கம் விசனம்

வடமாகாண சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் இயங்கும் சுதேச மருத்துவத் திணைக்களம் காணி ஒதுக்கீடுகளோ, நிரந்தரக்கட்டடங்களோ இல்லாது அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையில் காணப்படுவதுடன், குறித்த திணைக்களத்தின் கீழான ஏனைய கட்டமைப்புக்களும் நிரற்படுத்தப்பட்ட ஆளணி வசதிகளோ, இடவசதிகளோ, வாகனவசதிகளோ இன்றி மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படுவதாக அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் விசனம் வெளியிட்டுள்ளது.

இது தொடர்பில் அரச சித்த மருத்துவ அதிகாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தில் சுகாதார சுதேச மருத்துவ அமைச்சின் கீழ் இயங்கி வரும் சுதேச மருத்துவ திணைக்களத்தின் அபிவிருத்தி ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின் தங்கிய நிலையில் காணப்படுகின்றது.

அதாவது கடந்த 15 வருடங்களை கடந்தும் சுதேச மருத்துவ திணைக்களத்திற்கென தனியான காணி ஒதுக்கீடுகளோ நிரந்தர கட்டடங்களோ ஏதும் இன்றி காலத்திற்கு காலம் இடமாற்றப்பட்டு தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றது.

அவ்வாறே சுதேச மருத்துவ திணைக்களத்தின் கீழ் இயங்கி வரும் மத்திய சித்தமருந்தகம், கிராமிய சித்தமருத்துவமனை, மாவட்ட சித்த மருத்துவமனை, மருந்து உற்பத்தி பிரிவு, மூலிகை தோட்டங்கள், மாகாண மூலிகை கிராமம், சமூக மருத்துவ பிரிவு என்பன அடிப்படை வசதிகளோ, நிரற்படுத்தப்பட்ட ஆளணியினரோ இன்றி காணப்படுவதுடன், இவற்றில் சில இடவசதிகளின்றி தனியார் கட்டடங்களில் பல இடையூறுகளுக்கு மத்தியில் மக்களுக்கு தொடர்ச்சியாக சேவையாற்றி வருகின்றன.

அத்துடன் உள்ளூராட்சி சபையின் கீழ் இயங்கி வரும் இலவச சித்த மருந்தகங்களில் அதிகமானவை பல வருடங்களுக்கு முன் உள்ள அடிப்படை வசதிகளற்ற பழைய கட்டடங்களிலேயே இன்று வரை இயங்குகின்றன.

சமூக மருத்துவ பிரிவுகளுக்கான களப்பயணத்தின் போது வாகன வசதிகளோ உதவியாளர்களோ இன்றி பல சிரமங்களுக்கு மத்தியில் மக்களிற்கான சித்த மருத்துவம் சார் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்றார்கள் எமது மருத்துவர்கள். எனவே மாவட்ட ரீதியாக வாகனங்களை பெற்றுத்தருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எமது சங்கம் கோரிக்கை விடுக்கின்றது.

**விஜயரத்தினம் சரவணன்**

# முல்லைத்தீவில் இதுவரை 16 பேருக்கு கொரோனா தொற்று

## வற்றாப்பளை உற்சவத்தில் பொது மக்கள் கலந்துகொள்ள தடை- சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தில் 16 பேருக்கு கொவிட் 19 தொற்றுக்குள்ளாகிய நிலையில் 101 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்கள்.



தற்போதைய கொவிட் 19 நிலமைகள் தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன் நேற்று நடத்திய ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்,..

மாங்குளம் தள வைத்தியசாலையில் சிற்றூழியராக பணியாற்றிய ஒருவருக்கு தொற்று ஏற்பட்டுள்ளதை தொடர்ந்து அதனுடன் தொடர்புடைய 12 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மாங்குளம் மருத்துவமனை செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு எதிர்வரும் கிழமைகளில் நடைபெறவுள்ள வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வு தொடர்பிலும் கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது. முப்படையினர், சுகாதார பிரிவினர், ஆலய நிர்வாகத்தினர் ஆகியோர் இதில் கலந்து கொண்டனர். இந் நிகழ்வுகளிலும் பொதுமக்கள் பங்குபற்றுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும், ஆலய நிர்வாகத்தினரால் கிரியைகள் மட்டும் இடம்பெறும் என்றும் தெரிவித்துள்ளார்.

# முகக் கவசம் அணியாத 30 பேருக்கு வழக்குத்தாக்கல்

**ஓமந்தை விஷேட நிருபர்**

வவுனியா நகரப்பகுதியில் முகக் கவசம் அணியாமல் சென்ற 30 ற்கும் மேற்பட்டோர் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி றொசான் சந்திரசேகர தலைமையிலான குழுவினரால் குறித்த நடவடிக்கை நேற்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது நகரில் முகக்கவசம் அணியாமல் சென்ற 30 ற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

குறித்த நபர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்த பொலிசார், சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக கடைப்பிடிக்காதவர்களிற்கு எதிராக கடுமையான நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என்று தெரிவித்தனர்.

கலைக் கதம்பம்
சைத்திரியன்

# 'முருகியம்' கவிதை நூல் திருகோணமலையில் வெளியீடு



கவிஞர் தாமரைத் தீவானின் முதல் கவிதை நூலை வெளியிட்ட பெருமை எமக்குண்டு. தனது தொன்னூறாவது வயதிலும் இளைஞனைப்போல் துடிப்பான சிந்தனையுடன் கவிதை வடிப்பவர் கவிஞர் தாமரைத்தீவான் என திருகோணமலையில் கவிஞர் தாமரைத்தீவானின் முருகியம் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வில் கவிஞர். வி. மைக்கல் கொலின் தெரிவித்தார்.

கவிஞர் தாமரைத்தீவானின் 1990 களில் வெளிவந்த கீறல்கள் கவிதை நூல் வடகிழக்கு மாகாண சாகித்திய விருதினை பெற்றது.

கவிஞரின் இருபத்தெட்டாவது கவிதை நூலான பொன்னகம் மீட்போம் மகுடம் வெளியீடாக வந்தது இதுவும் கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது. தற்போது வெளியிடப்படும் முருகியம் கவிஞரின் முப்பத்தெட்டாவது நூலாகும். முருகு என்பது அழகைக்குறிக்கும் முருகன் அழகன். முருகனைப்பற்றி பாடல்களை கொண்டதும் இந்நூலை வெளியிட்டு உதவிய கவிஞரின் நண்பரான முருகானந்தன் என்ற பெயரை தாங்கிய நூலாக வர வேண்டுமென்பதற்காக சிலேடையாக வைத்த பெயராகவும் முருகியம் அமைகிறது. இது கவிஞரின் கவிச்சிறப்புக்கு சான்று என்றும். மைக்கல் கொலின் தெரிவித்தார். கொரோனா கால பாது காப்பினை முன்னிட்டு குடும்ப நிகழ்வாக நடைபெற்ற இவ் வெளியீட்டு நிகழ்வில் நூலின் முதல் பிரதி கவிஞர் தாமரைத் தீவானின் வாரிசுக் கவிஞர் கவிஞர் அ.கௌரிதாசனக்கு வழங்கிவைக்கப்பட்டது.

கவிஞர் தாமரைத்தீவான், அவரது புதல்வர் இரா.நெடுஞ்செழியன், இந்நூலை பதிப்பித்த இலக்கிய ஆர்வலர் ந.முருகானந்தன் ஆகியோருக்கும் நூலின் பிரதி வழங்கிவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் திருகோணமலையின் ஊடக நண்பர்களும் கலந்து சிறப்பித்தனர்.







## இளம்பரிதி சஞ்சிகை வெளியீடும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும்

வாழைச்சேனை பிரதேச செயலக கலாசார பேரவையின் ஏற்பாட்டில் இளம்பரிதி சஞ்சிகை வெளியீடும் கலைஞர் கௌரவிப்பு நிகழ்வும். பிரதேச செயலாளர் கோ.தனபாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச கலைஞர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இளம்பரிதி சஞ்சிகையின் முதற்பிரதி பிரதேச செயலாளரினால் உதவிப் பிரதேச செயலாளருக்கு வழங்கி வெளியீடு செய்யப்பட்டது.சஞ்சிகையில் வாழைச்சேனை பிரதேச கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், கல்வியியலாளர்களின் விபரங்கள் வெளியிடப் ப்பட்டுள்ளது. இதன்போது மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்,தகவல்:வெல்லாவெளி தினகரன் நிருபர்)



## இதுவும் கடந்து போகும்

எதுவுமே கடந்து போகும்
இப்பிணி தீர்ந்து போகும்
புதுவழி வந்து சேரும்
புன்மைகள் மறைந்து மாறும்!

முகத்தினில் மாஸ்கைக் கட்டி
முடங்கினோம் வீட்டுக் குள்ளே
அகத்தினில் நிறைந்தி ருந்த
அன்பொடு நாங்க ளிங்கே

இடைவெளி விட்டுக் கொண்டே
இருக்கிறோம்: காலம் மாறும்
முடிவினி எம்மை நாடும்
முழுவதும் மகிழ்ச்சி கூடும்!

எதுவுமே கடந்து போகும்!
காற்றுமே சீற்றம் கொள்ளக்
கலங்கினோம் அகதி யானோம்
கடலதும் கொந்த ளித்துக்
காவுகொண் டழித்த போது
உடமைகள் உயிரி ழந்தோம்!

முப்பது வருடப் போரில்
முடங்கினோம் நிலைகு லைந்தோம்
ஸஹ்ரானின் சதியி னாலும்
சாய்ந்தது வாழ்க்கை யன்றோ?

எல்லாமும் கடந்து போகும்
இயல்பான வாழ்க்கை மீளும்
சொல்லொணாத் துயர மென்றும்
தொடர்ந்திடா வாழ்க்கை மீளும்!

பாலமுனை பாறூக்

# குறிஞ்சித் திணைக்கு சிறப்பு சேர்க்கும் அறத்தொடு நிற்றல் - தலைவன் தலைவி காதல்


அறத்தொடு நிற்றல், வரைவு கடாவுதல், இற்செறிப்பு, இரவுக்குறி, குறிஞ்சியைப் போற்றல், குறிகேட்டல், தினைப்புனம் காத்தல் முதலியன குறிஞ்சித் திணைக்குச் சிறப்புச் சேர்க்கும் நிகழ்வுகள் ஆகும்.

அகத்திணை மாந்தர்களின் மன, மண ஒழுக்கங்களைக் களவு, கற்பு என்ற இரு பிரிவுகளில் அடக்குவர். இவ்விரண்டையும் இணைத்து நிற்பது அறத்தொடு நிற்றலாகும்.

தலைவியின் களவு ஒழுக்கத்தை, பிறருக்குத் தெரியாமல் தலைவன், தலைவி மனங்கள் ஒன்று சேர்ந்ததை உண்மையோடு வெளிப்படுத்தலே அறத்தொடு நிற்றல் ஆகும்.

தலைவி,தோழி, செவிலி, நற்றாய் என ஒவ்வொருவரும் அறத்தொடு நிற்பதுண்டு. அறத்தொடு நிற்றலின் விளைவு தலைவியை அவள் விரும்பிய தலைவனுடன் கற்பு வாழ்க்கையில் இணைப்பதாகும். தலைவியைத் தலைவனுக்குத் திருமணம் செய்வித்தலாகும்.

தலைவிக்கு உடனிருந்து பிறர் அறியாமல் களவுக் காதலுக்கு உதவியவள் தோழி. களவுக் காதல் கற்பாக மாற வேண்டும். காதல் வெளிப்பட்டுத் திருமணம் நிகழ வேண்டும். ஆதலால் வாய்ப்பு ஏற்படும் பொழுது தோழி



செவிலிக்குத் தலைவியின் காதலைக் குறிப்பாகப் புலப்படுத்துகிறாள். களவை வெளிப்படுத்தல் என்று கூறாமல் அறத்தொடு நிற்றல் என்று பெயர் வைத்துள்ளது சிறப்பாகும்.

தலைவியின் கற்பு அறத்தைக் காப்பதற்காகக் களவு உண்மையை வெளிப்படுத்துவதால் இது அறத்தொடு நிலை என்று சொல்லப்படுகிறது.

**அகவன் மகளே ! பாடுக பாட்டே!**
**இன்னும் பாடுக பாட்டே அவர்**
**நன்னெடும் குன்றம் பாடிய பாட்டே !**
**(குறுந்தொகை 23 : 35, ஒளவையார்)**

ஒரு குறிப்பிட்ட மலையைச் சார்ந்த தலைவன் ஒருவனை விரும்பினாள் தலைவி. செவிலித்தாய் தலைவியின் போக்கில் மாற்றத்தை உணர்கிறாள். எனவே குறத்தியை அழைத்துத் தலைவியின் மாற்றத்துக்குக் காரணம் அறியக் குறி கேட்கிறாள்.குறத்தி குறி கூறுமுன் வழக்கப்படி பல மலைகளையும் பற்றிப் பாடத் தொடங்குகிறாள். தலைவனுடைய மலையைப் பாடும் போது தோழி குறுக்கிட்டுக் கூறுகிறாள் : "குறத்தியே! பாடு, பாடு, அவருடைய மலையை மட்டுமே பாடிக் கொண்டேயிரு" என்கிறாள். இவ்வாறு குறி கூறுபவளைப் பார்த்து அவர் மலையை மட்டுமே பாடும் என்பது தாய்க்கு ஐயத்தை உறுதியாக ஏற்படுத்தும். அவர் மலை என்பதில் உள்ள குறிப்பு தலைவியின் மாற்றத்திற்கான காரணத்தைத் தாய்க்கு வெளிப்படுத்திவிடும். களவு வெளிப்பட்ட பின் திருமண ஏற்பாடுகள் தொடங்கிவிடும். இதுவே தோழியின் எதிர்பார்ப்பு. இவ்வாறு குறிப்பாக நிகழ்வதே அறத்தோடு நிற்றல் நிகழ்ச்சி.

குறிஞ்சிப் பாடல்களை இயற்றுவதில் மிகச் சிறந்தவர் கபிலர். ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழின் பெருமையை எடுத்துச் சொல்லக் கபிலர் பாடியது குறிஞ்சிப்பாட்டு. 261 அடிகளை உடைய குறிஞ்சிப்பாட்டு அறத்தொடு நிற்றல் துறையில் அருமையாக அமைந்துள்ளது.

தோழி செவிலித்தாய்க்குக் கூறும் கூற்றாக இப்பாட்டு அமைந்துள்ளது. அன்னாய் வாழி வேண்டு அன்னை (குறிஞ்சிப் பாட்டு 1)

குறிஞ்சிப்பாட்டின் இம்முதல் அடி அறத்தொடு நிற்க விரும்பும் தோழி செவிலித்தாயின் கவனத்தைத் தன்முகமாகத் திருப்பப் பேசும் பேச்சுத் தொடக்கம். தன்னை நோக்கித் திரும்புபவள் தன் சொல்லின் உண்மையை நோக்கித் திரும்புவாள் என்று தோழி நம்புகிறாள்.

**(தொடரும்)**







இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் காரைதீவு சுவாமி விபுலாநந்த ஞாபகார்த்த பணிமன்றம் சுவாமி விபுலாநந்த கற்கை நிலையத்துடன் இணைந்து நடத்திய பண்ணிசை மற்றும் பரதநாட்டிய வகுப்புகளின் அங்குரார்ப்பண நிகழ்வுகள் காரைதீவில் நடைபெற்றன. இந்நிகழ்வு தேசியகல்வி நிறுவகத்தின் நடனத் துறைத் தலைவர் முனைவர் திருமதி நிசாந்தராகினி திருக்குமரன் முன்னிலையில் நடைபெற்றது. முத்தமிழ்வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் 97ஆவது துறவறதின விழா கடந்த சித்ரா பௌர்ணமியன்று சுவாமிகள் பிறந்த காரைதீவில் கொண்டாடப்பட்டபோது இந்நிகழ்வு இடம்பெற்றது. கலையைக் கற்பதற்கு செல்வமோ வசதியோ தேவையில்லை. மாறாக போதுமான ஆர்வம் இருக்க வேண்டும். சாதாரண குடும்பத்தில் பிறந்த நான் இன்று இத்துறையில் முன்னேறியிருப்பது உங்களுக்கெல்லாம் முன்னுதாரணமாகும்.எனவே உங்களால்முடியும் என புதியமாணவர்களிடம் முனைவர் திருமதி நிசாந்தராகினி திருக்குமரன் தெரிவித்தார். (தகவல், படங்கள்: காரைதீவு குறூப் நிருபர்)

# க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான விசேட கல்வி ஒலிபரப்புச் சேவை

**புசல்லாவை தினகரன் நிருபர்**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மலையக சேவையுடன் இணைந்து மத்திய மாகாண கல்வித் திணைக்களம் நடாத்தும் க.பொ.த.சாதாரண தர மாணவர்களுக்கான விசேட கல்வி ஒலிபரப்புச் சேவை இம்மாதம் 15 திகதி தொடக்கம் தினமும் மாலை 6,30 மணி முதல் 7,30 மணிவரையில் இடம்பெற வுள்ளது. குறிஞ்சி குருகுலம் என்ற பெயரில் பண்பலை 90,1,107,3,107,5 ஆகிய அலை வரிசைகளில் இந்நிகழ்ச்சியைக் கேட்டு மாண வர்கள் பயன்பெறலாம் என மத்திய மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் பெரியதம்பி விக்னேஸ்வரன் தெரிவித்தார். தனியார் ஒலிப ரப்புச் சேவைகளிலேயே இளம் தலைமுறை யினரின் கவனம் அதிகம் ஈர்க்கப்படுவதால் வானொலி நிகழ்ச்சியைக் கேட்டு மாணவர் கள் பயன்பெறுவதற்கான வழிகாட்டல் களை ஆசிரியர்களும் அதிபர்களும் சமூக நலன் விரும்பிகளும் சமூகப் பொறுப்பு மிக்க வர்களும் மேற்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்தார். க.பொ.த.சாதார பரீட் சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான சகல பாடங்களுக்குமான வழிகாட்டல்கள் துறைசார் நிபுணத்துவம் பெற்றவர்களால் இந் நிகழ்ச்சிகளில் மேற்கொள்ளப்படவுள்ளது.

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை; ஜெய்லானி தேசிய பாடசாலையில் 10 மாணவர்கள் சித்தி

**(பலாங்கொடை தினகரன் நிருபர்)**

பலாங்கொடை ஜெய்லானி தேசிய பாட சாலையில் இருந்து கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்க ளில் பத்து மாணவர்கள் சித்தியடைந்து பல் கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளதாக அதிபர் தெரிவித்தார்.

நளீம் முகமட் காலிட், அப்துல் சத்தார் சஹ்ரா, மன்சூர் முஸ்தாக் அகமது, குமரன் சுவிதா, முஸம்மில் முஹம்மது ரிஸ்லான், பவ்சுல் ஹலீம் பாத்திமா சிம்லா, முஸம்மிர் பாத்திமா மிஸ்ஹா, அப்துல் சத்தார் ஹுதா, ரிஸ்வான் முஹம்மத் ரிலான், ரிஸ்வி சாலி பாத்திமா அசீலா ஆகிய மாணவர்கள் சித்தி யடைந்துள்ளனர்.

# இரத்தினபுரியில் மூன்று பொலிஸ் பிரிவுகள் முடக்கம்

**(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)**

இரத்தினபுரி மாவட்டத்தில் கொவிட் 19 பரவல் தீவிரமடைந்துவருவதால் 3 பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த 10 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரி பொலிஸ் பிரிவின் கங்குல் விடிய, வேவல்வத்தை பொலிஸ் பிரிவின் ரத்கம கிராம சேவகர் பிரிவு, எம்பிலிப்பிட் டிய பொலிஸ் பிரிவின் பல்லேகம உடகம புதியநகரம், பனாமுர பொலிஸ் பிரிவைச் சேர்ந்த சுதுகம வலல்கொட, பனாமுர ஆகிய கிராம சேவகர் பிரிவுகளும் இறக்கு வான பொலிஸ் பிரிவின் பொதுபிட்டிய, கலவான பொலிஸ் பிரிவின் ஹப்புகொட கிராம சேவகர் பிரிவுகள் ஆகியன முடக்கப் பட்டுள்ளன.

# சீரற்ற காலநிலை; சாரதிகளை அவதானத்துடன் செல்ல எச்சரிக்கை



**நோட்டன் பிரிட்ஜ் நிருபர்**

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியின் ஹற்றன் வுட்லேண்டி பகுதியில் காரொன்று ஜீப் வண்டியில் மோதி விபத்துக்குள்ளா னது. கொட்டகலை பகுதியிலிருந்து கண்டி நோக்கிச்சென்ற ஜீப் வண்டியும் கினிகத் தேனையிலிருந்து ஹற்றன் நோக்கி வந்த காருமே இவ்வாறு மோதி விபத்துக்குள்ளா னது.

இவ் விபத்து நேற்று 07/05 மாலை 3:45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மழையுடனான காலநிலையால் பாதையில் வழுக்கல் நிலை காணப்பட் டதையடுத்து சாரதியின் கட்டுப்பாட்டை மீறி கார் வழுக்கிச்சென்று ஜீப் வண்டியில் மோதுண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்த னர். ஹற்றன் பொலிஸார் சாரதிகளை அவ தானத்துடன் வாகனத்தை செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.


**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்**

MCB Bank for Life

## எம் சி பி வங்கி லிமிடெட் (காலி கிளை)

## காணிநிலம், காணியிலிருக்கும் மரங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக மதிப்பு மிக்க வர்த்தகச் சொத்தின் ஏல விற்பனை

**மேலே குறிப்பிட்ட முதலாவது தீர்மானம் குறிப்பிடுவது**

அனுமதி பெற்ற நில அளவையாளர் மடுவாகே தேஜஸீல் என்பவரால் தாயாரிக்கப்பட்டு நிலவரைப்பட இலக்கம் 1089 B இல் லொட் இலக்கம் B1 (அஸ்ஸாலு கண்ட அட்டற என அழைக்கப்படும் இடத்தின் லொட் A இன் பகுதியாக உள்ளது) என குறிக்கப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்ட தென் மாகாணம் காலி மாவட்டம், வெல்லபட பட்டுவெ, கரதேனிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, இல.93C குருந்துகஹ ஹதப்ம கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள " அஸ்ஸாலு கண்ட அட்டற " என அழைக்கப்படும் காணி, லொட் இலக்கம் B1 குறிப்பிடப்பட்ட காணி **வடக்கெல்லை** எல மூலமாகவும் **கிழக்கெல்லை** அசலுகண்டாடர ஒவிட மூலமும், **தெற்கெல்லை** வீதிப்பாதை மூலமும், **மேற்கெல்லை** எல மூலமாகவும் சூழப்பட்டு, காணியின் பரப்பளவு பதினொரு பேர்ச்சேஸ் (A0-R0-P11), அக்காணியிலிருக்கும் மரங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக எல்பிடிய மாவட்ட நில பதிவில் தொகுதி/ போலியோ J 23/116 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**எம் சி பி வங்கி லிமிடெட்டிற்கு, M/s கீணுலி சின்னமொன்** இன் தனி உரிமையாளரான **முனிகொட ஹக்குறு சமல் புஷ்பிக** அவர்களினால் அடமானம் மற்றும் அடமானத்தில் பணம் செலுத்துதல் என்பவற்றில் வைக்கப்பட்ட, கொழும்பு பொது நொத்தாரிசு M. Z. ஹுசைன்மியா அவர்களால் சான்றளிக்கப்பட்டு , அடமான பிணைப்பு இல.**466** இன் கீழ் **23**, ஆவணி, **2017** ஆம் திகதி மற்றும் அடமான பிணைப்பு இல.**540** இன் கீழ் **24**, ஆடி, **2018** ஆம் திகதி பதிவு செய்யப்பட்டு அடமானமாக வைக்கப்பட்ட மீட்கப்படாத சொத்து.

எம் சி பி வங்கி லிமிடேட்டினால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்,
நான் மேலே உள்ள சொத்துக்களை பொது ஏலத்தில்
**திங்கட்கிழமை 24 மே 2021 அன்று மு.ப 10.30 குறித்த பகுதியில் விற்பனை செய்கிறேன்.**

**சொத்துக்கான அணுகல்**

குருந்துக்ககவில் தெற்கு அதிவேக சாலையிலிருந்து குறித்த இடத்தை அடைவதற்கு , குருந்துகக நகரினூடாக செல்லும் எல்பிடிய வீதியில் 150 மீட்டர் தூரம் செல்லவும். பின்னர் இடப்புறம் எல் எம் பி மாவத்தையில் முடிவு வரை 150 மீட்டர் தூரம் சென்று இடப்பக்கம் உள்ள 12 ஆதி வீதியில் சிறிது தூரம் சென்ற பின் குறித்த இடத்தை உமது வலப்புறத்தில் காணலாம்.

தீர்மான அறிவிப்புகளுக்காக 2021 மாசி மாதம் 12 ஆம் திகதி அரச வர்த்தமானி மற்றும் 2021 மாசி மாதம் 13 ஆம் திகதி டேலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளை பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை: -**

ஏல விற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்).
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்).
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்.
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவொர் கட்டணம் 1000 ரூபா.
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்).
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி 2000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள்,வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

தொடர்பான விவரங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை பார்வையிட
கடன் நிர்வாக திணைக்களம்,
எம் சி பி வங்கி லிமிடெட்
இல.8, யோர்க் ஆர்க்கேட் கட்டிடம், லேடன் பஸ்டியன் வீதி, கொழும்பு 01
தொலை பேசி: +94 11 5 222 200

- **முன்னறிவிப்பின்றி மேல் குறிப்பிட்ட ஏல விற்பனையை நடாத்தவும்/நிறுத்தவும் வங்கியிற்கு உரிமை உண்டு.**
- **கொவிட் 19 நெறிமுறைகளை கடைப்பிடிக்கும் வண்ணம் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டுதல்களின் படி ஏலம் நடாத்தப்படும்.**

DK's AUCTIONS To Professionally Serve the Nation

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com



**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்**

MCB Bank for Life

## எம் சி பி வங்கி லிமிடெட் (காலி கிளை)

## காணிநிலம், காணியிலிருக்கும் மரங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக மதிப்பு மிக்க வர்த்தகச் சொத்தின் ஏல விற்பனை

**மேலே குறிப்பிட்ட இரண்டாவது தீர்மானம் குறிப்பிடுவது**

அனுமதி பெற்ற நில அளவையாளர் D G மெண்டிஸ் என்பவரால் தாயாரிக்கப்பட்டு நிலவரைப்பட இலக்கம் 893 E இல் லொட் இலக்கம் A2B (அஸ்ஸாலுகண்ட அட்டற ஒவிட என அழைக்கப்படும் இடத்தின் லொட் A இன் பகுதியாக உள்ளது) என குறிக்கப்பட்டு சகலதும் பிரிக்கப்பட்ட தென் மாகாணம் காலி மாவட்டம், வெல்லபட பட்டுவெ, கரதேனிய பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட, இல.93 குருந்துகஹ ஹதப்ம கிராம சேவகர் பிரிவில் அமைந்துள்ள" அஸ்ஸாலு கண்ட அட்டற ஒவிட" என அழைக்கப்படும் காணி, லொட் இலக்கம் A2B குறிப்பிடப்பட்ட காணி வடக்கெல்லை திட்ட இல.893 இன் லொட் A2C மூலமாகவும் கிழக்கெல்லை குறிப்பிட்ட 893 E திட்டத்தில் உள்ள 12 ஆதி அகலமான பாதை மூலமும், தெற்கெல்லை திட்ட இல.893 E இன் லொட் A2A மூலமும், மேற்கெல்லை அசலு கண்டவின் நெல் வயல்கள் மூலமாகவும் சூழப்பட்டு, காணியின் பரப்பளவு எட்டு பேர்ச்சேஸ் (A0-R0-P8), அக்காணியிலிருக்கும் மரங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக எல்பிடிய மாவட்ட நில பதிவில் தொகுதி/ போலியோ J 70/115 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. திட்ட இல.893 இன் லொட்1 இல் குறிப்பிடப்பட்ட (12அடி அகலமான பாதை) அம்பளங்கோட எல்பிடிய பிரதான வீதிக்கு செல்லும் பாதை உள்ளடங்கலாக.

எம் சி பி வங்கி லிமிடெட்டிற்கு, M/s கீணுலி சின்னமொன் இன் தனி உரிமையாளரான முனிகொட ஹக்குறு சமல் புஷ்பிக அவர்களினால் அடமானம் மற்றும் அடமானத்தில் பணம் செலுத்துதல் என்பவற்றில் வைக்கப்பட்ட, கொழும்பு பொது நொத்தாரிசு M. Z. ஹுசைன்மியா அவர்களால் சான்றளிக்கப்பட்டு, அடமான பிணைப்பு இல.466 இன் கீழ் 23, ஆவணி, 2017 ஆம் திகதி மற்றும் அடமான பிணைப்பு இல.540 இன் கீழ் 24, ஆடி, 2018 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டு அடமானமாக வைக்கப்பட்ட மீட்கப்படாத சொத்து.

எம் சி பி வங்கி லிமிடேட்டினால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்,
நான் மேலே உள்ள சொத்துக்களை பொது ஏலத்தில்
**திங்கட்கிழமை 24 மே 2021 அன்று மு.ப 11.00 குறித்த பகுதியில் விற்பனை செய்கிறேன்.**

**சொத்துக்கான அணுகல்**

தெற்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலையில் உள்ள குருடுகஹா ஹெடெக்மாவின் வெளியேறும் இடத்திலிருந்து அம்பலங்கோடா எல்பிட்டியா சாலையில் எல்பிட்டியா நோக்கி சுமார் 100 முதல் 150 மீட்டர் தூரம் சென்று லங்கா பெட்ரோல் நிரப்பு நிலையத்தை கடந்து சற்று இடதுபுறத்தில் அமைந்துள்ள எல்.எம்.பி மவதா அல்லது பீரிஸ் மவத்தை அடையலாம். சாலை முன்பதிவை அடைய சுமார் 150 முதல் 200 மீட்டர் தூரத்திற்கு இந்த சாலையில் பயணித்து, அடுத்த சந்திப்பு வரை சுமார் 100 முதல் 125 மீட்டர் வரை பயணிக்கவும். கோழி இடதுபுறம் திரும்பி, வலது புறத்தில் அமைந்துள்ள பொருள் சொத்தை அடைய சிறிது தூரம் செல்லுங்கள். இந்த சாலை முன்பதிவின் முடிவில் இந்த சொத்து அமைந்துள்ளது.

தீர்மான அறிவிப்புகளுக்காக 2021 மாசி மாதம் 12 ஆம் திகதி அரச வர்த்தமானி மற்றும் 2021 மாசி மாதம் 13 ஆம் திகதி டேலி நியூஸ், தினமின மற்றும் தினகரன் பத்திரிகைகளை பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை: -**

ஏல விற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்).
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்).
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) அவற்றுக்காக விதிக்கப்படும் சகல வரிகளும்.
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவொர் கட்டணம் 1000 ரூபா.
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்).
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி 2000 ரூபா.

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள்,வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

தொடர்பான விவரங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை பார்வையிட
கடன் நிர்வாக திணைக்களம்,
எம் சி பி வங்கி லிமிடெட்
இல.8, யோர்க் ஆர்க்கேட் கட்டிடம், லேடன் பஸ்டியன் வீதி, கொழும்பு 01
தொலை பேசி: +94 11 5 222 200

- **முன்னறிவிப்பின்றி மேல் குறிப்பிட்ட ஏல விற்பனையை நடாத்தவும்/நிறுத்தவும் வங்கியிற்கு உரிமை உண்டு.**
- **கொவிட் 19 நெறிமுறைகளை கடைப்பிடிக்கும் வண்ணம் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டுதல்களின் படி ஏலம் நடாத்தப்படும்.**

DK's AUCTIONS To Professionally Serve the Nation

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com



**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்**

## தேசிய அபிவிருத்தி வங்கி பீ.எல்.சீ (அவிசாவளை கிளை)

## "வெளிமன்னவ ஒவிட" என அழைக்கப்படும் அவிசாவளையில் அமைந்துள்ள பெறுமதி மிக்க சொத்தினது ஏல விற்பனை

அனுமதி பெற்ற நில அளவையாளர் M.D.P.J குமார என்பவரால் தயாரிக்கப்பட்டு 13 மார்ச் 2012 திகதியிடப்பட்ட நிலவரைப்பட இலக்கம் 4525 லொட் 5 இல் குறிப்பிடப்படும் சகலதும் பிரிக்கப்பட்டு குறிக்கப்பட்ட **"வெளிமன்னவ ஒவிட"** எனும் நிலம், சப்ரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தில், அலுத்கம கோறளே மேற்கின் தேஹிஓவட பிரதேச சபைபிரிவிக்குட்பட்ட தேஹிஓவட பிரதேச செயலக பிரிவில் எபலபிடிய கிராம சேவகர் பிரிவில் குறுகல்லவில் அமைந்துள்ளது. குறிப்பிடப்பட்ட காணியின் லொட் இல.5 ஆனது வடக்கில் குறித்த வரைப்படத்தின் லொட் இல. 4 இனாலும், கிழக்கில் வீதியினாலும், தெற்கில் கொட்டுவெ வட்ட மற்றும் மேற்கில் களனி கங்கையினாலும் சூழப்பட்டு, **அவிசாவளை நிலப்பதிவில்** வொலியூம் போலியோ C22/41 எனப்பதியப்பட்ட காணியின் பரப்பளவு **ஒரு ரூட் பத்தொன்பது பேர்ச்சஸ்** (**A0:R1:P19**) ஆகும்.

மின்சாரம் வழங்கும் தொகுதி, நீர் வழங்கும் தொகுதி, தொலைத்தொடர்பு சாதனம் மற்றும் வளி பதனமாக்கி சாதனம் என்பன உள்ளடங்கலாக மேற்குறிப்பிட்ட நிலத்தில் தற்போது உள்ளவையும் இனி வர உள்ளவையும், அசைய முடியாத தாவரங்கள், இயந்திரங்கள், பிட்டிங்ஸ் மற்றும் சேவைகள் அனைத்தும் உள்ளடங்கலாக.

அவிசாவளை பொது நொத்தரிசு (Ms.) P.Y. இந்திக ராஜபக்சே அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 15 பெப்ரவரி 2018 திகதியிடப்பட்ட பிணைப்பு இல. 87 மூலம் **குறுப்புகே சுசந்த ஜெயசேன** என்பவரை கடமையாளராக கொண்டு **தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சி.** யிற்கு அடகு வைக்கப்பட்ட மீட்கப்படாத சொத்து.

**தேசிய அபிவிருத்தி வங்கி பி.எல்.சி. இனால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்,**
நான் மேலே உள்ள சொத்துக்களை பொது ஏலத்தில் திங்கட்கிழமை
31 மே 2021 அன்று மு.ப 10.30 இற்கு குறித்த பகுதியில் விற்பனை செய்கிறேன்.

**சொத்துக்கான அணுகல்**

அவிசாவளை நகர மத்தியிலிருந்து யட்டிடந்தோட்ட வீதியில் 1.5 கிலோமீட்டர் தூரம் சென்று இடப்புறமாக அமிதிரிகல வீதியில் திரும்பி 4.3 கிலோமீட்டர் தூரம் சென்ற பின்பு, இடப்புறம் ப்ளூாமிங் விடுமுறை விடுதியை நோக்கி செல்லும் வீதியில் திரும்பவும். வீதியில் பாலத்திற்கு சற்று முன்னர், 35 மீட்டர் தூரம் சென்ற பின் குறித்த இடமானது வீதியின் வலப்புறத்தில் அமைந்துள்ளது. குறித்த இடத்திற்கு பொது சட்ட ரீதியான மோட்டார் சைக்கிள் அணுகல் வசதி உள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை: -**

ஏல விற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் மற்றும் அதனுடன் கூடிய ஏனைய வரிகளுடன் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்)
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் தொகை ரூபாய் 1000/=
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(6) நிபந்தனைகுட்பட்ட ஏலத்தின் நொத்தரிசு பணம் ரூபாய் 2000/=

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள்,வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

மேலதிக தகவல்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை கீழ்க்காணும் முகவரியில் ஆராய்ந்து கொள்ளலாம்.
முகாமையாளர்- மீள அறவிடுதல்,
தேசிய அபிவிருத்தி வங்கி பி. எல். சி.
இல.40, நவம் மாவத்தை, கொழும்பு 02.
தொ.பே: 011 - 2448448/ தொலை நகல் இல. 011 - 2440262

- **முன்னறிவிப்பின்றி மேல் குறிப்பிட்ட ஏல விற்பனையை நடாத்தவும்/நிறுத்தவும் வங்கியிற்கு உரிமை உண்டு.**
- **கொவிட் 19 நெறிமுறைகளை கடைப்பிடிக்கும் வண்ணம் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டுதல்களின் படி ஏலம் நடாத்தப்படும்.**

DK's AUCTIONS To Professionally Serve the Nation

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com



**1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்**

## நேசன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ

## ”முடக்குவெகேல" எனும் பணகொடவில் அமைந்துள்ள மரங்கள், தாவரங்கள் மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய நிலமான மதிப்புமிக்க சொத்திற்கான ஏல விற்பனை

மார்ச் 13, 2012 தேதியிட்ட லாட் ஏ என திட்ட எண் 2323 இல் சித்தரிக்கப்பட்டுள்ள, ஆர்.எ.சிறிசேன என்ற உரிமம் பெற்ற நிலஅளவையாலரால் அனைத்தும் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட **"முடக்குவெகேல"** எனும் பணகொடவில் அமைந்துள்ள கட்டடங்கள் மற்றும் காணியிலுள்ள அனைத்தையும் உள்ளடக்கிய நிலமான மதிப்புமிக்க சொத்தானது மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில், இல 482, பானகொட மேற்கு கிராமசேவகர் பிரிவு, ஹோமாகம பிரதேச செயலகப்பிரிவு, ஹோமாகம பிரதேச சபை எல்லைக்குள், ஹெவகம் கோரள்ளேயின் பல்லே பத்துவில் இலக்கம். 2323 திட்டத்தில் லொட் A இல் குறிப்பிட்டது போல் அமைந்துள்ளதுடன் திட்ட இல 2323 மற்றும் தொகுதி போலியோ A 230/88 இல் ஹோமாகம நிலஅளவைத் திணைக்களத்தில் பதியப்பட்டு முப்பத்தி ஆறு தசம் ஏழு பெர்ச்கள் (A0:R0:P36.7) பரப்பளவுமுடையது. எஸ். இடமல்கோட எல்.எஸ். என்பவரால் 27/12/1973 தேதியிட்ட திட்ட எண் 254 இல் லாட் 5 இனால் குறிப்பிடுவதும் உள்ளடங்களாக.

நொதாரிசு ஆர்.எம்.ஷமலீ குமாரி ராஜபக்ஷ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2016 ஜூலை மாதம் 03 ஆம் திகதியிடப்பட்ட 483 ஆம் இலக்க பிணை உறுதி மூலமும், இரண்டாவது பிணைப்பாக 2016 நவம்பர் மாதம் 28 ஆம் திகதியிடப்பட்ட 577 ஆம் இலக்க பிணை உறுதி மூலமும் **சனி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (பிரைவட்) லிமிட்டட்** கடமையாளராகவும் மற்றும் **மதராகே டான் சந்தன குமார கருணாரத்ன** (சனி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி பிரைவட் லிமிட்டட்டின் இயக்குனர்) அடகு வைப்பவராகவும் மற்றும் மேலதிக பிணைப்பாக நொத்தாரிசு மஹாதேல்கெ சஜனி கமிலிய பீரிஸ் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட, 2019 ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதியிடப்பட்ட 1420 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் **சியம்பலப்பே கங்கணமலகே ஷ்ரசந்தி விக்கரமசிங்க்கே** அவர்களை கடமையாளராகவும் மற்றும் மதராகே டான் சந்தன குமார கருணாரத்ன என்பவரை அடகு வைப்பவராகவும் கொண்டு, இல.242,யூனியன் பிளேஸ், கொழும்பு 02 இல் உள்ள நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ யிற்கு, சனி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (பிரைவட்) லிமிட்டட் மற்றும் சியம்பலப்பே கங்கணமலகே ஷ்ரசந்தி விக்கரமசிங்க்கே என்பவரால் பெறப்பட்ட கடனிற்கு அடகு வைக்கப்பட்டு, உரிமை வழங்கப்பட்ட சொத்து.

மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட **சனி இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (பிரைவட்)லிமிட்டட் மற்றும் சியம்பலப்பே கங்கணமலகே ஷ்ரசந்தி விக்கரமசிங்க்கே** என்பவரால் மீட்கப் படாத சொத்து.

**நேசன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீயினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ்**
நான் மேலே உள்ள சொத்துக்களை பொது ஏலத்தில் விற்பேன்
திங்கட்கிழமை 31 மே 2021 அன்று 1.30 பி..ப. அளவில் குறித்த இடத்தில் விற்கிறேன்.

**சொத்துக்கான அணுகல்**

ஹோமாகம நகரிலிருந்து ஹை லெவல் வீதி ஊடாக பணகொட இராணுவ முகாமைக்கடந்து அவிசாவளை நோக்கி செல்லும் போது இரண்டு கிலோமீட்டர் தூரத்தில் இடதுபக்கம் திரும்ப இருபது அடி அகலமான வீதியைக் காணலாம். இது லங்கா டைல்ஸ் காட்சியறைக்கு எதிரே அமைந்துள்ள ஒரு பிரத்தியேக கிரவல் வீதியாகும். இந்த வீதியூடு செல்லும் பொழுது கிட்டத்தட்ட 50 மீட்டர் தூரத்தில் இலக்கம் 2323 ஐத் தாங்கிய காணி கணக்கெடுப்பு வரைபடத்திலுள்ள குறித்த சொத்தைக் காணலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை: -**

ஏல விற்னையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்)
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்)
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) மற்றும் பொருத்தமான பங்கு வரி.
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவொர் கட்டணம் 1000 ரூபாய்
(5) விற்பனை செலவுகள் மற்றும் பிற கட்டணங்கள் (இருப்பின்)
(6) விற்பனைக்கான நொத்தாரிசி சம்பளம் 2000 ரூபாய்

கொள்முதல் விலையின் மிகுதி 90% விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள்,வரிகள், அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்பு கொண்டு பெற முடியும்.**
நேசன் ட்ரஸ்ட் வங்கி பீ.எல்.சீ
இல.242,
யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொ.இல: 0114218742

- **முன்னறிவிப்பின்றி மேல் குறிப்பிட்ட ஏல விற்பனையை நடாத்தவும்/நிறுத்தவும் வங்கியிற்கு உரிமை உண்டு.**
- **கொவிட் 19 நெறிமுறைகளை கடைப்பிடிக்கும் வண்ணம் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்ட கடுமையான வழிகாட்டுதல்களின் படி ஏலம் நடாத்தப்படும்.**

DK's AUCTIONS To Professionally Serve the Nation

**டல்லஸ் கெலார்ட்**
அங்கீகாரம் பெற்ற ஏலவிற்பனையாளர்
இல .146/3, காலதேரா கார்டன்ஸ், கீழ் துடுகெமுனு தெரு, கொஹுவல.
தொ.பே: 11 4367467, 11 4367111 | aucslk@gmail.com

திகதி 06.05.2021 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4473
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 7,628,600.00
ஆங்கில எழுத்து T
வெற்றி இலக்கங்கள் 7 7 7 4 6 2
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 16,530,123.60

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2768
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,290,460.00
ஆங்கில எழுத்து V
வெற்றி இலக்கங்கள் 42 69 73 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 70,710,548.80

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 830
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,286,840.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 132,260,003.60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து C
சுப்பர் இலக்கம் 13
வெற்றி இலக்கங்கள் 44 65 69 74

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 510
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,836,060.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 18 36 52 59
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 96,401,296.00

செவண
சீட்டிழுப்பு இலக்கம் : 335
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,011,680.00
ஆங்கில எழுத்து I
வெற்றி இலக்கங்கள் 36 60 61 66
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,000,000.00

06.05.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 553,163
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ. 22,053,640.00
ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 27

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

# பொறுப்பற்ற செயற்பாடுகளின் காரணமாகவே கொரோனா எண்ணிக்கையில் அதிகரிப்பு

**திறப்பனை தினகரன் நிருபர்**

மக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகளின் காரணமாகவே கொரோனா தொற்றுக்கு ஆளாகுபவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

காணி அமைச்சரின் அநுராதபுர அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

சுகாதார வழிமுறைகள் மற்றும் சுகாதார பிரிவினரின் வழிகாட்டல் ஆலோசனைகளை கவனத்திற் கொள்ளாமல் அலட்சியமாக நடந்துகொண்டமையே இதற்கு பிரதான காரணம். நகர பகுதிகளில் உள்ள மக்களின் அன்றாட நடவடிக்கைகளின் போது சுகாதார வழிமுறைகளை சரியாக பின்பற்ற தவறியமையாலேயே இன்று நகர் புற பகுதிகளில் மக்களுக்கு தொற்று அதிகரித்து காணப்படுகின்றது.

கொவிட் 19 வைரஸிலிருந்து நாம் பாதுகாப்பு பெற வேண்டுமானால் குறிப்பிடப்பட்டுள்ள கொவிட் 19 பாதுகாப்பு முறைகளை சரியாக பின்பற்ற வேண்டும்.

அவரவரின் பொறுப்புக்களை சுகாதார வழிமுறைகளை பேணி நிறைவேற்றும் பொழுது மாத்திரமே இதிலிருந்து பாதுகாப்பு பெற முடியும் என அவர் தெரிவித்தார்.

# மதவாச்சி பிரதேசத்தில் 250 பேர் தனிமைப்படுத்தலில்

மதவாச்சி பிரதேச செயலகப் பிரிவில் தற்பொழுது covid 19 வைரஸ் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு தேவையான வசதிகளை அவசரமாக பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற் கொண்டுள்ளதாக பிரதேச செயலாளர் எம்.சி.மலவர ஆரச்சி தெரிவித்தார்.

மதவாச்சி பிரதேசத்தினுள் மாத்திரம் சுமார் 250 நபர்கள் இதுவரையில் தனிமைபடுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கு தேவையான பத்தாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருட்களை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரதேச சபையின் உதவியுடன் இவர்களுக்குத் தேவையான சுத்தமான குடிநீரை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பகுதி கிராம உத்தியோகத்தர்களின் தொலைபேசி இலக்கங்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

இத் திட்டத்திற்கு உதவ சகலரும் முன்வந்துள்ள நிலையில் பிரதேச சபை, பொலிஸார் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம், பிரதேச சமுர்த்தி வங்கிகள் ஆகியன ஒன்றிணைந்து இவ் வேலைத் திட்டத்தை முன்னெடுத்துச்செல்ல தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. மெதடிஸ்த மத்திய கல்லூரியில் 13 மாணவர்கள் பொறியியல் துறைக்கு தெரிவு

**(வெல்லாவெளி தினகரன் நிருபர்)**

வெளியாகிய க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியில் 13 மாணவர்கள் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளதாக கல்லூரியின் அதிபர் இ.பாஸ்கர் தெரிவித்துள்ளார்.

இக் கல்லூரியிலிருந்து இப்படி பெரும் எண்ணிக்கையான மாணவர்கள் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளமை இதுவே முதன் முறையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதில் நான்கு மாணவர்கள் "மெரிட்" அடிப்படையில் சித்தியடைந்துள்ளமை மாவட்டத்தில் மேலதிகமாக நான்கு மாணவர்கள் பொறியியல் துறைக்கு தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

மாவட்ட மட்டத்தில் முதல் 65 இடங்களைப் பெற்றுக் கொண்டவர்களில் மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியைச் சேர்ந்த 15 மாணவர்கள் உள்ளனர் என்பதுடன், அவர்கள் அனைவரும் மாவட்டத்தின் கல்வி வசதி மற்றும் பொருளாதார வசதி குறைந்த தூரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

# சாஹிரா கல்லூரி மாணவி மருத்துவ பீடத்திற்கு தெரிவு

**திறப்பனை தினகரன் நிருபர்**

க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் பிரகாரம் அநுராதபுரம் சாஹிரா கல்லூரி மாணவி எம்.ஆர். சைய்னா பர்ஹத் மருத்துவ பீடத்திற்கு தெரிவாகியுள்ளார். இவர் உயிரியல் துறையில் 03 ஏ பெற்றுள்ளார். இவரின் பெறுபேறுகளின் பிரகாரம் மாவட்ட நிலையில் 02 ஆம் இடமும் அகில இலங்கை ரீதியில் 157 ஆவது இடமும் பெற்றுள்ளார். இவர் 2.4681 வெட்டுப் புள்ளிகளைப் பெற்று தெரிவாகியுள்ளதாக கல்லூரி அதிபர் ஜவ்பர் தெரிவித்தார். பரீட்சைக்கு தோற்றிய அதிகமான மாணவர்கள் இம்முறை சிறந்த பெறுபேறுகளை பெற்றுத்தந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். இவர் அநுராதபுரம் எம்.ரபீக்டீன் எஸ்.பர்ஸானா பேகம் தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியாவார்.

கொரோனா அச்சம்

# பள்ளிவாசல்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்த நடவடிக்கை

**றொட்டவெவ குரூப் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துவரும் சூழ்நிலை காரணமாக, கொரோனா பரவலின் வேகத்தை கட்டுப்படுத்தும் வகையில் கிண்ணியா பிரதேசத்தில் உள்ள அனைத்து பள்ளிவாசல்களின் செயற்பாடுகளை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் நேற்று லுகர் தொழுகையுடன் அனைத்து பள்ளிவாசல்களின் கதவுகளும் மறுஅறிவித்தல் வரை மூடப்படவுள்ளன. எனினும் அதான் சொல்லுவதற்கான அனுமதி மாத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச். கனி குறிப்பிட்டார்.

ஏற்கனவே கிண்ணியாவில் அத்தியாவசிய பொருட்கள் விற்பனை தவிர்ந்த ஏனைய அனைத்து வியாபார நிலையங்களையும் மறுஅறிவித்தல் வரை மூடுவதற்கு பிறப்பிக்கப்பட்ட உத்தரவு இன்னும் அமுலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

NLDB

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை

**பெறுகை அறிவித்தல்**

**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பொலன்னறுவை பயிர்நிலத்தில் முன்மொழியப்பட்ட சோளம் மற்றும் சொர்கம் (Sorghum) பயிர்ச்செய்கை திட்டத்திற்கு உரித்தான 157 ஏக்கர் நிலத்திற்கான மழைத்தூவான் தெளிப்பு நீர் நீர்ப்பாசன முறைமை (Rain Gun Sprinkler Irrigation System) ஒன்றை நிறுவுவதற்கான**

**விலைமனுக் கோரல்**

***விலைமனு இலக்கம் - 928/irrigation-system/2021 -***
***இறுதித் திகதி 2021/06/01 அன்று பி.ப. 2.30***

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான கந்துருவளையில் அமைந்துள்ள பொலன்னறுவை பயிர்நிலத்தில் முன்மொழியப்பட்ட சோளம் மற்றும் சொர்கம் (Sorghum) பயிர்ச்செய்கை திட்டத்திற்கு உரித்தான 157 ஏக்கர் நிலத்திற்கான மழைத்தூவான் தெளிப்பு நீர் நீர்ப்பாசன முறைமை (Rain Gun Sprinkler Irrigation System) ஒன்றை நிறுவுவதற்காக கொழும்பு 05, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, இலக்கம் 40 இல் அமைந்துள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் தலைவர் மூலம் வழங்குநர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| நிறுவுவதற்காக முன்மொழியப்பட்ட பகுதியின் பெயர் | மழைத்தூவான் தெளிப்பு நீர் நீர்ப்பாசன முறைமையின் கொள்ளளவு | விலைமனு பிணை வைப்பு பெறுமதி |
|---|---|---|
| பிரிவு இலக்கம் A மற்றும் B | 157 ஏக்கர் நிலப்பகுதிக்கு முழுமையாக நீர் வழங்குவதற்காக | ரூபா 2,240,000 |

இந்தப் பெறுகைக்கான விலைமனு ஆவணத்தை வாரத்தின் சாதாரண வேலை நாட்களில் கொழும்பு 05, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, இலக்கம் 40 இல் அமைந்துள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் வழங்கல் பிரிவில் இருந்து 2021 மே 28 ஆம் திகதி பி.ப. 3.00 வரை பெற்றுக்கொள்ள முடியும். ஒரு விலைமனுவுக்காக ரூபா 3,000.00 வீதம் மீளளிக்கப்படாத வைப்பு ஒன்று அறவிடப்படுவதோடு அந்தப் பணம் கணக்காளரிடம் வைப்புச் செய்தல் வேண்டும். 2021 ஜூன் 01 ஆம் திகதி பி.ப. 2.30 க்கு விலைமனுக்கள் ஏற்பது முடிவுறும் என்பதோடு அந்த நேரம் தாண்டிய உடன் கொழும்பு 05, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, இலக்கம் 40 இல் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு, அதற்காக வழங்குநர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு தமது அடையாளத்தை முன்வைத்து பங்கேற்க முடியும். குறித்த ஒவ்வொரு விலைமனுக்களையும் இடுகின்ற கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பொலன்னறுவை பயிர்நிலத்தில் முன்மொழியப்பட்ட சோளம் மற்றும் சொர்கம் (Sorghum) பயிர்ச்செய்கை திட்டத்திற்கு உரித்தான 157 ஏக்கர் நிலத்திற்கான மழைத்தூவான் தெளிப்பு நீர் நீர்ப்பாசன முறைமை (Rain Gun Sprinkler Irrigation System) ஒன்றை நிறுவுவதற்கான விலைமனுக் கோரல்'' என்று தெளிவாக குறிப்பிட்டு, மேலுள்ள திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கீழ் குறிப்பிடப்பட்டவருக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

வழங்குநர்களை அறிவூட்டுவதற்காக விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஒன்று (Pre Bidding Meeting) 2021 மே மாதம் 18 ஆம் திகதி மு.ப. 9.30க்கு தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறும்.

இது தொடர்பில் தெளிவு பெற வேண்டி இருந்தால் கீழுள்ள முகவரியில் அமைந்துள்ள வழங்கல் பிரிவில் இருந்து கோரிக்கை கடிதம் ஒன்றின் மூலம் அல்லது தொலைபேசி அழைப்பு ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை**
**இலக்கம் 40, நாவல வீதி,**
**நாரஹேன்பிட்ட, கொழும்பு 05.**
**தொ.பே.இ. 011-2501701/2 011-5746308**

# பதுளை பாரதி த.ம.வித்தியாலயத்தில் இருபத்தியிரண்டு மாணவர்கள் சித்தி

**பதுளை தினகரன் விசேட நிருபர்**






பதுளை பாரதி தமிழ் மகா வித்தியாலயத்தில் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய, 22 மாணவர்கள் சித்தியடைந்து, பல்கலைக் கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு, இவ் வித்தியாலயத்திலிருந்து 26 மாணவ, மாணவிகள் தோற்றியிருந்த போதிலும், 22 மாணவர்கள் மட்டுமே சித்தியடைந்துள்ளனர். இவர்களில் கணேசன் கௌரி கூடிய பெறுபேற்றைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளதோடு, அழகுராஜ் எப்தர்நிஷான் இரண்டாம் இடத்தையும் மோகனநாதன் அபிலாஷினி மூன்றாம் இடத்தையும், தியாகராஜா சியாமிளா நான்காம் இடத்தையும் பெற்றுள்ளார்.

22 மாணவ, மாணவிகளும் தமிழ் 92 வீதமும், அரசறிவியல் 94 வீதமும், மனையியல் 94வீதமும், அளவையியல் 67 வீதமும், சித்திரம், சங்கீதம், இந்து நாகரீகம், புவியியல் ஆகிய பாடங்களில் 100 வீதமும் சித்தியடைந்துள்ளதாக வித்தியாலய அதிபர் கந்தசாமி ரவிக்குமார் தெரிவித்தார். அத்துடன் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் 22 மாணவ, மாணவிகள் சித்திபெற்று, பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதிபெற்றுள்ளமையும், பெரும் சாதனையேயாகும். அவர்களுக்கும் கற்பித்த ஆசிரியர்களுக்கும் இனிய நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்றும் அதிபர் கூறினார். சித்திபெற்ற அனைத்து மாணவ, மாணவிகளும் பெருந்தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
கமத்தொழில் அமைச்சு
MINISTRY OF AGRICULTURE
THE WORLD BANK

**பெறுகைக்கான அறிவித்தல் - காலஎல்லை நீடிப்பு**

**சிற்றளவீட்டு விவசாயிகளுக்கான களஞ்சிய வசதிகளை அமைத்தல்**

விவசாய அமைச்சினால் உலக வங்கியின் கடன் உதவியின் கீழ் வேளாண் அமைச்சகத்தால் சிற்றளவீட்டு விவசாயிகளுக்கு களஞ்சிய வசதிகளை அமைப்பது தொடர்பாக **2021.04.20** ஆம் திகதி வெளியான பத்திரிகை விளம்பரத்தில் வெளியிடப்பட்ட மனுக்களின் கடைசி திகதி மற்றும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிகள் பின்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் திகதி | - **2021.05.24 0900 - 1500** மணி வரை |
| மனுக்கள் முடிவுறும் திகதி | - **2021.05.25 1430** மணி |
| மனுக்கள் திறக்கப்படும் திகதி | - **2021.05.25 1430** மணி |

செயலாளர்,
**கமத்தொழில் அமைச்சு**
80/5, "கொவிஜன மந்திரய",
இராஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்லை.

# டிக்கோயா நுண்கலை கல்லூரியில் 58 பேர் பல்கலைக்குத் தகுதி

**ஹற்றன் விசேட நிருபர்**

க.பொ.த உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் ஹற்றன் கல்வி வலயத்துக்குட்பட்ட டிக்கோயா நுண்கலை கல்லூரியில் 58 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் எம்.மூவேந்தன் தெரிவித்தார்.

வர்த்தக பிரிவில் 10 பேர் தோற்றியுள்ளதாகவும் அதில் கணக்கியலில் 90 சதவீதமான மாணவர்களும், பொருளியல் பிரிவில் 60 சதவீதமான மாணவர்களும், வணிக பிரிவில் 70 சதவீதமான மாணவர்களும் சித்திபெற்றுள்ளனர். கலைப்பிரிவில் 72 பேர் தோற்றி 55 மாணவர்கள் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்க தகுதி பெற்றுள்ளனர். இதில் தமிழ் பாடத்தில் 91 சதவீத மாணவர்களும், அரசியல் விஞ்ஞானப்பாடத்தில் 95 சதவீத மாணவர்களும்,புவியியல் பாடத்தில் 89 சதவீதமான மாணவர்களும், வரலாறு பாடத்தில் 60 சதவீதமான மாணவர்களும், இந்து சமயத்தில் 95 சதவீதமான மாணவர்களும், நாடகமும் அரங்கவியல், கர்நாடக சங்கீதம், கிறிஸ்தவம், சித்திரம் ஆகிய பாடங்களில் 100 சதவீதமான மாணவர்களும் சித்தி பெற்றுள்ளனர்.

இதில் வர்த்தக பிரிவில் ஐ.ரி.அஜித்குமார் 03 பி சித்திகளையும், ரிசாந்தனி, ஏ,பி,சி சித்திகளையும், பெற்றுள்ளனர்.

# சுய தொழில் முயற்சியாளர்களுக்கு சந்தை வாய்ப்புகள்

**திறப்பனை தினகரன் நிருபர்**

வட மத்திய மாகாணத்திற்குள் சுய தொழில் முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாகாண ஆளுநர் மகிபால ஹேரத் தெரிவித்தார். உள்நாட்டு வெளிநாட்டு சந்தைகளை இவர்களுக்கு ஏற்படுத்திகொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். வட மத்திய மாகாணத்தில் கிராமிய மட்டத்தில் சுய தொழில் முயற்சியில் அதிகமானோர் ஈடுபட்டுள்ளமை தெரியவருவதோடு, இவர்களின் உற்பத்திக்கு தேவையான சந்தை வாய்ப்பு மாகாணத்திற்குள் போதியளவு இல்லாமையால் இது பற்றி கவனத்தில் எடுத்த ஆளுநர் இவர்களின் உற்பத்திக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தை வாய்ப்பை பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்தார். இதன் மூலம் கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்ட முடியும் எனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தியாவில் தொடரும் உச்சம்:

# ஒரே நாளில் 4,14,188 பேருக்கு கொரோனா பாதிப்பு



இந்தியாவில் ஒரே நாளில் 4,14,188 பேருக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட்டு 2வது நாளாக தொடர்ந்து தொற்று எண்ணிக்கை உச்சமடைந்துள்ளது.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றின் 2வது அலை பிற உலக நாடுகளை விட இந்தியாவில் அதிக பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது. தொடர்ந்து ஏப்ரல் மாத முதல் வாரத்தில் இருந்து சீராக எண்ணிக்கை உயர்ந்த வண்ணம் உள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் கொரோனா பாதிப்பு தொடர்ந்து 2வது நாளாக இன்று உச்சமடைந்து உள்ளது. ஒரேநாளில் புதிதாக 4,14,188 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இது நேற்றைய (4,12,262) எண்ணிக்கையை விட சற்று அதிகம் ஆகும்.

இதுதொடர்பாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் 4 இலட்சத்து 14 ஆயிரத்து 188 பேர் கொரோனா பாதிப்புக்கு ஆளாகி உள்ளனர். இதனால் மொத்த கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 2 கோடியே 14 இலட்சத்து 91 ஆயிரத்து 598 ஆக உயர்வடைந்து உள்ளது.

கொரோனா பாதிப்புகளால் நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் 3,915 பேர் உயிரிழந்து உள்ளனர். இது நேற்றைய எண்ணிக்கையை (3,980) விட சற்று குறைவாகும். இதனால் மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 2,34,083 ஆக உயர்ந்து உள்ளது.

கடந்த 24 மணிநேரத்தில் 3 இலட்சத்து 31 ஆயிரத்து 507 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர். இதனால் மொத்த குணமடைந்தோர் எண்ணிக்கை 1 கோடியே 76 லட்சத்து 12 ஆயிரத்து 351 ஆக உயர்வடைந்து உள்ளது.

கொரோனா பாதிப்பு காரணமாக தற்போது 36,45,164 பேர் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். நாட்டில் இதுவரை போடப்பட்ட கொரோனா தடுப்பூசிகளின் எண்ணிக்கை 16 கோடியே 49 இலட்சத்து 73 ஆயிரத்து 58 ஆக உள்ளது என்று தெரிவித்து உள்ளது.

கொரோனா பரிசோதனையும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்தியாவில் நேற்றுவரை 29 கோடியே 86 இலட்சத்து ஓராயிரத்து 699 கொரோனா பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளன. நேற்றுமுன்தினம் ஒரு நாளில் மட்டும் 18,26,490 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டு உள்ளது என இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ஐ.சி.எம்.ஆர்) தெரிவித்துள்ளது.

## வர்த்தக அமைச்சு
## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

EDB

**வர்த்தக அமைச்சின் கீழ் செயற்படுத்தப்படும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் பதவியில் (HM 2-2) வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

**தகைமைகள்:**

**வெளி விண்ணப்பதாரிகளுக்காக**
விஞ்ஞானம்/விவசாயம்/வியாபார நிர்வாகம் பற்றிய கலாநிதி பட்டம் மற்றும் குறைந்தபட்சம் 10 வருட சிரேஷ்ட மட்டத்திலான முகாமைத்துவ சேவை அனுபவத்தைக் கொண்டிருப்பதுடன் அதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் உறுதி செய்யப்பட்ட அறிக்கையைக் கொண்டிருத்தல் வேண்டும். கலாநிதி பட்டத்தைப் பெற்றுக் கொண்ட பின்பு குறைந்தபட்சம் 05 வருட சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் நானாவிதக் குழுக்களை செயற்படுத்தல் மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அபிவிருத்தி செய்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் பற்றிய அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அரச சேவை அதிகாரிகளுக்கு:**
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் அதிகாரங்கள் கடமைகள் மற்றும் செயற்பாடுகளை திறமையுடன் செயற்படுத்துவதற்கு மற்றும் நிறைவேற்றுவதற்கு இலங்கை நிர்வாக சேவையின் முதலாம் வகுப்பு மற்றும் அதற்கு மேற்பட்ட அதிகாரிகள் இரட்டை அடிப்படையில் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட முடியும்.

**சம்பள அளவு**: (HM 2-2): ரூ. 93020/- 12x2700 = ரூ. 125,420 (மாதாந்தம்) மற்றும் அரசு அனுமதித்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும்.

55 வயதிற்குக் குறைந்த மேற்படி தகைமைகளைக் கொண்டுள்ள நபர்களுக்கு இப்பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமையுண்டு அத்துடன் அரச திணைக்களம், கூட்டுத்தாபனம் மற்றும் நியதிகள் நிறுவனத்தின் விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி வயதெல்லை பொருந்தாது.

**வேறு தகைமைகள்**
- சகல விண்ணப்பதாரிகளும் இலங்கை பிரஜையாய் இருத்தல் வேண்டும்.
- தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடிய உடல் மற்றும் மனநிலை தகுதியை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- நற்சான்று உடையவராய் இருத்தல் வேண்டும்.

**பதவிக்கு உரித்தான வேறு சலுகைகள்**
- 2016.10.27ம் திகதிய PED /1/2015 (i) சுற்றுநிருபத்தின் பிரகாரம் வாகனம் ஒன்று வழங்கப்படும்.
- ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் மருத்துவ உதவி முறைமைகள்
- பெற்றுக் கொண்ட மருத்துவ விடுமுறைகள் நிதியிடல் மற்றும் வருடாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு
- அரசு அனுமதித்த சலுகை வட்டி விகிதத்தின் கீழ் வீட்டுக் கடன் மற்றும் அனர்த்தக் கடன்
- ஊழியர் சேமலாப நிதி ஊழியர்களிடமிருந்து 10% நிறுவனத்திலிருந்து 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி நிறுவனத்திலிருந்து 3%

**விண்ணப்பிக்கும் முறை:**
நீங்கள் மேற்படி தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் 05ஆம் மாடியில் அமைந்துள்ள மனிதவள முகாமைத்துவ பிரிவில் அல்லது www.srilnkabusiness.com இணையத் தளத்திலிருந்து ("Announcements" தொடரின் கீழ்) பெற்றுக் கொண்ட விண்ணப்பத்தை 2021.05.31ம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு செயலாளர், வர்த்தக அமைச்சு, 7ஆம் மாடி, சதோச செயலகம், இல. 27, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களுடன் குறித்த சகல சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கான விண்ணப்பம்" என்று குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

அரச துறை ஊழியர்களின் விண்ணப்பங்கள் தமது நிறுவனத் தலைமையூடாக சமர்ப்பித்தல் வேண்டும். அவ்விண்ணப்பத்தின் மேலதிக பிரதியொன்றை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு முன்னர் செயலாளர், வர்த்தக அமைச்சிற்கு அனுப்புமாறு விண்ணப்பதாரிகள் அறிவுறுத்தப்படுகின்றனர். தேர்ந்தெடுத்தல் முறையானது நேர்முகத் தேர்வின் மூலம் மட்டும்.

**செயலாளர்,**
**வர்த்தக அமைச்சு,**
**சதோச செயலகம்,**
**இல. 27, வொக்ஷோல் வீதி,**
**கொழும்பு -02.**
**தொ.பே. 011-2110565**
திகதி: 08.05.2021

NLDB

## தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை
## பெறுகை அறிவித்தல்

தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபைக்கு சொந்தமான பண்ணைகளுக்கு தயாரிக்கப்பட்ட கால்நடை உணவு வழங்கலுக்காக 1986 இன் 15 ஆம் இலக்கம் கொண்ட விலங்கு உணவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்திருக்கும் விலங்கு உணவு உற்பத்தியாளர்களிடம் இருந்து கீழ் குறிப்பிடப்பட்ட காலப் பகுதிக்கு முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

### 1. கால்நடை உணவு

**ரிதிகம பண்ணைக்காக – 2021 ஜுன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் ஓகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி வரை**

| விலங்கு உணவு வகை | அளவு (மெ. தொன்) |
|---|---|
| கறவை மாட்டுக்கான தீவனம் I – (Milking cow Feed – Type I) - Pelleted | 1125 |
| கறவை மாட்டுக்கான தீவனம் II (Milking cow Feed – Type II) - Pelleted | 430 |

விலங்கு உணவு தேவையான அளவு, விவரக் குறிப்பு (Specifications) மற்றும் விலைமனு நிபந்தனைகள் உட்பட ஆவணங்களை அலுவலக (வேலை) நேரத்தில் கீழுள்ள முகவரியில் அமைந்துள்ள தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையின் வழங்கல் முகாமையாளரிடம் இருந்து கோரிக்கை கடிதம் ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு விலைமனுவுக்கு ரூபா 1,000.00 என மீளளிக்கப்படாத வைப்பு ஒன்று அறவிடப்படுவதோடு, ரூபா 10,000.00 மீளளிக்கப்படுகின்ற விலைமனுப் பிணை வைப்புத் தொகையை கணக்காளரிடம் வைப்புச் செய்தல் வேண்டும்.

2021 மே மாதம் 20 ஆம் திகதி பி.ப. 3.30 வரை ஆவணங்கள் வழங்கப்படுவதோடு, 2021 மே மாதம் 21 ஆம் திகதி பி.ப. 2.30க்கு விலைமனுக்கள் ஏற்பது முடிவுறும். அந்த நேரம் தாண்டிய உடன் கொழும்பு 05, நாரஹேன்பிட்ட, நாவல வீதி, இலக்கம் 40 இல் தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு**
**தேசிய பண்ணை விலங்கு அபிவிருத்தி சபை**
**இலக்கம் 40, நாவல வீதி, நாரஹேன்பிட்ட, கொழும்பு-05.**
**தெ.பே.இ. 0112-501701/2, 011-5746308**

## இலங்கை துறைமுக அதிகார சபை

## பகிரங்க ஏல விற்பனை அறிவித்தல்

## கழிக்கப்பட்ட பொருட்கள் விற்பனை

*ஏல விற்பனை நடைபெறும் தினம் - 2021.05.10*

*எனது இல: -*

**LD/S/SLPA/2021/04/PC-03, LD/S/SLPA/2021/05/PC-01, LD/S/SLPA/2021/05/PC-02**

கொழும்புத் துறைமுகத்தின் களஞ்சியங்களில் வைக்கப்பட்டுள்ள கழிக்கப்பட்ட பொருட்கள் (உப்பு மற்றும்) கொள்வனவு செய்து அகற்றிக் கொள்வதற்காக 2021.05.10ம் திகதி 02.00 மணிக்கு பண்டாரநாயக்க தடாகத்தின் நலன்புரிக் கட்டிடத்தில் இவ் ஏலவிற்பனை நடைபெறும்.

ஏல விற்பனை பூமிக்கு உள் நுழைவதற்கு மீளளிக்கப்படாத ரூ. 250/- தொகையை பெறுமதி சேர் வரி செலுத்தி கெனல் களஞ்சியம், இல. 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01 இல் அமைந்துள்ள இலங்கை துறைமுக அதிகார சபையின் சேவை வழங்கும் பிரிவில் விற்பனைப் பிரிவு அலுவலகத்தில் 2021.05.10ம் திகதி 08.30 மணி முதல் 10.00 மணி வரையான காலத்திற்குள் பெற்றுக்கொள்ளலாம். அன்றே 10.00 மணி முதல் ந.ப. 12.00 மணி வரை பொருட்களைப் பரீட்சிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு **(www.slpa.lk)** இணையத்தளத்திற்குள் பிரவேசியுங்கள்.

**பிரதம முகாமையாளர் (சேவை வழங்கல்)**
**2021.05.07**
**சேவை வழங்கல் பிரிவு,**
**இலங்கை துறைமுக அதிகார சபை.**

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)

## அறிவித்தல்

வீதிகள் மற்றும் வீதிகள் சார்ந்த நிர்மாணங்களை மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தலின் மூலம் பொதுமக்களின் போக்குவரத்து நேரத்தைக் குறைத்து வசதியான மற்றும் பாதுகாப்பான வீதி முறைமையொன்றை உரிமையாக்கிக் கொடுப்பதன் மூலம் மக்களின் வாழ்க்கை முறையை உயர்த்தி, மாகாணங்களுக்கிடையில் வளங்கள் பகிரப்படும் முரண்பாடுகளைக் குறைக்கும் நோக்குடன் இந்த அதிகார சபை அமைக்கப்பட்டுள்ளது. இதற்கமைய இந்த நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு இயைபான பின்வரும் பதவி வெற்றிடத்திற்கு மேல் மாகாணத்தினுள் 03 வருடங்கள் நிரந்தர வதிவுடன் கூடிய, செயல்திறன் மிக்க இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. உதவி முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் மனித வளங்கள்)**

**தகைமைகள் (கட்டாயமான பொதுத் தகைமை)**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

அரச நிர்வாகம்/மனித வள முகாமைத்துவம்/வர்த்தகம் மற்றும் கணக்கியல்/சட்டம்/சமூகக் கல்வி போன்ற பாடத் துறைகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெற்றிருத்தல்.

**மற்றும்**

பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் இயைபுடைய துறையில் ஆகக் குறைந்தது ஒரு (01) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் i அல்லது ii)**

மேற்படி வெளி விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

கனிஷ்ட முகாமைத்துவ சேவை வகுதியின் 1ஆந் தரத்தில் இயைபுடைய பதவியொன்றில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்

**சம்பளம்** : 02/2016 முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்தின் பிரகாரம்
MM 1-3 - ரூபா 55,925 – 10x1,375 – 15x1,910 – 98,325

**வயது** : 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**நியமனத்தின் தன்மை:** நிரந்தரம். ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கான உரித்துடைமையுடன்

**மேலதிக அனுகூலங்கள்:**
- அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்
- அரசாங்கத்தினால் அனுமதிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி
- வீட்டு/வாகன/அனர்த்த கடன் வசதிகள்
- மருத்துவ நலன்புரித் திட்டம்

**விண்ணப்பித்தல்**
1. சுயதரவுத் தகவல்களுடன் உறவினரல்லாத, தம்மைப் பற்றி சிபாரிசு செய்யக்கூடிய இரு நபர்களின் பெயர் மற்றும் முகவரி, கல்விசார் / தொழில்சார் தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழ்களின் பிரதிகளுடன், விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். அதேபோல் தற்போது அரச/ கூட்டுத்தாபன / நியாயாதிக்க சபைகளில் சேவையிலுள்ளவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை தமது நிறுவனத்தின் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.
2. விண்ணப்பத்தைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இயைபுடைய பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும்.
3. சகல விண்ணப்பங்களும் 2021-05-20ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**மேல் மாகாண, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12.**
**தொலைபேசி: 011-2321990**

Repeat Your Ad For Better Offers

## உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு

## துணைப்பொருட்கள், உதிரிப் பாகங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்கான பெறுகை

1. கீழ் குறிப்பிடப்பட்ட துணைப்பொருட்கள், உதிரிப்பாகங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்களின் வழங்கலுக்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கீழ் குறிப்பிடப்பட்ட இறுதித் திகதி அன்று மு.ப. 10.00 வரை 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு 10 இல் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பெறுகைக் குழு, தலைவர் மூலம் ஏற்கப்படும்.

| இல. | உருப்படி | விலைமனு ஆவணங்களை பெற முடியுமான காலம் | | இறுதித் திகதி | BES அலுவலகத்தில் மேற்கொள்வதற்கு மீளளிக்கப்படாத கட்டணம் | மதிப்பிடப்படும் செலவு (ரூபா) (மில்லியனில்) |
|---|---|---|---|---|---|---|
| | | தொடக்கம் | வரை | | | |
| 01 | 150 NOS. HIGH FLOW OXYGEN THERAPHY MACHINE | 2021.05.08 | 2021.05.15 | 2021.05.17 | 12,500.00 | 200 |
| 02 | 250 NOS. BI-PAP MACHINE | 2021.05.08 | 2021.05.15 | 2021.05.17 | 12,500.00 | 200 |

கோரப்படும் உருப்படிகளுக்கான பொருத்தமான துணைப்பொருட்கள், உதிரிப் பாகங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உள்ள எந்த ஒரு வழங்குநர்களும் இந்த பெறுகையில் பங்கேற்க தகுதி பெறுவர்.

2. எந்த ஒரு ஆர்வமுடைய விலைமனுதாரர்களும் கூறுவிலை/ விலைமனு ஆவணத்தில் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்கொள்ள முடியும்.
3. மேல் கூறப்பட்ட காலப்பகுதியில் மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 இற்கு இடையே பணிப்பாளர் (நிதி), உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு – 10 என்ற முகவரியில் இருந்து கூறுவிலை/ விலைமனு ஆவணத்தை பெற முடியும். (தொ. இல.: 011-2691916, 2694479 – தொலைநகல் இல.: 011-2698317)
4. விலைமனுக்கள் ஏற்பது முடிவுற்ற உடன் 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு – 10 இல் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளரின் (நிதி) அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
5. 27, டி சேரம் பிளேஸ், கொழும்பு – 10 இல் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளரின் (நிதி) அலுவலகத்தில் கூறுவிலை/ விலைமனு ஆவணத்தை கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.
6. விலைமனு ஆவணத்துடன் கம்பனி பதிவாளர் மூலம் வழங்கப்படும் ஒப்பந்த பதிவு சான்றிதழை சமர்ப்பிக்கவும்.
7. மேலதிக விபரங்களுக்கு, தொ. இல.: 2684732 இல் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு, பணிப்பாளரிடம் (நிதி) இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்/ பிராந்திய பெறுகைக் குழு,**
**உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைகள் பிரிவு,**
**27, டி சேரம் பிளேஸ்,**
**கொழும்பு–10.**

# சர்வதேச செய்திகள்

# குண்டுத் தாக்குதலில் மாலைதீவு முன்னாள் ஜனாதிபதிக்கு காயம்



மாலைதீவு தலைநகர் மாலேவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு ஒன்றில் அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் காயமடைந்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மாலை தனது விட்டுக்கு வெளியில் கார் வண்டிக்குள் நுழையும்போது இந்த வெடிப்பு நிகழ்ந்துள்ளது. அருகில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் சைக்கிளில் பொருத்தி இருந்த குண்டே வெடித்திருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் விசாரணை மேற்கொள்ள அவுஸ்திரேலிய மத்திய பொலிஸ் படை குழு ஒன்று மாலைதீவுக்கு விரைந்துள்ளது.

மாலைதீவில் ஜனநாயக முறையில் தேர்வான முதல் ஜனாதிபதியான 53 வயது நஷீத், கடும்போக்கு இஸ்லாமியவாதிகளை விமர்சிப்பவராக உள்ளார். 2008 ஆம் ஆண்டு பல தரப்புகள் போட்டியிட்ட தேர்தலில் அவர் வென்றபோதும் நான்கு ஆண்டுகளின் பின் சதிப்புரட்சி ஒன்றில் பதவி கவிழ்க்கப்பட்டார்.

நஷீத் தற்போது சபாநாயகராக உள்ளார். இது அந்நாட்டில் இரண்டாவது அதிகாரம் கொண்ட பதவியாகும். இது மாலைதீவு ஜனநாயகம் மற்றும் பொருளாதாரத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்று அந்நாட்டு ஜனாதிபதி இப்ராஹிம் சோலிஹ் விபரித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான இரவு நேர ஊரடங்கு ஆரம்பிப்பதற்கு சற்று முன்னர் இரவு 8.39 மணி அளவிலேயே இந்த குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

இது நஷீட்டை இலக்கு வைத்து நடத்தப்பட்ட தாக்குதல் என்று மாலைதீவு ஆளும் கட்சி எம்.பி ஒருவர் தெரிவித்துள்ளார். எனினும் இந்தத் தாக்குதலுக்கு எந்தத் தரப்பும் பொறுப்பேற்கவில்லை.

நஷீட் பல காயங்களுக்கு உள்ளாகி இருப்பதாக அவருக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவமனை குறிப்பிட்டபோதும் உயிருக்கு ஆபத்து இல்லை என்று தெரிவித்துள்ளது. நஷீட்டின் மெய்க்காவலர்கள் மற்றும் வீதியில் போகின்றவர்கள் என மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

### ஆப்கானில் இருந்து வாபஸ் பெறும்

# அமெரிக்க படைகளின் பாதுகாப்பிற்கு மேலதிக போர் விமானங்கள் விரைவு



ஆப்கானில் இருந்து வெளியேறும் அமெரிக்க மற்றும் கூட்டுப்படைகளை பாதுகாப்பதற்கு மேலதிக இராணுவ ஆயுதங்களை அமெரிக்கா அனுப்பவுள்ளது.

துருப்புகள் மற்றும் ஒப்பந்ததாரர்களின் பாதுகாப்பிற்கு குண்டு வீசும் விமானங்கள் மற்றும் போர் விமானங்கள் அனுப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேட்டோ மற்றும் அமெரிக்க படைகள் கடந்த 20 ஆண்டுகளாக ஆப்கானில் நிலைகொண்டுள்ளன. ஆப்கானின் படையெடுப்புக்கு காரணமான செப்டெம்பர் 11 தாக்குதலின் 20 ஆண்டு நினைவு தினமான எதிர்வரும் செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்க துருப்புகள் ஆப்கானில் இருந்து முழுமையாக வெளியேறும் அறிவிப்பை அந்நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் வெளியிட்டுள்ளார்.

எனினும் ஆப்கானில் வன்முறைகள் அதிகரித்திருக்கும் சூழலிலேயே அமெரிக்க துருப்புகள் அங்கிருந்து வெளியேறவுள்ளன.

சர்வதேச துருப்புகள் மீதான தாக்குதலை நிறுத்தும் ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கும் கடப்பாடு தொடர்ந்து தமக்கு இல்லை என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர். அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் நிர்வாகத்தில் தலிபான்களுடன் கடந்த ஆண்டு செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில் வெளிநாட்டுப் படைகள் மே 1 ஆம் திகதியே வெளியேறுவதாக காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதனை ஒட்டியே தலிபான்கள் வெளிநாட்டு படைகள் மீதான தாக்குதல்களை நிறுத்தியது.

இந்நிலையில் வெளியேறும் 2,500 அமெரிக்க இராணுவப் படையினர் மற்றும் 16,000 சிவில் ஒப்பந்ததாரர்களின் பாதுகாப்பிற்காக நீண்ட தூரம் குண்டு வீசும் ஆறு பி52 விமானங்கள் மற்றும் 12, எப்18 போர் விமானங்கள் நிலைநிறுத்தப்படும் என்று கூட்டுப்படை பணிக்குழுத் தலைவர் மார்க் மில்லி தெரிவித்துள்ளார்.

தலிபான்கள் ஆப்கான் அரசுக்கு எதிராக நாள்தோறும் 80 தொடக்கம் 120 தாக்குதல்களை நடத்தியபோதும் மே 1 ஆம் திகதி வாபஸ் பெறும் காலம் ஆரம்பிக்கப்பட்டது தொடக்கம் அமெரிக்க மற்றும் கூட்டுப்படைகள் மீது எந்த தாக்குதலும் இடம்பெறவில்லை என்று ஜெனரல் மில்லி சுட்டிக்காட்டினார்.

# சீன நிறுவனங்களுக்கு ஐரோப்பாவில் நெருக்கடி




ஐரோப்பாவில் அரசாங்க மனியம் பெறும் வெளிநாட்டு நிறுவனங்களை கையாள்வதை இலக்காகக் கொண்டு ஐரோப்பிய ஒன்றியம் புதிய வரைவு விதிகளை வெளியிட்டுள்ளது. இதில் அமெரிக்க பன்னாட்டு நிறுவனங்களை இலக்கு வைக்கும் அதே நேரம் சீனாவின் பெரிய நிறுவனங்களையும் இலக்கு வைத்துள்ளது.

இந்த சட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்தின் பெரும் வர்த்தகக் கூட்டாளியான சீனா மீதான நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதன் புதிய சமிக்ஞையாக பார்க்கப்படுகிறது. அதே நேரம் புதிய விதிகள் சீனாவை மாத்திரம் இலக்கு வைக்கவில்லை என்றபோதும், சீனாவின் பெரும் நிறுவனங்கள் முதன்மை இலக்காக உள்ளது என்று ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த சட்டத்திற்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 அரசுகள் மற்றும் ஐரோப்பிய பாராளுமன்றம் ஒப்புதல் அளித்தால், அரச மானியங்களில் இருந்து பயனடைவதாக உறுதி செய்யப்படும் வெளிநாட்டு நிறுவனங்களை ஐரோப்பாவில் கையகப்படுத்துவது அல்லது பொது ஒப்பந்தங்களை பெறுவதை தடுக்க அதிகாரம் வழங்கப்படும்.

# பாடசாலையில் சிறுமி சூடு: மூவருக்கு காயம்



அமெரிக்காவின் ஐடஹோ மாநிலத்தில் உள்ள ஒரு பாடசாலையில், சிறுமி ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டு தாக்குதலில் 3 பேர் காயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை ரிக்பி இடைநிலை பாடசாலையில் அந்தச் சம்பவம் நடந்தது. தாக்குதலை நடத்திய சிறுமி 6ஆம் வகுப்பில் படிப்பதாகவும், அவருக்கு 11 அல்லது 12 வயது இருக்கும் என்றும் கூறப்பட்டது.

தனது பையிலிருந்து துப்பாக்கியை எடுத்த அந்தச் சிறுமி, பாடசாலைக்கு வெளியிலும் உள்ளேயும் பல முறை சுட்டதாக பொலிஸ் அதிகாரி ஸ்டீவ் ஆண்டர்சன் குறிப்பிட்டார்.

தாக்குதலின்போது, பாடசாலை ஆசிரியர் ஒருவர் சிறுமியிடமிருந்து துப்பாக்கியை மீட்டு, அதிகாரிகள் வரும் வரை அவரைத் தடுத்து வைத்திருந்ததாக ஆண்டர்சன் தெரிவித்தார்.

தாக்குதல் குறித்து மத்திய புலனாய்வுப் பிரிவு விசாரணை நடத்தி வருகிறது.

தாக்குதலில் 2 மாணவர்களும் ஓர் ஊழியரும் காயமுற்றனர். ஆனால், அவர்களின் உயிருக்கு ஆபத்தில்லை.

அமெரிக்காவில் தற்கொலை உட்பட கடந்த ஆண்டு துப்பாக்கிச் சூட்டால் மரணமடைந்தோர் எண்ணிக்கை 43,000க்கும் அதிகம்.

# போயிங் விமானங்களை வாங்க இந்தியா ஒப்பந்தம்




பொயிங் நிறுவனத்திடம் இருந்து இந்தியாவுக்கு ஆறு பீ81 நீர்மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு விமானங்களை விற்பதற்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் ஒப்புதல் அளித்துள்ளது. இதன் 30 வீதமான பாகங்கள் இந்தியாவில் தயாரிக்கப்படவுள்ளன.

இந்த விற்பனை போயிங் நிறுவனத்திற்கு 2.42 பில்லியன் டொலர் பெறுமதி கொண்டது என்றபோதும் எத்தனை ஜெட்கள் மற்றும் ஆயுத அமைப்புகள் கோரப்படுகிறது என்பதை பொறுத்து இறுதி விலை குறையலாம் என்று கூறப்படுகிறது.

இந்தியா ஏற்கனவே கடல் சார்ந்து 12 விமானங்களை இயக்கி வருகிறது. இதில் 2009 இல் பொயிங் உடன் நேரடி வர்த்தகத்தில் எட்டு விமானங்களும் 2016 இல் மேலும் நான்கு விமானங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

# முகக்கவசத்தை சரியாக அணியாதோருக்கு சிறை



பிலிப்பைன்ஸில் முகக்கவசத்தைச் சரிவர அணியாதோரைக் கைது செய்யும்படி அந்நாட்டு ஜனாதிபதி ரொட்ரிகோ டுட்டார்ட்டே உத்தரவிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்பதைத் தடுக்க அத்தகைய கடும் நடவடிக்கை அவசியம் என்று அவர் கூறினார். பிலிப்பைன்ஸில் புதிதாகச் சுமார் 6,600 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. சுமார் 190 பேர் உயிரிழந்துள்ளனர்.

மார்ச் மாத இறுதியிலிருந்து வைரஸ் தொற்றுக்கு எதிரான விதிகளை மீறிய ஆயிரக்கணக்கானோர் ஏற்கனவே தண்டிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அபராதம் அல்லது சமூக சேவை தண்டனையாக விதிக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவில் சிக்கிய அவுஸ்திரேலிய நாட்டவர்களை அழைத்து வர திட்டம்



அவுஸ்திரேலிய அரசாங்கம், இந்தியாவில் சிக்கியிருக்கும் தனது குடிமக்களைத் தாய்நாட்டுக்கு அழைத்து வரத் திட்டமிட்டுள்ளது. அதற்கான விமானச் சேவைகள் இம்மாதம் 15ஆம் திகதி மீண்டும் ஆரம்பிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

குடிமக்கள் உட்பட இந்தியாவிலிருந்து வரும் அனைவரும் அவுஸ்திரேலியாவுக்குள் நுழையத் தடைவிதிப்பதாக அவுஸ்திரேலியப் பிரதமர் ஸ்கொட் மொரிசன் அண்மையில் கூறியிருந்தார்.

அதை மீறி இந்தியாவில் உள்ள அவுஸ்திரேலியக் குடிமக்கள் நாடு திரும்ப முற்பட்டால், அது குற்றமாகக் கருதப்படும் என்றார் அவர். மோரிசன் விடுத்த இந்த அறிவிப்புக்குப் பெரிய அளவில் எதிர்ப்புகள் எழுந்தன. இதனை அடுத்து அவர் இந்த நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டார்.

சுமார் 9,000 அவுஸ்திரேலியக் குடிமக்கள் இந்தியாவில் சிக்கியுள்ளனர்.

இந்தியாவில் தினசரி கொரோனா தொற்று 300,000 ஐ தாண்டி பதிவாகி வருவதோடு மருத்துவமனைகளில் ஒட்சிசன் தட்டுப்பாட்டால் உயிரிழப்பவர்களும் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் இந்தியாவுக்கான பயணத் தடையை மே 15 ஆம் திகதி தளர்த்த எதிர்பார்ப்பதாக மொரிசன் தெரிவித்துள்ளார்.

எனினும் நிர்க்கதியாகி இருக்கும் அவுஸ்திரேலியர்கள் திரும்புவதற்காக இந்தியாவில் இருந்து வர்த்தக விமானங்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பில் முடிவு எடுப்பதற்கு தமது அரசு அடுத்த வாரம் வரை காத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பிரேசிலில் பொலிஸ் தேடுதலில் துப்பாக்கிச் சூடு: 25 பேர் பலி




பிரேசிலில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் உட்பட குறைந்தது 25 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பொலிஸ் சோதனை நடவடிக்கையின்போது நகரின் பவேலா என்ற பகுதியில் கடந்த வியாழக்கிழமை இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

போதைக் கடத்தல்காரர்கள் சிறுவர்களை தமது கூட்டத்தில் சேர்த்து வருவதாக கிடைத்த தகவலை அடுத்தே பொலிஸார் அங்கு விரைந்துள்ளனர்.

இதன்போது மெட்ரோ ரயிலில் சென்றுகொண்டிருந்த இரு பயணிகளுக்கும் துப்பாக்கி காயம் ஏற்பட்டபோதும் அவர்கள் உயர் தப்பியுள்ளனர்.

ரியோவில் இடம்பெற்ற பொலிஸ் சோதனையின் போது அதிகம் பேர் கொல்லப்பட்ட சம்பவமாக இது உள்ளது என்று பொலிஸ் தலைவர் ரொனால்டோ ஒலிவெய்ரா ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். இதில் ஒரு பொலிஸ் அதிகாரி கொல்லப்பட்டது உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பகுதிக்கு பொலிஸார் நுழைந்ததை அடுத்து சந்தேக நபர்கள் கூரைகள் மேலால் தப்பி ஒடும் காட்சியை தொலைக்காட்சிகள் ஒளிபரப்பியுள்ளன. இதில் இறந்தவர்களில் ஆதிக்கம் செலுத்திய போதைப்பொருள் கடத்தல் கும்பலின் தலைவர்களும் இருப்பதாக பொலிஸ் தரப்பில் கூறப்படுகிறது. 10 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ரியோ டி ஜெனிரோ பிரேசிலில் வன்முறை மிக்க மாநிலமாக இருப்பதோடு இங்கு பெரும் பகுதிகள் போதைக் கடத்தலுடன் தொடர்புபட்ட குற்ற கும்பல்களின் கட்டுப்பாட்டில் உள்ளது.

புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



# யார் ஓவியன் ?

கடல் நீரில் நீலமெடுத்து
தாவரத்தில் பச்சைபிரித்து
பசும் பாலில் வெள்ளை பெற்று
செங்குருதியில் சிவப்பு வடித்து
அதனோடு பல நிறங்கலந்து
வானவில்லை வரைந்த அந்த
வல்ல ஓவியன்யார்?

நீர் நிலையில் வாலசைத்து
நிம்மதியாய் விளையாடி
கண்களுக்கு விருந்தளிக்கும்
மீனினவர்க்கத்திற்கு
பல்கலர்பூசிய
பார் போற்றும் கலைஞன்யார்?

காற்றினிலே தவழ்ந்து
தாவரங்களிலே மிதந்து
பல் மணத்தைப் பரப்பி
இன்பத்தால்மனம் நிரப்பும்
மலர்களுக்கு நிறம் செப்பிய
அந்தமரபுச்சிற்பியார்?

நச்சுத்திரவகத்தை
தன்னகத் தேவைத்திருந்து
படையையும் நடுங்கவைக்கும்
கொடியபாம்பு கட்கு
பல்லோவியம் வரைந்த அந்த
பயங்கரக்கலைஞன்யார்?

விண்காற்றில் சிறகடித்து
பல் குரலில் பாட்டிசைத்து
காதுக்குரீங்காரமாய்
கண்ணுக்குவண்ணஅழகாய்
பறந்துதிரியும்அந்து
பறவைகளுக்குநிறம்கீறிய
உத்தமக்கலைஞன்யார்?

வனாந்தரத்தில்வசீகரமாய்
வீடுகளில்செல்லங்களாய்
இடம்பிடித்துவாழ்ந்துவரும்
மிருகங்களின்உடல்களில்
பல்நிறக்கோடுகள்கீறிய
பாரசீகத்தைவென்ற
பயமறியாக்கலைஞன்யார்?

பச்சையம்மட்டுமல்ல
பல்நிறமும்உள்வாங்கி
உணவுமருந்துகளோடு
மானுடர்க்குநிழல்வழங்கும்
ஆறுதல்அமைவிடம்
மரம்செடிகொடிகளுக்கு
பல்நிறம்அப்பிய
மரபுக்கலைஞன்யார்?

உலகெல்லாம்பரவிநிற்கும்
ஊர்வனஉயிரினங்கள்
ஒவ்வொன்றும்தனிநிறமாய்
உலகோர்க்குவெளிக்கொணர்ந்த
அந்தஉலகக்கலைஞனை
உங்களுக்குத்தெரியுமா?

உலகைப்படைத்து
அச்சொட்டாய்அங்கம்வைத்து
உயிரினத்தைஉருவாக்கி
நியமநிறம்அதில்தீட்டி
அவனியிலேவாழவிட்ட
அந்தஇறைவல்லவனே
எல்லையில்லாஓவியனே.

எஸ். தஸ்தகீர்
கல்முனை

# எனக்கானவள் நீயோ...



அசைகின்றமரக்கிளையில்
ஆனந்தமாய்இருகுயில்கள்
இனிமையைஉணர்ந்தபடி
உயிரினில்கலவைசெய்து
இதயத்தைபகிர்ந்தனவே
வாழ்க்கையில்இணைந்துவாழ
வழிகள்தேடிஅலைந்தனவே

பூனைமுத்தம்கன்னத்திலே
அணைக்காமல்கொடுத்ததேனோ
ஆறுதல்வார்த்தைகளைஎன்
ஆழநெஞ்சில்பதித்ததேனோ
ஒடிந்துபோனஎந்தன்வாழ்வை
ஒளிகொடுத்துமீட்டதேனோ

காதலின்செய்திதனை
காதுகளில்தெளித்தவளே
காயம்கொண்டநெஞ்சினிலே
பாசத்தால்அபிஷேகம்செய்தவளே
இழந்தவைகள்எண்ணிநானும்
மனமுடைந்துபோகையிலே
என்னருகில்கூடருந்துதிட
வார்த்தைஎனக்களித்து
தேற்றிவிட்டாய்பெண்ணேநீயும்

அமைதியின்காதல்வாழ்க்கை
இன்றுஅலங்கோலம்ஆவதற்கு
முடியாமைகாரணமே
முடிந்திருந்தால்கூடிவந்திருக்கும்
காதல்திருமணமாய்
மாற்றம்கொண்டிருக்கும்

இந்தபாவியிலேகொண்டகாதல்
ஏன்உனக்குபாரமாய்போனதடி
பாதியில்போவதற்கா
பாசமதைகாட்டிநின்றாய்
என்உயிரைமீட்டுவிடஏனோ
இந்தவழிதேர்ந்தெடுத்தாய்

புரியாமல்விழிக்கிறேன்
உனைமறவாமல்தவிக்கிறேன்...

வன்னித்தமிழ் மறவன்
கிளிநொச்சி

# போலிகள்



கருணைகள்போலதொரு
மாயமழையில்நனைவதுமில்லை
அக்கறைகள்போலதொருபோலிவிம்பத்தில்
முகம்தொலைப்பதுமில்லை
அன்பென்றகானல்நதியில்
சுயமிழப்பதுமில்லை
மனிதமனமெனும்மர்மதேசத்தில்
விடைகண்டிடமுனைவதுமில்லை

அப்போதுகொடிகட்டிப்பபறந்தஎன்
நம்பிக்கைககளைதான்
இப்போதுஅரைக்கம்பத்தில்
பறக்கவிட்டிருக்கிறேன்

முன்னொருகாலத்தில்
முற்றுமுழுதாகதுடைத்துமுகத்தில்
எறியப்பட்டஎன்நேசங்களைத்தான்
இப்போதுகையிருப்பில்
வைத்துக்கொள்கிறேன்
இப்போதுபரிசளிக்கப்படுகின்ற
பாசாங்குகளிலிருந்துஎன்னை
தற்காத்துக்கொள்ளும்கவசங்களாக

அன்பினைவாரிக்கொடுப்பதில்
ஆட்சேபனைகளுமில்லை
அன்பினைபெற்றுக்கொள்வதிலும்
திளைப்பதிலும்பெரும்
சுவாரஸ்யங்களெதுவுமில்லை
விரல்நுனிபடும்போதே
நீர்க்குமிழிபோல்சட்டென்று
உடைந்துவிடுவதால்.

சிபானா அஸீம்
மருதமுனை

# ஆச்சியம்மா



கடந்த பாதைகளின்வழித்தடங்கள்
ஆழமாய்பதிந்த
நெற்றிக்கோடுகள்.
பருவங்கள்மாறிமாறிப்
பார்த்தழுத்தவரண்டபூமி ;அதில்
வற்றிப்போனஇருகுளங்கள்.
குளத்தில்அவ்வப்போது
ஊற்றெடுக்கும்
சூடானஉவர்நீர்.

ஆச்சியம்மாஅவவேதான்,
ஆயுளைப்பிடித்திருந்தார்.
கோச்சேறிப்போனமகன்
கடைசிக்குவருவான்என்றால்,
போனமகன்கடல்கடந்து
பாலைநிலம்தங்கிவிட
பாவம்இவபார்த்திருக்கா,
புள்ளமுகம்கொஞ்சிடத்தான்.

சோத்துக்குப்பஞ்சமில்ல,
சோறுதண்ணிஇறங்குதில்ல.
காத்தாறக்கால்நீட்ட
கத்தரிக்காதோட்டம்அங்க
இருந்தாலும்ஏங்குகிறா
எம்மவன்வருவானா?
என்னுசுருநின்டுடுமா?
பாவம்அவன்சோழியில
சோறுதண்ணிகுடிச்சானா?
ஊட்டாரநினச்சி; புள்ள
உள்ளாரக்கத்துறானா?
ஏங்கியேங்கிஆச்சிம்மா
பெருமூச்சுவிடுகின்றா...

ஆச்சியவமூச்சிரைத்து
அக்கம்பக்கம்போனாலும்
அவநினப்புஎல்லாமே
அவன்நினப்பாநிறைந்திருக்க
நடபாதவழிதவறி
நாலுஊர்கடந்துபோயி
நடுவீதிநின்றவதான்
புள்ளயக்கண்டதாக
புலம்பியும்திரிஞ்சவதான்.

உழைக்கனும்னுபோனமகன்
ஊர்திரும்பவரும்சேதி
மழையோடும்இடியோடும்
ஆச்சியும்மாகாதுகேட்க
இடிவிழுந்தசுவர்போல
படுக்கையிலேவிழுந்தவதான்,
படுக்கையிலேவாதமாயும்
பரிதாபம்ஆகிவிட்டா.

கப்பலிலேபோனமகன்
கப்பலிலேதிரும்பிவர,
கட்டியெடுத்துஅழுது
முழுச்சோகம்சொல்லிஅழ
பெட்டிக்குள்அடங்கிப்போன
சிங்கக்குட்டிபடுத்திருக்கான்.
ஆச்சியம்மாமூச்சிழுத்து
முழுமூச்சாய்ஆகிவிட்டா!

செ.இஸ்ஸத்,
ஏறாவூர்.



# வழிகாட்டும் ஒளிவிளக்கு ரமழான்

பாவம்நீக்கிமானுடத்தின்
பாவக்கறையகற்றி
பவனிச்செல்லுகிறது
புனிதறமழான்!

பசியறியாது
பக்கத்தார்நிலையறியாது
வறுமையறியாது
வாழ்ந்தமனிதனுக்கு
திசைகாட்டும்கப்பலாய்
திகழ்கிறதுபுனிதரமழான்

ஈமானியதேசத்தின்
இருட்திரைகிழித்து
இறங்கிவிட்டேன்நோன்போடு
பாவக்கறையகற்றி
பக்குவாய்நாம்வாழ
படைத்தஇறைவனால்
பகிர்ந்தளித்தரமழானே!

பசித்திருந்துவிழித்திருந்து
பலகோடிநன்மைசெய்தோம்
தௌபாமீட்சிகைநீட்டினோம்
தயங்கிடாதுகேட்கின்றோம்
சொர்க்கம்தரும்சுந்தர
ரமழானே

சுவர்க்கம்திறக்கப்பட்டு
நரகம்திரையிடப்படுகிறது
இத்தனையையும்நமக்கு
இறைதரும்சன்மானமே
எத்தனைஇரவுகள்வந்தாலும்
அத்தனைக்கும்முத்தாய்ப்பாய்
ஆண்டவன்அருளிய
புனிதலைலதுல்கத்ரே
பொறுமையுடன்கேட்கின்றேன்
பொறுத்தருள்வாய்எம்பாவம்.

தோப்பூர் எஸ்.சிராஜுதீன்
நற்பிட்டிமுனை
கல்முனை

# வெம்மை நிலத்தில் வியர்வை மழை



ஓடும்மேகம்
ஒருநிமிடம்ஒன்றுகூடாதோ
ஒப்பாரிச்சத்தம்எங்கும்

நெற்றியில்கைவைத்து
நேர்த்திவைத்துக்காத்திருக்கின்றன
நெற்குருவிகள்

பசுமைவயல்வெளிகள்
பாதவெடிப்புகள்போல
பரந்துகிடக்கின்றன

வான்மழைவரவில்லையென்று
தேன்மழைபொழியாமல்மலர்கள்
வெம்மைநிலத்தில்வியர்வைமழை
பொழிகின்றன

காய்ந்துபோனஉதடுகளால்
கரையமுடியாமல்காக்கைகுருவிகள்
கண்ணீர்விடுகின்றன

நீரைஉறிஞ்சமுடியாமல்
வேரைஉறிஞ்சும்நிலங்களின்
வேதனையை
மண்புழுக்கள்சொல்லிமன்றாடுகின்றன

பொங்கிவந்தநீர்நிலைகள்
வாயைப்
பொத்திக்கொண்டிருக்கின்றன

கொத்திக்கொத்தி
அலகு
கோணலாகிப்போனமரங்கொத்தி

ஒட்டியவயிறோடு
உணவுதேடி
ஓய்ந்துபோனகால்நடைகள்

பட்டுப்போனமரங்களில்
ஒட்டுப்போட்டதுணிகளாய்
பறவைகளின்எச்சங்கள்

காட்சிக்குவரும்
கறுப்புநிறவானவில்

விதவைக்கோலத்தில்
விம்மிவிம்மிஅழும்இயற்கை

ஆறுதல்சொல்லக்கூட
அசைவற்றுஇருக்கும்
ஆலமரம்

கானல்நீரைப்பருகச்சென்று
காரில்மோதும்நாய்
காபர்ட்வீதிகளில்ஒட்டிக்கொள்ளும்
காக்கையின்சொண்டு

நாகரிகஉலகம்கண்ட
வெற்றி
நாம்இருப்பிடம்இல்லாமல்தவிப்பதென
நத்தைகளும்ஆமைகளும்
பேசிக்கொண்டிருக்கின்றன

பெரியமடு நிஹ்ரி

# ஐசிசி இன் மாதத்தின் சிறந்த வீரர் விருதுக்கு பாகிஸ்தான் வீரர்கள் பரிந்துரை

ஏப்ரல் மாதத்துக்கான ஐசிசி இன் சிறந்த வீரர் விருதுக்காக பாகிஸ்தானின் பாபர் அசாம், பகர் ஸமான் ஆகியோரின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளன.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள், ரி 20 தொடர்களில் சிறப்பாகச் செயல்பட்டதன் அடிப்படையில் இந்த விருதுக்கு அவர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐசிசி) சார்பில் இந்த ஆண்டு முதல், ஒவ்வொரு மாதமும் சிறப்பாக செயல்படும் வீர வீராங்கனைக்கு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது.

இதன்படி, கடந்த ஏப்ரல் மாதம் சிறப்பாக செயல்பட்ட மூன்று வீரர்களுக்கான பரிந்துரை பட்டியலை ஐசிசி வெளியிட்டது.

இதன்படி, கடந்த மாதம் நடைபெற்ற தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள், ரி 20 தொடர்களில் சிறப்பாகச் செயல்பட்ட பாகிஸ்தான் அணித் தலைவர் பாபர் அசாம் மற்றும் பகர் ஸமான் ஆகிய இருவரும் மாதத்தின் சிறந்த வீரர் விருதுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.





அதில் ஒருநாள் தொடரின் கடைசி போட்டியில் பாபர் அசாம் 94 ஓட்டங்கள் விளாசி அணியின் வெற்றிக்கு வழி வகுத்தார். அத்துடன், ரி 20 தொடரின் 3ஆவது போட்டியிலும் 59 பந்துகளில் 122 ஓட்டங்கள் எடுத்து அணிக்கு வெற்றியை தேடிக்கொடுத்தார்.

இதனிடையே, கடந்த மாதம் ஐசிசி இன் ஒருநாள் தரவரிசையில் வரலாற்றில் முதல்முறையாக 865 புள்ளிகளுடன் முதலிடத்தையும் பாபர் அசாம் பெற்றுக்கொண்டார்.

இதேநேரம், சக வீரரான பகர் ஸமானும் தென்னாபிரிக்காவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இரண்டு சதங்கள் விளாசியிருந்தார். அதில் 2ஆவது போட்டியில் 193 ஓட்டங்களை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவர்கள் தவிர, நேபாள கிரிக்கெட் அணியின் குஷால் புர்டெலும் அந்த மாதத்தின் சிறந்த வீரர் விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளார். நெதர்லாந்து, மலேசியா அணிகளுடனான முத்தரப்பு ஒருநாள் தொடரில் அவர் 4 அரைச் சதங்கள் உட்பட மொத்தமாக 278 ஓட்டங்களை விளாசியிருந்தார்.

இதுஇவ்வாறிருக்க, சிறந்த வீராங்கனைகள் பட்டியலில் அவுஸ்திரேலிய அணியின் வீராங்கனைகளான அலிசா ஹீலி, மெகன் ஸ்சட், நியூசிலாந்து வீராங்கனை லீச் காஸ்பெரெக் ஆகிய மூவரும் இடம்பெற்றுள்ளனர்.

ஏப்ரல் மாதத்துக்கான சிறந்த வீர வீராங்கனைக்கான விருது வெல்பவர் யார் என்பதை முன்னாள் வீரர்கள், பத்திரிகையாளர்கள், ஒளிபரப்பு நிறுவனங்கள் மற்றும் ரசிகர்கள் உள்ளிட்டோர் தேர்வு செய்வார்கள்.

முன்னதாக, ஜனவரி முதல் மார்ச் மாதம் வரையிலான ஐசிசி இன் மாதத்தின் சிறந்த வீரருக்கான விருதுகளை இந்தியாவின் ரிஷப் பாண்ட், ரவிச்சந்திரன் அஷ்வின் மற்றும் புவனேஸ்வர் குமார் ஆகிய வீரர்கள் தட்டிச்சென்றமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.



# விக்ரோறியன் விளையாட்டுக் கழக அணி 5 விக்கெட்டுகளால் வெற்றி

*யாழ்.விளையாட்டு நிருபர்*

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும், விளையாட்டு கழகமும் இணைந்து யாழ் மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் பதிவு செய்யப்பட்ட சகல அணிகளையும் உள்ளடக்கி நாடாத்தப்படும் 2021 ஆம் ஆண்டுக்கான 28 ஆவது கிரிக்கெட் சுற்றுபோட்டித் தொடரின் ஆட்டம் ஒன்றில் விக்ரோறியன் விளையாட்டுக் கழக அணி 5 விக்கெட்டினால் வெற்றி பெற்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் வின்ஸ் விளையாட்டு கழக அணியை எதிர்த்து விக்ரோறியன்ஸ் விளையாட்டு கழக அணி மோதிக் கொண்டன.முதலில் துடுப்பெடுத்து விளையாடி வின்ஸ் விளையாட்டுக்கழகஅணி 28.4ஓவர்களில் சகல இலக்குகளை இழந்து 162 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது. இதில் எட்வின் 29 ஓட்டங்களையும், ஸ்ரிபன்21ஓட்டங்களையும்,

தமது அணி சார்பாக பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில் விக்ரோறியன்ஸ்விளையாட்டுக் கழக அணி சார்பில் செந்தூரன், சிவகரன் ஆகியோர் தலா

2விக்கெட்டு க்களையும், வீழ்த்தினர்.பதிலுக்கு 163 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்து விளையாடிய விக்ரோறியன் விளையாட்டுக் கழக அணியினர் 22.4 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 163 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அதிகபட்சமாக கிரிசாந் ஆட்டம் இழக்காமல் 72 ஓட்டங்களையும், பிரசாந் 71ஓட்டங்களையும், தமது அணி சார்பாக, பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் வின்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் வின்சனெட், மைக்கல் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், வீழ்த்தினர்.

# பதுர் பூம் போய்ஸ் அணி சம்பியன்







*ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்*

அட்டாளைச்சேனை அல் ஆரியன் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற மெக்கா நைட் மின்னொளிக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அக்கரைப்பற்று பதுர் பூம் போய்ஸ் விளையாட்டுக்கழக அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

05 ஓவர் 7 பேர் மட்டுப்படுத்தப்பட்ட இச்சுற்றுப் போட்டியில் அம்பாறை மாவட்டத்திலுள்ள 60 முன்னணிக் கழகங்கள் பங்கு கொண்டன.இதன் இறுதிப்போட்டி அட்டாளைச்சேனை கடற்கரை திறந்த மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்ற பெற்ற அட்டாளைச்சேனை நியூ ஸ்டார் விளையாட்டுக் கழக அணி முதலில் துடுப்பெடுத்தாடி 5 ஓவர் நிறைவில் நான்கு விக்கட் இழப்பிற்கு 27 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பதுர் பூம் போய்ஸ் அணியினர் 4.1ஓவர் நிறைவில் 4 விக்கட் இழந்து 28 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கட்களினால் இப்போட்டியில் வெற்றி பெற்றனர்.


அல் ஆரியன் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் முகம்மட் பஸ்மீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.நஸீர் பிரதம அதிதியாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரின் கிழக்கு மாகாண இணைப்பாளர் றிஷாட் ஏ.காதர் கௌரவ அதிதியாகவும் கலந்து கொண்டு வெற்றிக் கிண்ணங்களை இதன்போது வழங்கி வைத்தனர்.

வெற்றி பெற்ற பதுர் பூம் போய்ஸ் அணிக்கு வெற்றிக்கிண்ணத்துடன் 30ஆயிரம் பணப்பரிசும், இரண்டாம் இடம் பெற்ற நியூ ஸ்டார் அணிக்கு கிண்ணத்துடன் 20ஆயிரம் ரூபா பணப்பரிசும் வழங்கி வைக்கப்பட்டன. இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றிய 60 முன்னணிக் கழகங்களில் இருந்து அரை இறுதிப் போட்டிக்கு அட்டாளைச்சேனை பைனா,அட்டாளைச்சேனை நியூ ஸ்டார்,அட்டாளைச்சேனை அல் ஆரியன்,அக்கரைப்பற்று பதுர் பூம் போய்ஸ் விளையாட்டுக் கழகங்கள் தெரிவு செய்யப்பட்டன.

## சம்பியன்ஸ் லீக் கால்பந்து:

# மான்செஸ்டர் சிட்டி–செல்சி அணிகள் இறுதியில் பலப்பரீட்சை

2012ம் ஆண்டு சம்பியனான செல்சி அணி அதன் பிறகு இறுதி போட்டிக்குள் அடியெடுத்து வைப்பது இதுவே முதல்முறையாகும்.





சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியின் அரை இறுதியில் ரியல் மாட்ரிட்டை வீழ்த்தி செல்சி அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது. 32 முன்னணி கிளப் அணிகள் பங்கேற்ற ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டி இறுதி கட்டத்தை எட்டி விட்டது. இதில் இங்கிலாந்தில் உள்ள புல்ஹாம் நகரில் நேற்று அதிகாலை நடந்த அரைஇறுதியின் 2வது சுற்று ஆட்டத்தில் செல்சி அணி (இங்கிலாந்து), 13 முறை சம்பியனான ரியல் மாட்ரிட்டை (ஸ்பெயின்) சந்தித்தது.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் பந்து அதிக நேரம் (68 சதவீதம்) ரியல் மாட்ரிட் அணியின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் செல்சி அணியினரின் கையே பெரும்பாலும் ஓங்கி இருந்தது. 28வது நிமிடத்தில் செல்சி அணி முதல் கோல் அடித்தது. அந்த அணி வீரர் காய் ஹவெர்ட்ஸ் கோல் எல்லையை நோக்கி அடித்த பந்து கோல் கம்பத்தில் பட்டு திரும்பியது. அதனை சக வீரர் டிமோ வெர்னெர் தலையால் முட்டி கோல் வளையத்துக்குள் திணித்தார்.

பதிலடி கொடுக்க, ரியல் மாட்ரிட் அணி வீரர் கரிம் பென்ஜிமா கோலை நோக்கி அடித்த பந்தை செல்சி அணியின் கோல்காப்பளர் மென்டி அருமையாக தடுத்து நிறுத்தினார். முதல் பாதி ஆட்டத்தில் செல்சி அணி 10 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தது.

2வது பாதி ஆட்டத்திலும் செல்சி அணியினரின் சிறப்பான ஆட்டத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் ரியல் மாட்ரிட் வீரர்கள் தடுமாற்றம் கண்டனர். 85வது நிமிடத்தில் செல்சி அணி 2வது கோல் அடித்தது. அந்த அணி வீரர் மாசன் மவுன்ட் இந்த கோலை அடித்தார். வலுவான ரியல் மாட்ரிட் அணி கடைசி வரை போராடியும் பதில் கோல் எதுவும் திருப்ப முடியவில்லை.

முடிவில் செல்சி அணி 20 என்ற கோல் கணக்கில் ரியல் மாட்ரிட்டை வீழ்த்தியது. இவ்விரு அணிகள் இடையிலான அரைஇறுதியின் முதலாவது சுற்று 11 என்ற கோல் கணக்கில் 'டிரா'வில் முடிந்து இருந்தது. இதனால் ஒட்டுமொத்தத்தில் செல்சி அணி 31 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

2012ம் ஆண்டு சம்பியனான செல்சி அணி அதன் பிறகு இறுதிப்போட்டிக்குள் அடியெடுத்து வைப்பது இதுவே முதல்முறையாகும். வெற்றிக்கு பிறகு செல்சி அணியின் பயிற்சியாளர் தாமஸ் துசெல் கருத்து தெரிவிக்கையில், 'இந்த போட்டியில் எங்கள் அணி மிகச் சிறப்பாக செயல்பட்டது. இது சிறப்பான சாதனையாகும். இந்த வெற்றிக்கு எங்கள் அணி தகுதி படைத்தது' என்றார்.

# டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கேற்கும் வாய்ப்பினை பெற்றுள்ள மற்றுமொரு இலங்கையர்



டோக்கியோ ஒலிம்பிக் போட்டியின் ஜிம்னாஸ்டிக்ஸ் போட்டிக்கு இலங்கை சார்பில் மில்கா கெஹானி கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் இம்முறை ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட இரண்டாவது இலங்கையராக இவர் பதிவாகியுள்ளார்.

இதற்கு முன்னர் குதிரை சவாரி போட்டியில் கலந்து கொள்வதற்காக இலங்கை சார்பில் மெட்டில்டா கார்ல்சன் தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிவகுமார், தனபோகநாயகன் நினைவுக்கிண்ண கிரிக்கெட் சுற்றுத்தொடரை வென்றது நியூ பாரதி

முல்லைத்தீவு முள்ளியவளை, சலஞ்சேஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட சிவகுமார் மற்றும் தனபோக நாயகன் நினைவுக் கிண்ணக் கிரிக்கட் சுற்றுத்தொடரில், விஸ்வமடு நியூ பாரதி விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டி கிண்ணத்தினைச் சுவீகரித்துக்கொண்டது.

குறிப்பாக 30அணிகள் பங்குகொண்ட இக் கிரிக்கட் சுற்றுத் தொடரின் இறுதிப்போட்டிக்கு விஸ்வமடு நியூ பாரதி விளையாட்டுக்கழகமும், கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழகமும் தெரிவாகியிருந்தன.

இந் நிலையில் 05.05.2021ம் திகதி கேப்பாப்பிலவு, கிருஷ்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப்போட்டியில் கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழகத்தினர் நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்திருந்தனர்.

அதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழக அணியினர், 12ஓவர்களை கொண்ட போட்டியில், 07ஓவர்ளை மாத்திரம் எதிர்கொண்டு 34ஓட்டங்களைப் பெற்று சகல விக்கட்டுக்ளையும் இழந்தனர். துடுப்பாட்டத்தில் கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழகம் சார்பில் மிராஜ் 08ஓட்டங்களையும், திலக் 06ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் நியூபாரதி விளையாட்டுக்கழகம் சார்பில் சோபன் 03 விக்கட்டுக்ளையும், சுதன், மிது, குணாளன், கின்சிலன் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கட்டுக்ளையும் வீழ்த்தியிருந்தனர்.

இந் நிலையில் 35 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பெடுத்தாடிய விஸ்வமடு நியூ பாரதி விளையாட்டுக்கழகத்தினர், நான்கு ஓவர்ளை மாத்திரம் எதிர்கொண்டு பத்து விக்கட்டுக்களால் வெற்றிபெற்றனர்.

துடுப்பாட்டத்தில் நியூபாரதி விளையாட்டுக்கழகம் சார்பில் சதீஸ் 15ஓட்டங்களையும், சுதன் 13ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். அதேவேளை இப்போட்டியில் மூன்று விக்கட்டுக்ளை வீழ்த்திய நியூபாரதி விளையாட்டுக்கழக வீரர் சோபன் இப்போட்டியின் ஆட்டநாயகனாகத் தேர்வுசெய்யப்பட்டார்.

அந்தவகையில் இப்போட்டியில் வெற்றிபெற்ற நியூபாரதி விளையாட்டுக்கழகத்திற்கு சிவகுமார், தனபோகநாயகன் நினைவுக்கிண்ணமும் 30,000`ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டதுடன், கள்ளப்பாடு உதயம் விளையாட்டுக்கழகத்திற்கு இரண்டாம் நிலைக்குரிய கிண்ணமும் 20,000ரூபா பணப்பரிசும் வழங்கிவைக்கப்பட்டது.

மேலும் இந் நிகழ்வில் விருந்தினர்களாக முன்னாள் வடமாகண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், கரைதுறைப்பற்று பிரதேசசபை தவிசாளர் க.விஜிந்தன், கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்களான சி.லோகேஸ்வரன், இ.ஜெகதீசன், சர்வோதயம் நிறுவனத்தின் பணிப்பாளர், மற்றும் முள்ளியவளை கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிவகுமார், தனபோகநாயகன் ஆகியோரின் பெற்றோர்கள் உறவினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பொத்துவில் கோல்ட் ஸ்டார் இளைஞர் கழகம் உதைபந்து சம்பியன்

*அட்டாளைச்சேனை மத்திய நிருபர்*



பொத்துவில் கோல்ட் ஸ்டார் இளைஞர் கழகத்திற்கும், ரை ஸ்டார் இளைஞர் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற கால்பந்துப் போட்டியில் 1:0 என்ற அடிப்படையில் பொத்துவில் கோல்ட் ஸ்டார் இளைஞர் கழகம் வெற்றியீட்டியது.

பொத்துவில் பிரதேச இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் கே.ஷமீர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 33வது தேசிய விளையாட்டு விழாவையொட்டி, ஏற்பாடு செய்த இப்போட்டி பொத்துவில் பசறிச்சேனை விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

பொத்துவில் பிரதேச இளைஞர் கழகங்கள் பங்குபற்றிய இச்சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிக்கு பொத்துவில் கோல்ட் ஸ்டார் இளைஞர் கழகமும், பொத்துவில் ரை ஸ்டார் இளைஞர் கழகமும் தெரிவு செய்யப்பட்டன.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியின் ஆரம்பத்தில் கோல்ட் ஸ்டார் இளைஞர் கழகம் ரை ஸ்டார் இளைஞர் கழகத்திற்கெதிராக ஒரு கோளினைப் புகுத்தி வெற்றியீட்டியது. இதன் மூலம் கோல்ட் ஸ்டார் கழகம் மாவட்ட மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டியின் நடுவர்களாக என்.ஏ.அப்ரின், பாடசாலை விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள் ஏ.எம்.எம்.சஹ்ரின், எம்.எஸ்.பர்ஸான். எம்.ஜே.பெமி அஹமட் ஆகியோர் பணியாற்றினர். பொத்துவில் பிரதேச இளைஞர் கழகங்களின் சம்மேளனத் தலைவர் எம்.ஏ.எம்.நௌபல், சம்மேளன உறுப்பினர்கள் என அதிகமானோர் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மே மாதம் 8ம் திகதி சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.